நான் அதிகமான நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இப்போதிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களின் பணியைப் பற்றி உங்களுக்குத் தெரியும். நீங்களும் சட்டமன்ற உறுப்பினர். காலையில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து வருவாரேயானால், சட்டமன்றக் கூட்டம் இல்லாத நாட்களில், அவர் ஊரில் இருப்பாரேயானால், காலையில் எழுந்தவுடன் 4 பெரிய காரியத்திற்குச் செல்ல வேண்டும், தொகுதியில் நடைபெறுகின்ற 4, 5 நிகழ்ச்சிகள், அதேபோல் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தால், மாவட்டம் முழுவதும் செல்கின்ற பணி இருக்கிறது. அதை முடித்துவிட்டு கட்சிக்காரர்களைப் பார்க்க வேண்டும், அதன்பின் திருமணங்களுக்குச் செல்ல வேண்டும். அதன் பின் தொகுதி மக்களைப் பார்க்க வேண்டும். மாலையிலே வர வேண்டும். அதை முடித்த பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள் அப்படியே இருந்துவிட முடியாது. கோயில் விழா, கிரிக்கெட், சடுகுடு, அனைத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதி தர வேண்டியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளம் 1,05,000 ரூபாய் என்று பத்திரிகையாளர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். 1,05,000 ரூபாய் சம்பளம் வேண்டாம். செலவுத் தொகையை நாங்கள் பில்லாக தருகிறோம். அதை அரசு தந்துவிட்டால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கு சம்பளமே தேவையில்லை. (சிரிப்பு)

2018 ஜூலை 5] [திரு. கே.என். நேரு]

உங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களாகவும் இருக்கிறீர்கள். நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். நம்மை வேறு இடத்தில் களை எடுக்கும் வேலைக்குக்கூட வைத்துக்கொள்ள மாட்டார்கள். (சிரிப்பு) 'சட்டமன்ற உறுப்பினர்கள்தானே, அவர்களுக்கு என்ன' என்று அதிகாரிகள் எல்லோரும் சொல்கிறார்கள். (சிரிப்பு) I.A.S. படித்துவிட்டு அதிகாரியாக இருப்பவர்கள், சட்டமன்ற உறுப்பினராக வந்தால், இதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பது தெரியும். (சிரிப்பு) தொகுதியில் இருக்கும் ஒருவர் சொல்லும் 4 வேலைகளைச் செய்துவிட்டு 5–வது வேலையைச் செய்ய முடியவில்லை என்றால், 'போய்யா' என்று சொல்லிவிடுவார்கள். (சிரிப்பு) அதிகாரிகளுக்கு அப்படி இல்லை, எத்தனை தடவை வேண்டுமென்றாலும் மறுக்கலாம்.

இங்கேயிருக்கும் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் D.G.P.–ஆக இருந்திருக்கின்றார். அவர் D.G.P. ஆக இருக்கும்போது எப்படி இருந்தார், இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போது எப்படி இருக்கிறார் என்பதை நீங்கள் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும். (சிரிப்பு) எனவே, சட்டமன்ற உறுப்பினர் பணி என்பது தன்னலம் கருதாது மக்களுக்காகப் பணியாற்றுகின்ற ஒரு நல்ல பணி. அதைச் செய்து கொண்டிருக்கிறோம். அதில் ஒரு சிலர் செய்யும் தவறு மற்ற எல்லோரையும் பாதிக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர் பணி என்பது, நீங்கள் ஆட்சிக்கு வந்தால் எங்கள் பேரில் case போடுகிறீர்கள், ஜெயிலுக்கு அனுப்புகிறீர்கள். அப்புறம் நாங்கள் வந்தால் அதையே செய்கிறோம். இப்படியே இருக்கிறது. ஆகவே, திரு. சண்முகம் அவர்கள் பார்க்கும் இலாகாவில், நீங்கள் ஜெயிலை எல்லாம் கொஞ்சம் சரிசெய்து வைத்துக்கொண்டால் உங்களுக்கு நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஏனென்று கேட்டால், police vigilance என்ற ஒன்று இருக்கிறது; அப்புறம் jail vigilance என்ற ஒன்று இருக்கிறது. இப்படியெல்லாம் அங்கு நிறைய சிரமங்கள் இருக்கின்றன. நிறைய நேரம் இது குறித்து எடுத்துச் சொன்னால், "நீ ஏன் பயப்படுகிறாய்?" என்று நீங்கள் கேட்பீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்லுங்கள், சொல்லுங்கள்.

[2018 ஜூலை 5

திரு. கே.என். நேரு: எங்களையெல்லாம் நன்றாகப் பழக்கப்படுத்திவிட்டீர்கள். ஜெயிலை அருமையாகப் பழக்கப்படுத்திவிட்டீர்கள். அதுகுறித்து பயம் ஒன்றுமில்லை. எனவே, அதையும் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு, நான் நேரடியாக சம்பந்தப்பட்ட இலாகாக்களைக் குறித்துப் பேசினால் உடனடியாக நீங்கள் நிச்சயமாக மறுத்துவிடுவீர்கள். எனவே, திருச்சி மாவட்டத்தினுடைய தேவைகளைப் பற்றி முதலில் உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு திருச்சி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் 1, 2, 3 என்ற திட்டத்தை அறிவித்து, 2–வது திட்டத்திற்கு tenderவிடப்பட்டிருக்கிறது. 2–வது திட்டப் பணி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஏற்கெனவே, திருச்சி மாநகரம் 60 வட்டங்களாக இருந்தது, இப்பொழுது 65 வட்டங்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள் மத்திய அமைச்சராக இருந்த காலத்தில் 120 கோடி ரூபாயை திருச்சிக்குத் தந்ததில், பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. மீண்டும் மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மையார் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் வெற்றி பெற்றபோது, ஸ்ரீரங்கம் தொகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். ஆனால், 40 வட்டங்களுக்கு மேலாக இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் வராமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில்கொண்டு உடனடியாக செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியில் 3, 4 குடிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. ஒன்று, காங்கிரஸ் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம். இரண்டாவது, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம். மூன்றாவது, எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆரம்பிக்கப்பட்ட குடிநீர்த் திட்டம். நான்காவதாக, தலைவர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த எங்கள் செயல் தலைவர் அவர்களால் திருச்சியில் குடிநீர்த் திட்டத்திற்காக 226 கோடி ரூபாயை ஒதுக்கி, அத்திட்டத்தை நிறைவேற்றித் தந்தார்கள். அப்படி நிறைவேற்றித் தந்தபோதும்,

2018 ஜூலை 5] [திரு. கே.என். நேரு]

எல்லா இடங்களுக்கும் தண்ணீர் வருகிறது; ஆனால், கலங்கலாக வருகிறது என்று நான் ஏற்கெனவே சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதற்கு ஒரு filter போட வேண்டும். அந்தச் செலவுக்காக 80 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால், கடந்த ஓர் ஆண்டு காலமாக நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதைச் செய்து தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, குப்பை அள்ளுகிற திட்டம். கழக ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த செயல் தலைவர் அவர்கள், திருச்சிக்கு 1,500 புதிய துப்புரவுப் பணியாளர்களை அளித்தார்கள். ஏற்கெனவே 3,500 பேர் இருந்தார்கள். 5,000 பேர் பணியாற்றிய அந்த இடத்தில் இப்பொழுது வெறும் 1,300 பேர்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் குப்பையை அள்ளாமல், 3 நாளைக்கு ஒரு முறை, 4 நாளைக்கு ஒரு முறை அள்ளுகின்ற நிலையாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் கவனம் கொள்ள வேண்டும், எங்களுக்குச் செய்து தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உங்களுக்கெல்லாம் தெரியும், நைல் நதி என்று சொல்வார்கள். அப்படி எங்களுக்கு உய்யகொண்டான் கால்வாய்; திருச்சியில், நகரின் மத்தியிலே இறப்பாக ஓடிக் கொண்டிருக்கிற நதி. இதில் அனைத்து மக்களும் குளிக்கிற காலம் ஒன்றுண்டு. மாயனூரில் ஆரம்பித்து, தஞ்சாவூர், பூதலூர், திருவையாறு தொகுதியில் இந்த வாய்க்கால் முடிகிறது. கிட்டத்தட்ட 80 கி.மீ., 90 கி.மீ., போகிற வாய்க்கால். வழி நெடுகிலும் அது தூர் வாரப்பட வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

தூர் வாருவதோடு மட்டுமல்லாமல், திருச்சியிலுள்ள அத்தனை சாக்கடைத் தண்ணீரும் உய்யகொண்டான் கால்வாயில்தான் போய்க் கலக்கிறது. திருச்சியிலிருந்து sewage pump மூலமாக எடுக்கப்படும் கழிவுநீரை இரண்டே இடங்களில்தான் எடுக்கிறார்கள். ஒன்று, அண்ணா ஸ்டேடியத்திற்கு அருகில் இருக்கும் இடம், மற்றொன்று வானொலி நிலையம் அருகில் இருக்கின்ற

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

இடம். அங்கே பம்ப் செய்கிற அளவிற்குமேல் கழிவுநீர் கூடுதலாக வருகின்ற காரணத்தினால், அந்தக் கழிவுநீரை உய்யகொண்டான் வாய்க்காலில் திறந்துவிடுகின்ற காரணத்தினால், திருச்சி நகரம் முழுவதும் கொசு அதிகமாக உற்பத்தியாகி மக்களுக்குச் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. எனவே, அந்தக் கழிவுநீரை அந்த வாய்க்காலில் கலக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி நகரம் ஒரு வளர்ந்து வருகிற நகரம். அ.தி.மு.க. கட்சியின் நிறுவனர் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களே, சென்னையிலிருந்து தலைநகரை திருச்சிக்கு மாற்றுகிறேன் என்று சொல்லியிருந்தார்கள். அது அப்படிப்பட்ட முக்கியமான இடம். அங்கு போக்குவரத்து நெரிசல் மிகவும் அதிகமாக இருப்பதால் மிகவும் நெருக்கடியாகவும், சிரமமாகவும் இருக்கிறது. கரூர் பை–பாஸ் சாலையிலிருந்து 200 அடி அகலத்திற்கு சாலை இருக்கிறது. ஆனால், அங்கு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாமல் அப்படியே இருப்பதால் திருச்சி நகருக்குள் வாகனங்கள் நுழைய முடிவதில்லை. எனவே, அந்தச் சாலையாக இருந்தாலும் சரி, மாரீஸ் தியேட்டர், திருச்சி கோட்டை ஸ்டேஷனுக்கு அருகில் இருக்கின்ற மேம்பாலமாக இருந்தாலும் சரி, மேற்கண்ட சாலைகளை விரிவுபடுத்தித் தருவீர்களேயானால், திருச்சி நகரத்திற்குள் வருகின்ற வாகனங்கள் சிரமமில்லாமல் வர முடியும். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சராக இருக்கும் திரு. சண்முகம் அவர்கள்கூட தற்போது இங்கு அமர்ந்திருக்கிறார்கள், அவர்களுக்கும் நினைவிருக்கும் என்று கருதுகிறேன். கடந்த காலங்களில், தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறை முதலமைச்சராக இருந்தபோது ஐந்தாண்டுகளின் கடைசியில் கிட்டத்தட்ட 310 கோடி ரூபாய் செலவில் ஒரு மிகப் பெரிய திட்டம் உருவாக்கப்பட்டது. மாயனூரில் இருப்பதைப்போன்ற ஒரு தடுப்பணையை திருச்சி மாவட்டத்தில், குடமுருட்டி அருகில் கட்ட வேண்டும். அப்படிக் கட்டினால், அதில் 2 முதல் 3 டி.எம்.சி. தண்ணீர் தேங்கினால், அங்கு நிலத்தடி நீர் பெருகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைக்கும் என்ற எண்ணத்தில் அத்திட்டத்தைப் பற்றிச் சொன்னபோது, தலைவர் கலைஞர் அவர்களின் அறிவுறுத்தலின்படி அதற்கான detailed project report தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அப்போது அத்திட்டம் அனுமதிக்கப்படாத காரணத்தினால், நிறுத்தி வைக்கப்பட்டு, 30 கோடி ரூபாய் செலவில் அங்கு ஒரு தடுப்பணை மட்டும் கட்டப்பட்டுள்ளது.

2018 ஜூலை 5] [திரு. கே.என். நேரு]

மதுரை மாவட்டத்திற்கு குடிதண்ணீர் போகிறது, திண்டுக்கல் மாவட்டத்திற்கு குடிதண்ணீர் போகிறது என்று நேற்றையதினம் இந்த அவையில் பேசினார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் 710 கோடி ரூபாய் செலவில் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தந்தது கலைஞர் அவர்களுடைய அரசு. இப்படி அனைத்து இடங்களுக்கும் காவேரியிலிருந்து குடிநீர் செல்கின்ற காரணத்தினால் இங்கு நிலத்தடி நீர் மிகவும் குறைகிறது. திருச்சி நகரத்திற்கே தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு ஒரு தடுப்பணையைக் கட்டித் தருவார்களேயானால், எல்லா ஊர்களுக்கும் தண்ணீர் கிடைக்கும், திருச்சி மாவட்டத்தில் இரண்டு வழிச் சாலையாக சமயபுரம் வருகின்ற வழியிலே ஒரு by pass சாலையாகவும் அது அமையும். எனவே, இதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியிலிருந்து வயலூர் போகின்ற வழியில் கிட்டத்தட்ட 20,000 புதிய வீடுகள் வந்துவிட்டன. அந்தச் சாலை மிகவும் குறுகியதாக இருக்கிறது. அந்தப் பகுதியில் 60 அடி அகலத்திற்கு இருக்கின்ற உய்யகொண்டான் வாய்க்காலின் கரையை அகலப்படுத்தி, அந்தச் சாலையை அமைத்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சி மாநகரில், இந்த இயக்கத்தை ஆரம்பித்த பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் நிறைய கல்லூரிகள் இருக்கின்ற காரணத்தினால், மாணவ, மாணவிகளெல்லாம் தினந்தோறும் அந்தச் சாலையில் நடந்து செல்கின்றார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு நடை மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

61, 62, 63, 64 மற்றும் 65 ஆகிய வட்டங்கள் மாநகராட்சியுடன் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மேற்படி வட்டங்களுக்கு இதுவரை மாநகராட்சி அந்தஸ்து வழங்கப்படவில்லை, வீட்டுமனை அங்கீகாரம் செய்து தரப்படவில்லை, குடிதண்ணீர் வழங்கப்படவில்லை. அந்தப் பகுதியில் இருக்கின்ற இடங்களெல்லாம் இன்னும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளைப் போலவே இருந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

கோணக்கரை மின் மயானம் கட்டி முடிக்கப்பட்டு இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களும் இந்த அவையில் இருக்கிறார்கள். அவர்களும் திருச்சி மாவட்டத்தில்தான் இருக்கிறார்கள். மின் மயானம் முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் பயன்பாட்டிற்கு வராமல் இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜங்ஷன் மேம்பாலம் கிட்டத்தட்ட தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிக் காலம் நடந்து கொண்டிருக்கின்ற நிலையில், இன்னமும்கூட பாலப் பணிகள் முடிவடையாத நிலையில் இருக்கின்றன. எங்கள் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. குமார் அவர்கள் மத்திய இராணுவத் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, இராணுவத்தைச் சார்ந்த இடத்தை பாலம் கட்டுவதற்காகத் தரும்படி கேட்டுக்கொண்டும், இன்னமும் அந்த இடம் நமக்குக் கிடைக்காத காரணத்தினால், 100 அடி தூரம் பணிகள் முடிக்கப்படாத காரணத்தினால், இன்றளவும் அந்த மேம்பாலப் பணிகள் முடிவடையாமல் இருக்கின்றன. எனவே, இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காவேரி பாலம் தாண்டிய பிறகு, service road-ல் 4, 5 சிறிய, சிறிய பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்ற காரணத்தால் அங்கு மிகப் பெரிய விபத்துகள் நடக்கின்றன. எனவே அதையும் ஒரு விளக்கமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தருகிறேன். அதையும் நீங்கள் கட்டித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

மிளகுபாறை என்ற ஓர் இடம் இருக்கிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அங்கே இருக்கிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் பக்கத்திலே மிகப் பெரிய quarry பள்ளம் ஒன்று இருக்கிறது. அதில் 10 ஏக்கருக்கு மேல் அரசாங்க இடம் இருக்கிறது. அதில் தண்ணீர் போய் விழுகிற காரணத்தால் அங்கிருந்து அதிகமான கொசுக்களும் அதன்மூலம் வியாதிகளும் பரவுகின்றன.

அதையும் கவனத்திலேகொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிவாஜிக்கு மணிமண்டபம் கட்டி, சிவாஜி சிலையை அங்கு வைத்துவிட்டார்கள். திருச்சியில் சிவாஜி சிலை வைத்து கிட்டத்தட்ட 7 வருடங்கள் ஆகின்றன. அதற்கு ஓர் அனுமதி கொடுத்தால், திறந்துவிடுவார்கள். அந்தச் சிலையை இன்னமும் மூடியே வைத்திருக்கிறார்கள். அதை நீங்கள் திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொகுதிப் பிரச்சினை முடித்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதுவரைக்கும் நன்றாகப் பேசிவிட்டீர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், TNPSC - பல்வேறு ஏழை, எளிய மக்கள், நேர்மையாகப் படித்த மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் ஆதி திராவிட மக்கள் எல்லாம் ஒரு நல்ல இடமாக நினைக்கின்ற ஒன்றாக உள்ளது. அந்த TNPSC இன்றைக்கு மிகவும் கேள்விக்குறியான இடமாக மாறியிருக்கிறது. அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2016 ஆம் ஆண்டு நடத்திய Group–1 தேர்வில் அதிகளவில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தத் தேர்வுமூலம் 74 பணியிடங்கள் அறிவிக்கப்பட்டதில், 62 பணியிடங்கள் ** பயின்ற மாணவர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என தெரிய வருகிறது. இதற்கு ** காரணம் என்று தெரியவந்து, இதுகுறித்து காவல் துறை வழக்குப் பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறது. இந்த முறைகேட்டை தற்போது மூடிமறைக்கும் வகையில் பெரிய அளவில் முயற்சிகள் நடந்து வருவதாக அறிய முடிகிறது. புனிதமான அரசுப் பணிக்கு நேர்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உயர்மட்டப் பதவிகளுக்கும் ** நிலைதான் தற்போது நடைபெற்று வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்தி முறைகேட்டில் ஈடுபட்டவர்களை கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல்லாயிரக்கணக்கான படித்த, வேலையற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்தினை சிதைக்கும் வகையில் இம்முறைகேடுகள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

அமைந்து விடுகின்றன என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. கே.என். நேரு: ஏன் இந்நேரம்வரை எழவில்லையே என்று பார்த்தேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: எழ வைத்துவிட்டீர்களே! 2016 ஆம் ஆண்டு தொகுதி–I தேர்வு முடிவுகள் குறித்து சில கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அதுபற்றிய என்னுடைய விளக்கத்தை நான் இங்கே தர விரும்புகின்றேன். துணை ஆட்சியர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், வணிக வரித் துறை உதவி ஆணையாளர் மற்றும் மாவட்டப் பதிவாளர் ஆகிய பதவிகளை உள்ளடக்கிய 2014–2015 ஆம் ஆண்டுக்குரிய தொகுதி–I தேர்வு அறிவிக்கை 10–7–2015 அன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்பட்டது. இதற்கான முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் வாய்மொழித் தேர்வுகள் நடைபெற்று, இறுதி முடிவுகள் 11–9–2017 அன்று வெளியிடப்பட்டன. மேற்படி தொகுதி–I முதன்மைத் தேர்வில் முறைகேடுகள் நடந்திருப்பதாக செய்தித்தாள்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் செய்திகள் வெளியாகின. இதுதொடர்பாக, தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் ஒவ்வொரு நிலையிலும் விடைத் தாள்கள் திருத்தும் பணி மிகவும் நம்பகத்தன்மையுடனும், பாதுகாப்புடனும், இரகசியத்துடனும், சந்தேகத்திற்கு இடமின்றியும், எவ்வித விதிமீறலுக்கு இடங்கொடாமலும் நடைபெறுகிறது என்றும், தகுதி மற்றும் இட ஒதுக்கீடு அடிப்படையில் தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன என்றும் தேர்வாணையத்தால் 1–7–2017 அன்று மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்நேர்வின் உண்மைத் தன்மையைக் கண்டறியும் விதமாக, சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் புகார் அளிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக மத்திய குற்றப் பிரிவு காவல் துறையினரால் 15–8–2017 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. Complaint கொடுத்ததே TNPSC–தான். யார் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி, உரிய

நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் சொல்கிறீர்களே, அந்த private agency, அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தால்கூட இந்த விசாரணை வளையத்திற்குள் கண்டிப்பாக வருவார்கள். இதற்கிடையில் மேற்கண்ட தேர்வை இரத்து செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுவில் இப்போட்டித் தேர்வில் தெரிவு செய்யப்பட்டுள்ள 74 நபர்களையும் எதிர்மனுதாரர்களாகச் சேர்த்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சென்னை மாநகர காவல் துறை ஆணையருக்கு உத்தரவிட்டது.

பிற்பகல் 1–15

காவல் துறையால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இதுவரை தேர்வாணையத்தைச் சேர்ந்த நான்கு பணியாளர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைக்காக நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும், அவர்கள் நால்வரும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (முழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளின்கீழ் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, இவ்வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்; Phase–I, Phase–II, Phase–III பற்றி குறிப்பிட்டார்கள். Phase–I–ல் பணிகள் முடிக்கப்பட்டு 3,790 இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. Phase–II–ல் கிட்டத்தட்ட 7–ல் இருந்து 65 வார்டுகள் வரை வருகின்றன. இடையிலே 1 அல்லது 2 வார்டுகள் விடுபட்டு 25 வார்டுகள் மொத்தம் வருகின்றன. 25 வார்டுகளிலும் 344 கோடி ரூபாய்க்கு முதல்கட்டமாக 25–10–2017–ல் அனுமதியளித்துள்ளபடி, 19–7–2018–ல் டெண்டர் கோரியிருக்கிறோம். அதேபோல,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2018 ஜூலை 5

Phase–III–ல் 31, 32, 35, 36, 38, 42, 43, 45, 52, 53, 60, 63 அதேபோல 37, 39, 40, 41 ஆகிய பதினாறு வார்டுகளுக்கும் 27–7–2018–ல் 312 கோடி ரூபாய்க்கு டெண்டர் கோரியிருக்கிறோம்.

பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 2015–ல் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும்போதே அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அம்ருத் போன்ற மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து செய்கின்ற திட்டங்களுக்கும்—பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு இதற்கு முன்னர் 7 வருடங்கள், 9 வருடங்கள், 10 வருடங்கள் என்று காலம் ஆகும். இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் அமைக்கும்போது வீட்டு இணைப்புப் பணியையும் அப்போதே முடிக்கச் சொல்லியுள்ளார்கள். இதற்கு முன்பு, ஒவ்வொரு வீடாக எடுத்து, சாலையைத் தண்டித்து அவர்கள் பணம் கட்டுவதற்கு ஏற்றாற்போல இணைப்பு கொடுத்திருப்போம். ஆனால், தற்போது நாங்களே அந்தப் பணியையும் சேர்த்தே செய்துவிடுகிறோம். சாலையையும் அப்போதே அமைத்து விடலாம். அவ்வப்போது சாலைகளைத் தண்டிக்க வேண்டிய சூழ்நிலை இருக்காது. பல்வேறு பணிகளை வேகமாக முடிக்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதில் filter அமைக்கும் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். குப்பை எடுக்கக்கூடிய பணியில் துப்புரவுப் பணியாளர்களைக் குறைத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். நாம் எங்கேயும் குறைக்கவில்லை. Outsourcing–ல்கூட விதிமுறைகளுக்குட்பட்டு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி ஏதாவது சூழ்நிலை இருந்தாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின் மயானம் உள்ளிட்ட வார்டுகளில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாவற்றுக்குமே நடவடிக்கை எடுக்கப்படும். விரிவாகச் சொல்லி உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எல்லாவற்றிற்குமே நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய குடிமைப் பணிகள் தேர்வைப் பொறுத்தவரைக்கும் அதாவது, I.A.S. I.P.S. மற்றும் I.F.S. ஆகிய பதவிகளுக்கு தேர்வு வைத்து நியமிப்பது வழக்கம். 1991 முதல் 1996 வரை அப்போது நான் Backward Classes Minister ஆக இருந்தபோது அண்ணா நகரில் ஒரு Institute செயல்பட்டது. அப்போது ceiling இருந்தது. அதாவது 24,000 ரூபாய் அல்லது அதற்கு மேலே வருமானம் இருப்பவர்கள்தான் அதில் சேர முடியும். அதற்குக் கீழே இருப்பவர்கள் சேர முடியாது. எனவே, அப்போது மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொல்லி, அதை relax செய்து, அதன் அடிப்படையில் ஒரு தனித் துறை அமைத்த பிறகு இப்போது கிட்டத்தட்ட 225 பேர் அங்கு தங்கிப் படிக்கின்ற ஒரு நிலையும், அதேபோல 100 பேர் வெளியிலிருந்து வந்து படிக்கின்ற ஒரு நிலையும் இருக்கிறது. ஆனால், முழுமையான அளவிற்கு அரசு நிதியொதுக்கீடு செய்து, முறையான பயிற்சி கொடுத்து, வல்லுநர்கள், அறிஞர் பெருமக்களை அழைத்துவந்து, தேர்ச்சி பெற வைத்த பிறகு, தேர்ச்சிப் பட்டியலை வாங்கிக்கொண்டு, சில Private Agencies, அதாவது நீங்கள் சொன்னீர்களே அவர்கள், ** போன்ற சில நிறுவனங்கள் அவர்கள் list of the candidates–ஐ போட்டு, அவர்களுடைய Institute–ல் படித்த மாதிரி ஒரு build–up கொடுத்துவிட்டு, some coalition இருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக நாங்கள் அதை அனுமதிக்க முடியாது. அப்படி இருந்தால் அது யாராக இருந்தாலும் சரி, ** நிச்சயமாக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்குமானால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம். அரசாங்கத்தில்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

படித்து வெற்றி பெற்றவர்களை, pass செய்தவர்களை, இவர்கள் நிறுவனத்திலிருந்து pass செய்ததாகச் சொன்னால் அது எப்படிச் சரியாக இருக்கும்? அது குறித்து அரசாங்கம்தான் முடிவெடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–20

திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் சேவைச் சாலை அமைப்பது குறித்து நான்கு முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரடியாகச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் அளித்திருக்கிறார்கள். "உங்களுடைய ஆட்சியிலே சர்வீஸ் ரோடு போடவில்லை, அதனால் இப்போது நிலம் கையகப்படுத்துவதற்கு அதிகமான பணம் செலவாகிறது, ஏற்கெனவே இதுகுறித்த வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் முடித்துவிட்டுத்தான் அதைச் செய்ய வேண்டுமென்று" பதில் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கழக ஆட்சியில் ஏற்கெனவே திரு. சாமிநாதன் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோது, 2006 ஆம் ஆண்டு கடைசியில் அந்த இடத்தைப் பார்வையிட்டு, இந்த service roadவருவதற்குள்ளாக, BHEL நிறுவனத்திலிருந்து நேரடியாக புதுக்கோட்டை சாலையை இணைக்கவும், வேங்கூர் வழியாக காவேரி பாலத்தை இணைப்பதற்குமான estimate போடப்பட்டு, அதற்கான நிதியும் sanction செய்யப்பட்டு, அதில் ஒரு சாலை போடப்பட்டுவிட்டது. மற்றொரு சாலையாவது திருவெறும்பூரிலிருந்து வேங்கூர் வழியாக காவேரி பாலத்திற்கு சாலை அமைக்கப்படுமானால், சர்வீஸ் சாலையை மெதுவாகக்கூட அமைத்துத் தரலாம். அதைச் செய்து தர வேண்டும். சர்வீஸ் சாலை மிக முக்கியம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் ஏற்கெனவே விளக்கமான பதிலை அளித்திருக்கிறேன். சேவைச் சாலை அமைக்கவிருக்கின்ற பகுதியிலுள்ள கடை உரிமையாளர்கள், நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து, தடையாணை பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், அந்த சேவைச் சாலை

2018 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அமைப்பதற்குத் தேவையான நிதி, 84.50 கோடி ரூபாய் மாநில அரசால் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், மத்திய அரசு அந்தச் சாலையை அமைப்பதற்கு 60 மீட்டர் அகலம் வேண்டுமென்று அரசாணை பிறப்பித்துள்ளது. 45 மீட்டர் அகலம் போதுமானது என்று நாம் குறிப்பிட்டிருந்தாலும்கூட, மத்திய அரசு 60 மீட்டர் அகலம் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது. சேவைச் சாலை அமைப்பதற்கு 7.5 மீட்டர் அகலத்திற்கு கையகப்படுத்தினால் போதும் என்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகவே, மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களை நான் இரண்டு முறை சந்தித்து இதுகுறித்து வலியுறுத்திக் குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் பேசும்போதுகூட, அங்கே கிட்டத்தட்ட 400–க்கும் மேற்பட்டவர்கள் விபத்தினால் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள். இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தப் பகுதியில் சர்வீஸ் சாலை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. இருப்பினும், அங்கிருக்கின்ற நில உரிமையாளர்கள் கிட்டத்தட்ட 132 பேர், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுத்து, தடையாணை பெற்றிருக்கிறார்கள். தடையாணையை நீக்குவதற்கு அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே திருச்சி மாநகரில் ஒருங்கிணைந்த மத்திய பேருந்து நிலையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்கள். இப்போது புதிதாக தேர்வு செய்யப்பட்டிருக்கிற இடம் jail corner அருகில் இருக்கிறது. ஒருபுறம் தனியார் நிலமும், மறுபுறம் இரயில்வே நிலமும் இருக்கிறது. அது 8 வழிச் சாலையாக அமைக்கப்பட்டால்தான், பேருந்துகள் சென்று வருவதற்கு எளிதாக இருக்கும். தற்போது இருக்கிற பேருந்து நிலையத்தில் 6 வழிகள் இருக்கும்போதே, பேருந்துகள் சென்று வர மிகவும் சிரமமாக இருக்கிறது. அதை ஏற்கெனவே அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன்.

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பஞ்சப்பூர் அருகில் 300 ஏக்கர் நிலம் அதற்காகத் தேர்வு செய்யப்பட்டது. அதில் முழுமையாக 170 ஏக்கர் அரசு நிலம் இருந்தது. தனியார்களுக்குச் சொந்தமான நிலம் என்பது மிக மிகக் குறைவாகவே இருந்தது. 7 தேசிய நெடுஞ்சாலைகள் அந்த இடத்தில் இணைகின்றன. ஓர் இடத்தில் Railway line–ம் செல்கிறது. இங்கிருந்து நேரடியாக Airport செல்ல வேண்டுமென்றாலும்கூட, 2 கிலோ மீட்டர் தூரத்தில் Airport சென்றுவிட முடியும். எங்களுடைய ஆட்சிக் காலத்தின்போது அதற்கு 300 கோடி, 400 கோடி ரூபாய் செலவாகும் என்று துறையினுடைய செயலாளர் அவர்கள் சொன்னபோது, அதில் பல்வேறு வசதிகளைச் செய்து தருவோமேயானால் தனியார்களிடமிருந்து அந்தப் பணம் முழுமையாக அரசிற்கு வந்துவிடும் என்ற விளக்கம் எல்லாம் அப்போதே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரையில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட பிறகுதான் மதுரை அவ்வளவு பெரிய இடமாக மாறியிருக்கிறது. 7 தேசிய நெடுஞ்சாலைகள் இணையும் இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டால் அருமையாக இருக்கும் என்ற அந்தக் கருத்தையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். எப்போதுமே மருத்துவமனைக்கு திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களுக்கு யோகமே இல்லை என்றுதான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாநகரில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைப்பது குறித்து மாநகராட்சியின் பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துகளையும் அந்த பரிசீலனையில் சேர்த்துக்கொண்டு ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிட்டுப் பேசுவதால், நான் பேச வேண்டியது

மறந்து போய்விடுகிறது. மாண்புமிகு அமைச்சர்களுக்கு உடனடியாக விஷயங்களை எடுத்துக் கூறுவதற்கு அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரிய கருத்துகளை மட்டும் சொன்னால் குறுக்கீடே வராது. பதிலுரையில் என்னுடைய பதில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நாங்களும் அந்தமாதிரி சொல்லியிருக்கிறோம் அல்லவா? நீங்கள் குறுக்கிடாத அளவுக்குப் பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால், குறுக்கிடாத அளவுக்குப் பேசினால் கட்சிக்காரர்கள் விடமாட்டார்கள், சரியாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், ஏற்கெனவே நீங்கள் உங்களுடைய முன்னுரையில், "எங்களுடைய தலைவர், 'நினைத்ததையெல்லாம் பேசக் கூடாது' என்று எங்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்" என்று சொன்னதை தாங்கள் நினைவில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: பேரன்புகொண்ட மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகளையெல்லாம் செய்து தருவீர்களானால், திருச்சி மிகப் பெரிய செல்வாக்கு மிகுந்த நகரமாக மாறும். ஏனென்று கேட்டால், தமிழ்நாட்டினுடைய

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

மையப் பகுதியே மன்னார்புரம்தான். மன்னார்புரம் ரவுண்டானா ஒன்று போட்டிருக்கிறார்களே! இந்தப் பக்கமும், அந்தப் பக்கமும் அளந்து பார்த்தால் மைய இடமே திருச்சிதான்.

ஏற்கெனவே, மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சராக இருந்த திரு. ராஜா அவர்கள் 100 கோடி ரூபாயில் திருச்சிக்கு ஒரு மருத்துவமனையைத் தந்தார்கள். அடுத்து திரு. அன்புமணி அவர்கள் மத்தியிலே அமைச்சராக வந்தபோது அந்த மருத்துவமனையை சேலத்திற்குக் கொண்டு சென்றுவிட்டார்கள். இப்போது அந்த மருத்துவமனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டத்திற்கே போய்விட்டது.

சரி, இந்தத் தடவையாவது AIIMS மருத்துவமனையை நமது மாவட்டத்திற்குத் தந்துவிடுவார்கள், புதுக்கோட்டையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருப்பதால் நிச்சயம் வாங்கிவிடுவார் என்ற நம்பிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்களிடம், 'நம்முடைய மந்திரிதான் இருக்கிறார், நிச்சயம் அந்த மருத்துவமனையை வாங்கிவிடுவார்' என்று சொன்னேன். உள்ளூர் மந்திரி என்று சொன்னேன்; அவரும் விட்டுவிட்டார். இப்போது அந்த மருத்துவமனை மதுரைக்குப் போய்விட்டது. எனவே, எங்கள் மாவட்டத்திற்குக் கிடைத்தது எல்லாம் மற்ற மாவட்டங்களுக்குப் போய்விடுகிறது. இப்போது நீங்களாவது இந்த வேலைகளையெல்லாம் செய்தால் நன்றாக இருக்கும் என்பதற்குத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இரண்டு கருத்துகள்; முதலில் சொன்ன அந்த 100 கோடி ரூபாய்க்கான மருத்துவமனைக் கட்டடம், தமிழ்நாட்டில் 4 இடங்களில் மத்திய அரசின் உதவியோடு Super Speciality மருத்துவமனைக்கான building-ஐ கட்டுகிறோம். தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் கட்டுகிறோம். அதிலே திருச்சி மாவட்டத்திற்கு மட்டும் 100 கோடி ரூபாய் மாநில நிதியை ஒரு Super Speciality மருத்துவமனையை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். (மேசையைத்

தட்டும் ஒலி) அந்த மருத்துவமனை சிறப்பாகச் செயல்படுகிறது. இப்போது JICA ஜப்பான் நாட்டு உதவியோடு 10 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்திருக்கிறோம். இப்போது Cardiac Cath Lab ரூ.5 கோடிக்கும், அதிநவீன MRI 6 கோடி ரூபாய்க்கும் கொடுத்திருக்கிறோம். திருச்சி அரசு மருத்துவமனைக்கு 20 கோடி ரூபாய் செலவில் Centres of Excellence in Maternal, Newborn and Child Health, மகப்பேறு ஒப்புயர்வு மையத்தை அமைத்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனைக்கு நேரில் வந்து அதனைத் தொடங்கி வைத்தார்கள். திருச்சி மாவட்டம் என்பது வளர்ந்து வருகிற மருத்துவத் தலைநகரமாக இருக்கிறது. இன்னொரு விஷயம், இந்தியாவில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகக் கிடைத்த அந்த AIIMS மருத்துவமனையை வளர்த்த மாநிலமான நம்முடைய தமிழ்நாட்டிற்கு எல்லா மாவட்ட மக்களும் பயன்பெறக்கூடிய வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் நம்முடைய அரசு அதிலே மிகப் பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே என்னைக் கோர்த்துவிட வேண்டாம் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எவ்வளவு கெட்டிக்காரர் என்பது எங்களுக்குத் தெரியும். நேற்று நான் மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பேச வேண்டும், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பேசப் போகிறேன், மருத்துவமனைகளுக்கு என்னென்ன தேவையிருக்கிறது என்று உங்களுடைய 'Dean'-ஐக் கேட்டேன். அதற்கு எல்லாமே நன்றாக இருக்கின்றன, கட்டடம் கட்டுவதற்குக்கூட ஆட்கள் வந்துவிட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த அளவுக்கு கட்டுப்பாடாக நீங்கள் அதிகாரிகளையெல்லாம் வைத்திருக்கிறீர்கள் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியும். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்ல வேண்டாமென்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடம்.

[2018 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டுப்பாடாக வைத்திருக்கவில்லை. கட்டி வைத்திருக்கின்றோம். ஆக, கட்டடங்களைக் கட்டி வானளாவ உயர்த்தியிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையின்படி, 18 கோடி ரூபாய் மற்றும் 5 கோடி ரூபாய், ஆக 23 கோடி ரூபாய் செலவில் LINAC–Linear Accelerator என்ற கருவியை Trichy Airport Authority மூலமாக திருச்சி மருத்துவமனைக்குத்தான் பெறுகின்றோம் என்ற நல்ல செய்தியையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உங்களுடைய ஆட்சியிலே இவ்வளவு பணம் தரப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஏன் குறுக்கிடுகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் திருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: இல்லை, அதெல்லாம் வேறு விஷயம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையத்தால் நடத்தப்படுகின்ற தேர்வுகளில், சில தனியார் நிறுவனங்கள் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டுள்ளதாகவும், சில தேர்வு முடிவுகள் குறித்து பிரச்சினைகள் எழுந்துள்ளது குறித்தும் இங்கே தெரிவித்தார்கள். அதுகுறித்து சில நிறுவனங்களுடைய பெயரையே சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிறுவனத்தினுடைய பெயரைக் குறிப்பிட்டதால், நானும் அந்த நிறுவனத்தினுடைய பெயரைக் குறிப்பிட வேண்டியதாயிற்று. அந்தப் பெயர்

2018 ஜூலை 5] [திரு. டி. ஜெயக்குமார்]

** அதேபோன்று சில நிறுவனங்கள். அதில் வழக்கு இருக்கின்ற காரணத்தினால், எந்த நிறுவனமாக இருந்தாலும் சரி, அது விசாரணை வளையத்திற்குள் வரும். (குறுக்கீடு) இல்லை, நான் சொல்கிறேன், எந்தவொரு கல்வி நிறுவனமாக இருந்தாலும் சரி, அது விசாரணை வளையத்திற்குள் வரும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். விவாதம் நல்லபடியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அமைதியாக உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற காரணத்தினால் அதை நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், Ex.–MLA, MLA கஷ்டத்தைச் சொல்லியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளம், காது குத்துவது, மூக்கு குத்துவது, சீமந்தம், கல்யாணம், நிச்சயதாம்பூலம் என்று எல்லாவற்றிற்கும் போய், செலவு ஏற்படுகின்றது என்றும், நாங்கள் reimbursement–க்குக் கூட விண்ணப்பம் செய்கிறோம் என்றும் சொன்னார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கஷ்டத்தை எல்லாம் தெரிந்துதான் சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய கட்சித் தலைவர் உயர்த்திய சம்பளத்தை வாங்குகிறாரா, இல்லையா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ நம்மை கோர்த்துவிடுவது மாதிரி இருக்கிறது. எங்கள் தலைவர் கூப்பிட்டு சம்பளம் வாங்காதீர்கள் என்று சொன்னால் சம்பளமே வாங்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலைவர் கூப்பிட்டு எங்களை சம்பளம் வாங்காதீர்கள் என்று சொன்னால் நாங்கள் சம்பளமே வாங்க மாட்டோம்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

தலைவர் சொல்வதைத்தான் நாங்கள் கேட்போம். நான் ஓய்வு பெற்றவர்களுக்கு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அந்த நிறுவனங்கள் பெயர் குறித்து நீங்கள் சொன்னது, அமைச்சர் சொன்னது உட்பட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு தெலுங்கில் பேசினார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நீங்கள் பேசுங்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், கொஞ்ச நேரம் விடுங்கள். நான் பேசிக்கொள்கிறேன். நீங்கள் ஏன் குறுக்கே, குறுக்கே பேசுகிறீர்கள்? இப்போது பாருங்கள், எனக்கு எங்கேயிருந்து ஆரம்பிப்பது என்று தெரியவில்லை. (சிரிப்பு) TNPSC என்பது மிக மிக முக்கியமான ஓர் இடம். திரும்ப நீங்கள் எந்த நிறுவனத்தினுடைய பெயரை எடுத்தாலும் சரி, பத்திரிகைகளில் எல்லாப் பக்கங்களிலும் வந்துவிட்டது. சட்டமன்றப் பதிவேட்டில் வேண்டுமானால் நீங்கள் வேண்டாம் என்று சொல்லலாமே தவிர, எல்லாப் பக்கங்களிலும். . . (குறுக்கீடு) enquiry செய்யுங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை.

அடுத்து, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வீடு கட்டும் முன்பணம் 25 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாயாக உயர்த்தித் தரப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கான வீடு கட்டும் முன்பணம் ரூ.25 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக உயர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டது. ஆனால், இந்நாள் வரையில் அந்த அறிவிப்பானது அறிவிப்பாகவே இருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை உடனடியாகச் செயல்படுத்துமாறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஒதுக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கான பழைய குடியிருப்புகள் அனைத்தும் தற்போது

இடிக்கப்பட்டு மீண்டும் புதிதாகக் கட்டித் தரப்படுகின்றன. தற்போது நடைபெற்று வரும் புதிய குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடுகளில் பெருமளவில் விதிமீறல்கள் நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது. விதிமுறைகளை மீறி கட்டப்படும் தனியார் கட்டடங்களை விதிமுறைகளைக் காட்டி இடித்துத் தள்ளும் அரசானது, தானே விதிமுறைகளை மீறி புதிய குடியிருப்புகளைக் கட்டி வருகிறது. குறிப்பாக, அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கப்படும் வீடுகள் குறைந்த சம்பளம்பெறும் ஊழியர்களுக்கு பெரிய அளவிலான வீடுகளை ஒதுக்குவதும், அதிக சம்பளம்பெறும் ஊழியர்களுக்கு சிறிய அளவிலான வீடுகளை ஒதுக்குவதும் வாடிக்கையாக இருக்கிறது. இதுபோன்ற தவறுகளைக் களைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கு வாடகைக் குடியிருப்புகளைக் கட்டும்போதே, குறைந்த வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு, உயர் வருவாய்ப் பிரிவு என்று பிரிக்கப்பட்டுதான் கட்டப்படுகின்றன. அந்தந்த அதிகாரிகள், அலுவலர்களின் வேலை, பதவியினுடைய தரத்திற்கு ஏற்றவாறு அந்த மனைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. விதிக்கு மாறாக, யாருக்கும் ஒதுக்கப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏற்கெனவே, 5½ இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர், ஆசிரியர் பணியிடங்கள் காலிப் பணியிடங்களாக உள்ள நிலையில், பல்வேறு துறைகளில் தேவைக்குக் குறைவாக பணியிடங்கள் உள்ள நிலையில், இந்த அரசானது ஓய்வுபெற்ற IAS அலுவலர்கள் தலைமையில் தேவைக்கு அதிகமாக உள்ள பணியிடங்களை முறைப்படுத்துவதற்கு ஒரு சீராய்வுக் குழுவை அமைத்துள்ளது. இது தேவையற்றது. இந்தச் சீராய்வுக் குழுவைத் தடுத்து நிறுத்த வேண்டுமென தமிழ்நாடு ஆசிரியர் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

[திரு. கே.என். நேரு] [2018 ஜூலை 5

பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு முன்வைத்து, அதனை நிறைவேற்றித்தர ஜாக்டோ–ஜியோ அமைப்பினர் பல்வேறு கட்டடங்களில் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தியும், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பல கட்சித் தலைவர்கள் வற்புறுத்தியும் அரசு இதுவரை கண்டுகொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கதாகும். தற்போதுள்ள அரசு இவர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஓய்வூதியம். அதி.மு.க. தேர்தல் அறிவிப்பின்படியும் மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிவித்த அறிவிப்பின்படியும், 1–4–2003–க்குப் பிறகு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் புதிய ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோல, தலைமைச் செயலகத்தில் ஓலகுத் துறை, அதாவது One Unit–ல் பணிபுரியும் அனைத்து அலுவலர்களுக்கும், நிதித் துறையில் பணிபுரிந்து வரும் அலுவலர்களுக்கு இணையான ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள் இதுவரை பின்பற்றப்படாமல் உள்ளன. தற்போது மேற்படி அரசாணைகளைப் பின்பற்றி உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுமார் 5 இலட்சம் காலிப் பணியிடங்கள் உள்ள நிலையில் ஆட்குறைப்புக்காக அரசாணை எண் 56–ன்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒரு நபர் குழுவை இரத்து செய்யுமாறு வலியுறுத்தும் பணியாளர் சங்கங்களின் கோரிக்கை குறித்து அரசின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கக் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக, ஊதியப் பரிந்துரைக் குழு மற்றவற்றிற்கிடையே தேவையில்லாத பணியிடங்களைக் கண்டறிந்து, அவற்றை நீக்குமாறு பரிந்துரைத்தது. அதன்படி ஓய்வுபெற்ற IAS அதிகாரி திரு. ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டு, 6 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–3.5

அதைப்போன்று, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு அலுவலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களில் பணியாளர்களைத் தெரிவு செய்யும் அமைப்புகளான, Recruiting Agencies—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவை மூலமாகப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, காலிப் பணியிடங்களில் விரைவாக தொடர்ந்து பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம் பணியமர்த்தப்பட்டவர்களின் விவரம்: 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் கிட்டத்தட்ட 67,529 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்; ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் 42,852 பேர்; மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் 14,761 பேர்; சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாகப் பணியமர்த்தப்பட்டவர்கள் 32,997 பேர்; வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் பணியமர்த்தப்பட்டவர்கள் 77,696 பேர். ஆக, 2011 முதல் மே, 2017 வரையிலான காலகட்டத்தில் 2,35,835 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். 2,35,835 postings போட்டிருக்கிறோம் என்பது ஒன்று. இரண்டாவது, அரசு ஊழியர்களின் புதிய ஓய்வூதியத் திட்டத்திலிருந்து பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு மாற்ற வேண்டுமென்று நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதாவது New Contributory Pension Scheme–லிருந்து Old Pension Scheme–க்கு மாற்ற வேண்டுமென்று கேட்கிறீர்கள். இதுசம்பந்தமாக, ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. ஸ்ரீதர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அளிக்கின்ற அறிக்கையின் அடிப்படையில், அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், ஒரு நபர் கமிட்டி குறித்து நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அந்த கமிட்டியைப்பற்றி முழுமையான அளவிற்கு இப்போது Court–ல். . . (குறுக்கிடு) அதாவது, One Unit குறித்து நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அதுசம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. நீதிமன்றத் தீர்ப்பைப் பொறுத்து, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். நேரு, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

[2018 ஜூலை 5

திரு. கே.என். நேரு: இதுபோன்று சொல்வதற்காகத்தான் உங்களை பேரவைத் துணைத் தலைவராக வைத்திருக்கிறார்கள். 1989–1991 ஆம் ஆண்டில் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தார். 1991 ஆம் ஆண்டு மாண்புமிகு மறைந்த முதலமைச்சர் அம்மையார் அவர்கள் பொறுப்பேற்று 1991–லிருந்து 1996 வரை முதலமைச்சராக இருந்தார். 1989–1990–ல் 28 ஆயிரம் கோடி ரூபாய்தான் தமிழ்நாட்டினுடைய மொத்தக் கடன். 1991–1996–ல் 56 ஆயிரம் கோடி ரூபாய்தான் கடன் இருந்தது. மீண்டும், 1996–லிருந்து 2001 வரை நாங்கள் ஆட்சி செய்தபிறகு, 2001–ல் மீண்டும் நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். அப்போது, 58 ஆயிரம் கோடி ரூபாய் தமிழ்நாடு அரசினுடைய கடனாக இருந்தது. அப்போது, உங்களுடைய மறைந்த முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள், எங்கள் தலைவர் அவர்களுடைய பெயரைச் சொல்லி, நாட்டை கடனில் தத்தளிக்க வைத்துவிட்டார் என்று அன்றைக்கு அறிக்கை கொடுத்தார்கள். அதற்கு எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்கின்றபோது, 'நான் ஒன்றும் கடனாக வைத்துவிட்டு வரவில்லை; அங்கு 14 இலட்சம் டன் நெல்லை வைத்துவிட்டுத்தான் இங்கு வந்திருக்கிறேன்' என்று அன்றைக்கு அறிக்கையில் பதில் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு தமிழ்நாடு அரசு பெற்றிருக்கின்ற கடன்களின் விவரங்களைப் பார்க்கின்றபோது, வருங்காலத்தில் தமிழ்நாடு அரசை எப்படி நடத்த முடியும் என்கின்ற ஓர் ஐயப்பாடு வருகின்ற அளவில், கடன் தொகைகள் உயர்ந்திருக்கின்றன. 2012–2013 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசினுடைய மொத்தக் கடன் தொகை ரூபாய் 1,35,060 கோடியே 47 இலட்சம்; 2013–2014–ல் கடன் தொகை ரூபாய் 1,65,458 கோடியே 75 இலட்சம்; 2014–2015–ல் கடன் தொகை 2,11,483 கோடி ரூபாய், 2016–2017–ல் வாங்கியிருக்கிற கடன் தொகை 2,52,431 கோடி ரூபாய், 2017–2018–ல் 3,14,00,366 கோடி ரூபாய்,. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, அந்த எண்ணிக்கையை சரியாகச் சொல்லுங்கள்.

திரு. கே.என். நேரு: 2017–2018–ல் கடன் தொகை 3,14,366 கோடி ரூபாய், 2018–2019–ல் கடன் தொகை 3,55,844 கோடி ரூபாய். 2012–2013–ல் பெற்ற கடனுக்கும், தற்போது 2018–2019–ல் பெற்றுள்ள கடனுக்கும் உள்ள வளர்ச்சி விகிதம் 263.47 சதவிகிதம், கடன் விகிதத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறது. வட்டியைப் பொறுத்தவரையில், 2012–2013–ல் தமிழ்நாடு அரசு செலுத்திய வட்டி

2018 ஜூலை 5] [திரு. கே.என். நேரு]

10,835 கோடி ரூபாய்; தற்போது, 2018–2019–ல் செலுத்தும் வட்டி 29,624 கோடியே 43 இலட்சம் ரூபாயாகும். இதன் வளர்ச்சி விகிதம் 273 சதவிகிதமாகும். நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில், 2012–2013–ல் தமிழ்நாடு அரசின் நிதிப் பற்றாக்குறை 16,519 கோடி ரூபாயாகும். தற்போது, 2018–2019–ல் நிதிப் பற்றாக்குறை ரூ.44,480.73 கோடியாகும். இதன் வளர்ச்சி விகிதம் 200 சதவிகிதத்திற்கும் அதிகமாகும். ஆக, தமிழ்நாடு 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து 2018–2019 ஆம் ஆண்டு வரை கடனுக்காகச் செலுத்திய வட்டி, நிதிப் பற்றாக்குறை ஆகியவை 200 சதவிகிதத்திற்கு மேல் வளர்ச்சி கண்டுள்ளதே தவிர, வேறு எந்த வளர்ச்சியையும் தமிழ்நாடு கண்டுள்ளதாகத் தெரியவில்லை.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் பற்றிய விவரங்களையும், நிதிப் பற்றாக்குறை எப்படி ஏற்பட்டது என்ற விளக்கத்தையும், வருவாய்ப் பற்றாக்குறை எப்படியெல்லாம் சேர்ந்தது என்பது பற்றியும், வட்டி செலுத்தியது குறித்தும் ஏற்கெனவே இந்த அவையில் பல முறை விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்பொழுது மீண்டும் அதைக் கிளப்புவதால், நான் சில விளக்கங்களை இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாகவே, உலக அளவில் பல்வேறு நாடுகளும், மத்திய அரசும், மாநில அரசுகளும் ஆண்டுதோறும் கடன் பெறுவதும், பெற்ற கடன்களை அரசுப் பணிகளுக்குப் பயன்படுத்துவதும் நடைமுறையில் உள்ள வழக்கம்தான். 2015–2016 ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாடு அரசினுடைய மொத்த நிலுவைக் கடன் 2.11 இலட்சம் கோடி ரூபாயாக இருந்தது. இது, 2016–2017 ஆம் ஆண்டு இறுதியில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடன் 22,815 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, மொத்த நிலுவைக் கடன் அளவு 2.71 இலட்சம் கோடி ரூபாயாக உயர்ந்தது. 2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி, இந்த நடப்பாண்டு இறுதியில் நிலுவைக் கடன் 3.12 இலட்சம் கோடி ரூபாயாகவும், 2018–2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிலுவைக் கடன் 3.56 இலட்சம் கோடி ரூபாயாகவும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜூலை 5

இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் நிலுவைக் கடனை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், நமது மாநிலத்தினுடைய கடன் நிலை பற்றி நன்கு அறிய முடியும். 2018–2019 ஆம் ஆண்டின் இறுதியில், மேற்கு வங்காளத்தினுடைய கடன் 3.94 இலட்சம் கோடி ரூபாயாகவும், உத்தரப்பிரதேசத்தினுடைய கடன் 4.43 இலட்சம் கோடி ரூபாயாகவும், மகாராஷ்டிராவின் கடன் 4.61 இலட்சம் கோடி ரூபாயாகவும், தமிழ்நாட்டின் கடன் 3.56 இலட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கும் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆண்டுதோறும் கடன் பெறுவதில் நிகரக் கடன் அளவு உயர்ந்து வந்தாலும், பொருளாதார உற்பத்தி மதிப்பு உயர்ந்து வருவதால், மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் அளவின் விகிதாச்சாரமே கடன் அளவை சரியாகக் குறிப்பிடும் அளவுகோலாகும். ஏனெனில், ஆண்டுதோறும் பொருளாதார உற்பத்தி மதிப்பு உயர்ந்து வரும் நிலையில், கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான அரசின் திறனும் அதிகரித்தவண்ணம் இருக்கும். எனவேதான், மத்திய நிதிக் குழு, கடனைப் பொறுத்தவரை, மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் 25 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும் என்ற ஒரு வழிமுறையை வகுத்துத் தந்துள்ளது. இந்த விகிதாச்சாரம் தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், 2015–2016 ஆம் ஆண்டில் 17.41 சதவிகிதமாகவும், 2016–2017 ஆம் ஆண்டில் 20.27 சதவிகிதமாகவும், 2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் 21.58 சதவிகிதமாகவும், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 22.29 சதவிகிதமாகவும் இருக்கும் என கணிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக் கடன் பெற்றுதான் மூலதனச் செலவினங்கள் உட்பட பிற செலவினங்களை மேற்கொள்கின்றன. உதாரணமாக, மத்திய அரசு, 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், 2018–2019 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த நிலுவைக் கடன் 89.58 இலட்சம் கோடி ரூபாயாக, அதாவது, நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 48.80 சதவிகிதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்தக் கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, ஆந்திரப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 24.09 சதவிகிதமாகவும், மத்தியப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 26.34 சதவிகிதமாகவும், கேரளாவைப் பொறுத்தவரையில்,

2018 ஜூலை 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

30.70 சதவிகிதமாகவும், உத்தரப்பிரதேசத்தைப் பொறுத்தவரையில், 29.78 சதவிகிதமாகவும், மேற்கு வங்காளத்தைப் பொறுத்தவரையில், 37.63 சதவிகிதமாகவும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி, 21.58 சதவிகிதமாகவும், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தின்படி, 22.29 சதவிகிதமாகவும் இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 1–45

2016–2017 ஆம் ஆண்டில் நிகரக் கடன் அளவு 20.27 சதவிகிதம் அளவிற்கு உயர்ந்ததற்கு முக்கிய காரணம் 'உதய்' திட்டம்தான். 'உதய்' திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் கடனான 22,815 கோடி ரூபாயை அரசு ஏற்றுக்கொண்டதன் விளைவாக, அந்த ஆண்டில் மட்டும் 60,298.09 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் பெறப்பட்டது. இதில், 37,483 கோடி ரூபாய் மூலதனத் திட்டங்களுக்காகவும், பிற மக்கள் நலத் திட்டச் செலவினங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டது. மீதமுள்ள 22,815 கோடி ரூபாய் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்குக் கடனாக வழங்கப்பட்டது. 2017–2018 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளிலும், 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளிலும் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் கடனின் விகிதாச்சாரம் அதிகரித்து வருவதற்கான முக்கியக் காரணம், ஊதியத் திருத்தங்களால் சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியப் பலன்களில் ஏற்பட்ட பெருமளவு உயர்வுதான். இந்தச் செலவினங்களில் ஏற்பட்ட உயர்வை சமாளிக்கக்கூடிய அளவிற்கு வருவாய் வரவினங்களில் உயர்வு இல்லை. அதனால் கடன் அளவு இவ்விரு ஆண்டுகளிலும் அதிகரித்துள்ளது.

மேலும், வருவாய் வரவுகளில், குறிப்பாக மதுபானக் கடைகளிலிருந்து கிடைக்கப்பெறும் வணிக வரிகளிலும் ஆயத்தீர்வைகளிலும் வளர்ச்சி விகிதம் கணிக்கப்பட்ட அளவுக்கு இல்லாததாலும் கடன் சுமை அதிகரித்துள்ளது. பொதுவாக, மற்ற மாநிலங்களிலும் ஊதியத் திருத்தங்களால் நிதிப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. மேலும், பொருளாதாரச் சூழ்நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டுவரும் நிலையில் வருவாய் வரவினங்களில் வளர்ச்சி விகிதம் அதிகரித்து, பெறப்படும் கடன் அளவு எதிர்காலத்தில் குறைய வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜூலை 5

இதனால், நிதிப் பற்றாக்குறையும் நிலுவைக்கடனும் ரூபாய் மதிப்பின் அளவில் அதிகரித்தாலும் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை விகிதமும் நிலுவைக் கடன் விகிதமும் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதென்பதையும், கடனுக்குரிய வட்டியைச் செலுத்துவதற்குரிய தகுதி நிலையை நாம் பெற்றிருக்கிறோம் என்பதனையும், இதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். கடன் மற்றும் நிதிப் பற்றாக்குறை, வருவாய்ப் பற்றாக்குறை குறித்து என்னுடைய பதிலுரையில் விளக்கமாகச் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கம் பற்றி கவலைப்படுவதாக இல்லை. ஆனால், நீங்கள் இனந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பிலான திட்டங்களை அறிவிக்கிறீர்கள். இந்தத் திட்டங்களுக்கெல்லாம் எங்கிருந்து பணம் கிடைக்கும்? ஏற்கெனவே பற்றாக்குறையில் இருக்கிறோம். ஆனால், உபரி பட்ஜெட்டாகப் போடுகின்றபோது நாடு வளர்ச்சியடையவில்லை. பற்றாக்குறை பட்ஜெட்டாக இருக்கும்போதுதான் நாடு வளர்ச்சியடையும். அந்தத் திட்டங்களை நோக்கிப் போக வேண்டும் என்பது ஏற்கெனவே தெரிந்ததாக இருந்தாலுங்கூட, 44,000 கோடி ரூபாய் பற்றாக்குறையை எப்படி நிவர்த்தி செய்யப் போகிறோம்? எந்த வகையிலே நீங்கள் வருவாயைக் கொண்டுவரப் போகிறீர்கள்? எந்தவகையிலே அதைச் செலவழிக்கப் போகிறீர்கள்? எத்தனைத் திட்டங்களை நிறைவேற்றப் போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார். திட்டங்களைத்தான் போடுகிறோம். திட்டங்களைப் போடும்போது மூலதனத் திட்டங்களை நாம் போடுகிறோம். மூலதனத் திட்டங்களைப் போடுகின்றபோது அந்தத் திட்டங்களின் மூலமாக உற்பத்தி பெருகும். உற்பத்தி

2018 ஜூலை 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பெருகுவதன் மூலமாக வருவாய் வரவு வரும். வருவாய் வரவு வருவதன் மூலமாக, எவ்வளவு கடன் வாங்கினாலும் அதைத் திரும்பச் செலுத்துகின்ற சக்தி தமிழக அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். புதிய திட்டங்கள் போட்டு, அதிலிருந்து வரும் வருவாயின் மூலமாகப் புதிய மூலதனத்தைக் கொண்டு வந்து, அதிலிருந்து வருவாயைப் பெருக்கி இதைத் தீர்ப்போம் என்கிறீர்கள். அப்படி புதிய மூலதனம் போடுவதற்கே பணம் தேவை. இப்போதே பற்றாக்குறையில் இருக்கிறதே! அதற்குத்தான் என்ன செய்யப் போகிறீர்கள்? நாங்கள்தான் கவலைப்படப் போகிறோம். நீங்கள் அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் என்று சொல்கிறேன். ஏனென்றால், அடுத்த முறை முதலமைச்சராக எங்கள் கட்சியைச் சார்ந்தவர் வரும்போது சரியாக இருக்க வேண்டுமென்று நாங்கள்தானே கவலைப்பட வேண்டும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், அதிகபட்சம் 5 நிமிடங்களுக்குள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அதிகபட்சம் 5 நிமிடங்கள்.

திரு. கே.என். நேரு: நான் ஒன்றும் தவறாகப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, அதிகபட்சம் 5 நிமிடங்கள். அதற்குள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடனைப் பற்றிப் பேசினார்கள். அவரும் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தார். நான் அவரிடத்திலே ஒரு விளக்கம் கேட்கக் கடமைப்பட்டுள்ளேன். 2001–2006–ல் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி இருந்தபோது மின்சார வாரியத்தினுடைய கடன் 9,500 கோடி ரூபாய். நீங்கள்

[திரு. பி. தங்கமணி] [2018 ஜூலை 5

2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தீர்கள். 2011 ஆம் ஆண்டுவரை 5 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருந்தீர்கள். அப்போது மொத்த கடன் 45,000 கோடி ரூபாய். அதாவது, சுமார் 36,000 கோடி ரூபாய் கடன் அதிகமாகி இருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–2006 வரை 5 ஆண்டுக்காலம் ஆட்சியில் இருந்தபோது மின் மிகை மாநிலமாக வைத்திருந்தார். 10,011 மெகா வாட் நிறுவுத் திறனை வைத்திருந்தார்கள். ஆனால், உங்களுடைய 5 ஆண்டுக்காலத்தில், 2006–2011 ஆம் ஆண்டு வரை peak hours–ல் 9,900 மெகா வாட் மின் தேவைதான் இருந்தது. ஆனால் 8 மணி நேரம், 10 மணி நேரம் மின்வெட்டு இருந்தது. மின்வெட்டும் 8 மணி நேரம், 10 மணி நேரம் இருந்தது; கடனும் 36,000 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமானது என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில் அண்ணன் துணை முதல்வர் அவர்கள் சொன்னதைப்போல, வளர்ச்சித் திட்டங்களுக்காக நாங்கள் செலவு செய்கின்றோம். அப்போது மின்சார வாரியத்திற்காக 36,000 கோடி ரூபாய் கடன் வாங்கியும், தேவையான மின்சாரமும் இல்லாமல் இருந்தது. 2001–2006 ஆம் ஆண்டுவரை 5 ஆண்டுக்காலம் மின் மிகை மாநிலமாக இருந்ததை நீங்கள் மாற்றிவிட்டீர்கள். 2006–2011 ஆம் ஆண்டில் அப்போதைய மின்சாரத் துறை அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்களே, "எங்களுடைய ஆட்சி போனால், மின்சாரம் இல்லாததினால்தான் போகும்" என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துச் சென்று விட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் மின்வெட்டு வந்துவிடும் என்று மக்கள் இன்னும் நினைத்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அதனால், உங்களுக்கு வாய்ப்பு வருமென்று ஏதும் நினைத்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு வருடம்தான் மின்சாரத் துறை அமைச்சராக இருந்தேன். அப்படி மின்சாரத் துறை அமைச்சராக இருந்தபோது, நாங்கள் செய்ததுபோல் இன்றுவரை நீங்கள் புதிதாக எதையும் செய்துவிடவில்லை. அன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்பொழுதே, வட சென்னை அனல் மின் நிலையம்மூலம் 700 கோடி ரூபாய் செலவிலே 600 மெகா வாட் மின்சார உற்பத்தித் திறனை ஆரம்பித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து உங்கள் உரையை முடியுங்கள்.

2018 ஜூலை 5]

திரு. கே.என். நேரு: உங்கள் தலைவரைப் பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் நேரத்தைப் பார்த்து உதவி செய்யுங்கள்.

திரு. கே.என். நேரு: அவருடைய மறைவிற்குப் பிறகு இரண்டு ஆண்டுக் காலம் அந்தப் பணி எடுக்கப்படாமல் இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்த பிறகுதான் வட சென்னை அனல் மின் நிலையத்திற்கு உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆரம்பித்து வைத்து, இன்றைக்கு 1,200 மெகா வாட் மின்சாரம் வருகிறது; அதனை தலைவர் கலைஞர் அவர்கள்தான் ஆரம்பித்து வைத்தார்கள். அதற்குப் பிறகு அரசு சார்பாக எத்தத் திட்டங்களும் மின் துறையிலே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய காலத்திலே 45 சதவிகித பணிகள் மட்டும்தான் நடைபெற்றிருந்தன. (குறுக்கீடு) எப்படிக் கடன் ஆனது என்றுதான் நான் கேட்டேன். ஏனென்று சொன்னால், அதற்கு 3,000 கோடி ரூபாய் செலவு என்று சொன்னால், அதற்காக ரூ.1,000/– கோடியை மட்டும்தான் நீங்கள் நிதி ஒதுக்கியிருந்தீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் அதற்குக் கூடுதல் நிதியை ஒதுக்கி, அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, 2014–2015–ல் அது செயல்பாட்டுக்கு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சிக் காலத்திலும் கொண்டு வந்தீர்கள், எங்கள் ஆட்சிக் காலத்திலும் கொண்டு வந்தோம். நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், சுமார் 36,000 கோடி ரூபாய் கடன் அதிகமாகிவிட்டது; 8 மணி நேரம், 10 மணி நேரம் மின் வெட்டு ஏன் இருந்தது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) இரண்டாவது, இப்பொழுது 4,600 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவிற்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியதுபோல், 'இனிமேல் தமிழகத்தில் மின் வெட்டு என்பது இல்லை, மின் மிகை மாநிலம் என்பதை

எப்பொழுதுமே தக்க வைத்துக்கொள்வோம்' என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இந்த நல்ல பதிலோடு உங்கள் உரையை முடித்துவிடுங்கள், போதும்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை தயவுசெய்து முடித்து விடுங்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், நான் இதற்கு முன் நடந்ததைச் சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசத் தொடங்கி ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்வதைக் கேளுங்கள்.

திரு. கே.என். நேரு: சேலம் மின் திட்டம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதை ஒரு நிமிடம் கவனியுங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். நீங்கள் பேச ஆரம்பித்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. நீங்கள் மூத்த உறுப்பினர், நீங்கள் பேசுவதை நான் நிறுத்தியதாக இருக்கக் கூடாது. தயவுசெய்து, உரையை முடியுங்கள். நீங்கள் பேச ஆரம்பித்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

திரு. கே.என். நேரு: எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்குப் பிறகு, கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் சேலம் விரிவாக்கம், தூத்துக்குடி விரிவாக்கம், வட சென்னை அனல்

மின் நிலைய விரிவாக்கம் போன்ற அனைத்துமே வந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது நீங்கள் சொல்கிறீர்கள், வளர்ச்சியடைவதற்காகத்தான் கடன் வாங்குகின்ற திட்டம் உள்ளது என்று. 'மின் துறையில் இருக்கின்ற ரூ.22,815 கோடி கடனை நாங்கள் ஏற்ற காரணத்தினால்தான் 60,000 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் வந்தது என்றெல்லாம் சொல்கிறீர்களே, அதுவொரு தொடர் செலவினம். இரண்டு வருடங்களில் ஆட்சி முடியவில்லை என்று சொன்னால், நீங்கள் செய்ததைவிட, கூடுதலாகக்கூட எங்கள் தலைவர் செய்திருப்பார் என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் அமைதியாக இருங்கள்.

திரு. கே.என். நேரு: எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சொல்ல வேண்டும்; இங்கே இவ்வளவு பற்றாக்குறை இருந்தாலும், தினந்தோறும் திட்டங்களை அறிவிக்கின்றீர்களே, இவற்றை எப்படி செய்து முடிக்க முடியும் என்ற கேள்விதான் எனக்கு இருக்கிறது. அதை விளக்குமாறு கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேதத்தின் சாரமாய், வெற்றியின் வடிவமாய், ஆற்றலின் அர்த்தமாய், விடியலின் தவமாய், ஏழைகளின் திருவிளக்காய், பெண்களின் குல விளக்காய், தங்கச்சுடர் வீசும் தமிழகத்தின் தலை விளக்காய், தேவர்களும் வணங்க, வானவரும் வணங்க, மாந்தர்களும் வணங்க, என் தாய் இருக்கும் திசை நோக்கி நானும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுந்தாலும் நெற்கதிர்போல் எழுதல் வேண்டும்; எரிந்தாலும் விளக்குபோல் எரிதல் வேண்டும்; விழுந்தாலும் விதையைப்போல் விழுதல் வேண்டும்; விரைந்தாலும் கார்முகில்போல் விரைதல் வேண்டும் என கடல் தாண்டி, கரை தாண்டி, காற்றடிக்கும் திசைகள் தாண்டி, உலகத் தமிழர் உள்ளமெல்லாம் நிறைந்து,

[திரு. ப. சத்திய நாராயணன்] [2018 ஜூலை 5

பகைவர் தடை உடைக்கும் எங்கள் மாண்புமிகு அண்ணன் முதல்வர் அவர்களைப் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குமணனின் புகழுக்கோ அறமே வாயில்; செந்தமிழின் சிறப்புக்கோ இனிமையே வாயில்; தென் தமிழர் பெருமைக்கோ குறளே வாயில்; மண்ணின் செழுமைக்கோ மழையே வாயில்; வேல்வீரர் வெற்றிக்கோ துணிவே வாயில்; எங்கள் அண்ணன் எடப்பாடியார் ஆட்சிக்கோ மாண்புமிகு அண்ணன் OPS அவர்களே ஒரு துணை வாயில்; அவர்களையும் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–55

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை; மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்பதே என்னுடைய நோக்கமாகும் என்றார் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் இரு விழிகளாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையில் பல மாற்றங்களைச் செய்து, புதிய திட்டங்களை உருவாக்கி, ஏழை, எளிய மக்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமும் இந்த மாமன்றத்தில் சிறப்பான மானியக் கோரிக்கைகள்மூலம் தற்போது நிறைவேற்ற இருக்கின்றார்கள்.

தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தால் தி. நகர், காமராஜர் காலனி, கோடம்பாக்கம் பூபதி நகர், புதூர் அசோக் நகர், மேற்கு மாம்பலம் பிருந்தாவனம் நகர் குடியிருப்பு, ஒட்டகபாளையம் குடியிருப்பு மற்றும் R–3 காவல் நிலைய திட்டப் பகுதி ஆகிய இடங்களில் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்துள்ளன என மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு அண்ணன் அவர்கள் உடனடியாக

2018 ஜூலை 5] [திரு. ப. சத்திய நாராயணன்]

அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பித்து, அதிகாரிகளால் ஜனவரி மாதம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தற்போது, R–3 காவல் நிலைய திட்டப் பகுதியில் உள்ள பழுதடைந்த குடிசைகள் இடிக்கப்பட்டு, ஏற்கெனவே, 230 சதுர அடியாக இருந்த வீட்டை விட தற்போது, 430 சதுர அடி அளவுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) 100 புதிய வீடுகளுடன், மின்தூக்கு வசதியுடன், அடுக்குமாடி கட்டடம், 13 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி, ஏற்கெனவே அங்கு வசித்து வந்த பொதுமக்களுக்கு அந்த வீடுகள் எமது மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் அரசால் வழங்கப்பட உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோல், மற்ற குடியிருப்புப் பகுதிகளில் வசிப்போரிடமும் அம்மா அவர்களுடைய அரசின் திட்டத்தை எடுத்துரைத்து வருகிறேன். இவர்கள் காலி செய்து இடத்தைக் கொடுத்தால், R–3 காவல் நிலைய திட்டத்தைப்போல, புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில், மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் மானியத் தொகையை தி. நகர் தொகுதிக்குட்பட்ட வார்டு 132–ல் உள்ள அம்மன் கோயில் தெருவில் 11 பயனாளிகளுக்கும், பஜனை கோயில் தெருவில் 86 பயனாளிகளுக்கும், அசோக் நகரில் 47 பயனாளிகளுக்கும், வார்டு 133–ல் உள்ள ஒட்டகபாளையத்தில் 16 பயனாளிகளுக்கும், நல்லான் குப்பத்தில் 25 பயனாளிகளுக்கும், வார்டு 134–ல் உள்ள காமராஜ் காலனியில் 89 பயனாளிகளுக்கும் என தி. நகர் தொகுதியில் மட்டும் மொத்தம் 274 பயனாளிகளுக்கு தலா ரூபாய் 2 இலட்சத்து 10 ஆயிரம் வீதம் வழங்கியுள்ளது எங்கள் அம்மாவின் அரசு என்பதைப் பெருமையுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தி. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சோமசுந்தர பாரதி நகரில் ஏழை, எளிய பொதுமக்கள் குடியிருந்து வருகின்றார்கள். இவர்கள் வசித்துவரும் நிலத்தின் வகைப்பாடு, சர்க்கார் புறம்போக்கு என உள்ளது. இந்த நிலத்தின் வகைப்பாட்டை மாற்ற வேண்டி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகக் கோப்பு தயாரிக்கப்பட்டு, (கோப்பு எண் நக. எண் ஜே7/39695/2005) பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது, இந்தக் கோப்பு பொதுப் பணித் துறையில் உள்ளதால் மாண்புமிகு முதலமைச்சர்

[திரு. ப. சத்திய நாராயணன்] [2018 ஜூலை 5

அண்ணன் அவர்கள் கருணை உள்ளத்தோடு உரிய ஆணையிட வேண்டி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தி. நகர் சட்டமன்றத் தொகுதியில் 1981 ஆம் வருடத்தில் சுமார் 300 குடும்பங்களுக்கு சாலிக்கிராமம், தாங்கல்கரை, ராஜாங்க மத்திய வீதி மற்றும் வடபழனி பகுதிகளில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் உலக வங்கி திட்டத்தின்கீழ், தவணை முறையில் வீட்டுமனைகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், இப்பகுதி பொதுமக்கள் மிகவும் ஏழை, எளிய வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் என்பதால், இவர்களால் அந்த தவணைத் தொகையை திருப்பிச் செலுத்த இயலாத நிலை உள்ளது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் கருணை உள்ளத்தோடு எனது கோரிக்கையைப் பரிசீலித்து, இப்பகுதி பொதுமக்களின் கடனைத் தள்ளுபடி செய்து, 300 குடும்பங்களுக்கு கிரையப் பத்திரம் மற்றும் பட்டா வழங்க வேண்டி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–00

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தி. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு–132 ஒட்டகபாளையத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய நிலத்தில் சுமார் 40 வருடங்களாக வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பொதுமக்கள் குடியிருந்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் கருணை உள்ளத்தோடு இவர்கள் குடியிருக்கும் நிலத்திற்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் கிரையப் பத்திரம் மற்றும் பட்டா வழங்கிட ஆணை வழங்க வேண்டி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தி. நகர் தொகுதிக்குட்பட்ட, அசோக் நகர் 5–வது அவென்யூ 22–வது தெருவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலத்தில் 40 வருடங்களாக 23 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன்

2018 ஜூலை 5] [திரு. ப. சத்திய நாராயணன்]

அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் கருணை உள்ளத்தோடு இவர்கள் குடியிருக்கும் இடத்திற்கு கிரையப் பத்திரம் மற்றும் பட்டா வழங்கிட வேண்டி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தி. நகர் தொகுதிக்குட்பட்ட, அசோக் நகர் 10-வது அவென்யூ, அண்ணா சிலை அருகே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 7 கிரவுண்டு நிலம் பயன்பாடு இல்லாமல் உள்ளது. இந்த நிலத்தில் parking வசதியுடன்கூடிய Convention Hall அமைத்துத் தர வேண்டி மாண்புமிகு அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விழைகிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் நடைபெறும் சுதந்திர தின விழா மற்றும் குடியரசு தின விழாக்களில் பங்குகொள்ளும் வகையில் அவர்களுக்கு அழைப்பிதழ் மற்றும் நிகழ்ச்சியில் உரிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்களிடம் ஒரு பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். சென்னை மாநகரில் அண்ணா நகர், காந்தி நகர், அசோக் நகர், பெசன்ட் நகர் ஆகிய பகுதிகளைப்போல வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீட்டுமனைகள் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதாக அறிந்தோம். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தை அதிகப்படுத்தித் தந்ததுபோல், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மானிய விலையில் வீட்டுமனைகளை வழங்கிட வேண்டுமென தங்களின்மூலம் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நல்ல கோரிக்கையை வைத்திருக்கின்றீர்கள். (சிரிப்பு)

[2018 ஜூலை 5

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனது கோரிக்கைகள் அனைத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களும் நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைச் சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தி. நகர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் இருக்கின்ற குடிசைப் பகுதிகளையெல்லாம் இங்கே கணக்கிட்டு ஒவ்வொன்றாகச் சொன்னார்கள். நகர்ப்புறங்களில் இருக்கின்ற குடிசைகளை அகற்றி, குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், விஷன்–2023 என்ற தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணி இப்போது விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்திய நாராயணன் அவர்கள், நகரப் பகுதிகளை உள்ளடக்கி இருக்கின்ற அந்தக் குடிசைப் பகுதிகளை பட்டியலிட்டுத் தருவார்களேயானால், அதற்குரிய ஆய்வுகள் செய்யப்பட்டு, பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று பத்திரங்களைத் திருப்பிக் கொடுப்பதைப் பற்றியும், கடன் தள்ளுபடியைப் பற்றியும் சொன்னார்கள். இவையெல்லாம் அரசினுடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், நீங்கள் பேச விரும்புகின்றீர்களா? சரி, பேசுங்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள். (சுறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், நீங்கள் பேசுகின்றீர்களா?*

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்கள் தயவுகூர்ந்து, தவணை முறையில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மனை வழங்கப்படுமா என்பது குறித்த அறிவிப்பினை பதிலுரையில் எதிர்பார்க்கிறோம் என்பதைக் கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல்வேறு மனைகள், பல்வேறு அரசுகளால் முன்பு ஒதுக்கப்பட்டு அதன் மூலமாகப் பல்வேறு பிரச்சினைகள் எழுந்ததன் காரணமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'இனிமேல் யாருக்கும் தனியாக மனைகள் ஒதுக்குவதில்லை' என்ற அரசாணையைப் பிறப்பித்திருந்தார்கள் என்பதை நான் தி. நகர் சட்டமன்ற உறுப்பினர், அருமைச் சகோதரர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

பிற்பகல் 2–05

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் சென்னையில் நடைபெறுகின்ற குடியரசு தினம் மற்றும் சுதந்திர தின விழாக்களில் பங்கேற்பதற்காக வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சத்திய நாராயணன் அவர்கள் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கை அரசால் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குடியரசு தினம் மற்றும் சுதந்திர தின விழாக்களில் கலந்துகொள்வதற்கு அவர்களுக்கு அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு, அவர்கள்*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2018 ஜூலை 5

சொந்த ஊரிலிருந்து சென்னை வருவதற்கும், சென்னையிலிருந்து மீண்டும் சொந்த ஊர் திரும்புவதற்கும் குளிரூட்டப்பட்ட இரண்டாம் வகுப்பு இரயில் பெட்டியில் பயணம் செய்வதற்கு வசதி செய்து கொடுப்பதுடன், (மேசையைத் தட்டும் ஒலி) குடியரசு மற்றும் சுதந்திர தின விழாக்களில் கலந்துகொள்ளும் காலகட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் கட்டணமில்லாமல் தங்குவதற்கும் அரசு ஏற்பாடு செய்து கொடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சித்திரைக்கு உயிர் தந்த திருமகளே, முத்தமிழோடு நான்காம் தமிழாம் அறிவியல் தமிழ் தந்த பொன்மகளே, தமிழினத்தைத் தலைநிமிர வைத்த தலைமகளே, கல்விக்கு முதலிடம் தந்த கலைமகளே, பெண்ணினம் காத்து நின்ற பெருந்தகையே, காவேரியை மீட்டெடுத்த கற்பக விருட்சமே, அள்ளி, அள்ளி திட்டங்கள் தந்த அட்சயபாத்திரமே, அம்மா திட்டங்கள் பல தந்து, மக்களைக் காத்த அமுதசுரபியே, முல்லைப் பெரியாறின் உயரம் தொட்ட முத்தமிழே, சமூக நீதி காத்திட்ட சந்தன விருட்சமே, தாகம் தீர்க்க அம்மா குடிநீர் தந்த தாமிரபரணியே, குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் தந்த குல விளக்கே, தாலிக்குத் தங்கம் தந்த தங்கத் தாரகையே, மழை நீரைச் சேமித்து இம்மண்ணைக் காத்திட்ட மாதரசியே, விவசாயிகளின் வாழ்வில் விடியல் தந்த ஒளிவிளக்கே, இம்மண்ணைக் காத்து நின்ற மாசற்ற தலைவியே, தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றி எழுதிய தமிழர்களின் தவப்பயனே, ஆறு முறை இம்மண்ணை ஆண்ட ஆளுமையின் அடையாளமே, தமிழர் மணம் பரப்ப தன்னையே அரைத்து சந்தனமாய்த் தேய்ந்த தியாக தீபமே, தமிழர்களின் வீடுகளில் தவறாமல் ஒலிக்கும் அம்மா எனும் வேத மந்திரமே, மறைந்தும், மறையாமல் எங்கள் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூலை 5] [திரு. வி. ராதாகிருஷ்ணன்]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் காவேரி நீரைப் பெற்றுத் தந்த காவியத் தலைவன், குடிமராமத்துத் திட்டம் தந்த கோமகன், திராவிடம் தந்த வரலாற்று விடியல், கழகத்தைக் காக்க காலம் நமக்குத் தந்த அருட்கொடை, எந்த நேரத்திலும் எளிதில் சந்திக்கக்கூடிய ஒரே முதலமைச்சர், 83 ஆண்டுகளுக்குப் பின் மேட்டூர் அணையைத் தூர் வாரிய இரண்டாம் கரிகால் சோழன், மக்களுக்காக எதைக் கேட்டாலும் உடனடியாகச் செய்து தரும் உன்னதத் தலைவர், காட்சிக்கு எளியவர், நெஞ்சுரமுதி கொண்டவர், தடைக்கற்களைத் தகர்த்தெறிந்தவர், துரோகங்களை வென்றெடுத்தவர், சூழ்ச்சிகளை முறியடித்து, கட்சியையும், ஆட்சியையும் கட்டிக் காத்து நிற்பவர், தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க வந்த இரட்சகர், அனைவரையும் அன்பால் அரவணைக்கும் ஆற்றல் கொண்டவர், சேலத்துச் சிங்கம், கொங்கு நாட்டுத் தங்கம், விவசாயி மகன், கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டுக்கு சட்டப் பாதுகாப்பு தந்தவர், வர்தா புயலை வந்த சுவடு தெரியாமல் விரட்டியடித்தவர், அம்மாவின் பாசறையில் விசுவாசமிக்க மாணவர், பணிவுக்குப் பெயர் பெற்றவர், பாசத்தால் எங்களை ஆட்கொண்டவர், அமைதியின் இருப்பிடமாய், பண்பின் இலக்கணமாய், விசுவாசத்தின் அகராதியாய், அம்மாவை இழந்து வாடிய எங்களுக்கு 'அண்ணனாய் நான் இருக்கிறேன்' என ஆதரவுக் கரம் நீட்டிய பெரியகுளத்து அரசியல் பேராசான், கழக ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையைச் சீரும், சிறப்புமாக நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், தங்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரின் அன்பையும், பாசத்தையும் ஒருங்கே பெற்றவர், கழகத்தின் மூத்த பிள்ளை, 50 ஆண்டுகால திராவிட இயக்க வரலாற்றுக்குச்

[திரு. வி. ராதாகிருஷ்ணன்] [2018 ஜூலை 5

சொந்தக்காரர், கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளராக பணியாற்றிய அனுபவம் மிக்கவர், எங்களுக்கு நல்வழிகாட்டி, எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கும், எங்கள் மாவட்ட கழகச் செயலாளரும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான அண்ணன் திரு. ஓ.எஸ்.எம். அவர்களையும் வணங்குகின்றேன். என்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த மயிலாடுதுறை தொகுதி மக்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து எனது உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவேரிப் பிரச்சினையை முதன்முதலில் கையில் எடுத்தவர், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி, பல வெற்றிகளைப் பெற்றுத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இறுதியாக நல்ல தீர்ப்பினைப் பெற்று, காவேரி மேலாண்மை ஆணையம் அமைத்து, அதன் முதல் கூட்டத்தை 2–7–2018–ல் நடத்திக்காட்டி, முதற்கட்டமாக 31.24 டி.எம்.சி. அடி தண்ணீரைப் பெற்றுத் தந்த நம் கரிகால் சோழர்கள் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும், காவேரி டெல்டா பாசன விவசாயிகள் சார்பாகவும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் ஸ்டெர்லைட் ஆலைக்குக் கொடுக்கப்பட்ட 245 ஏக்கர் நிலத்தினை மீட்டெடுத்து, ஸ்டெர்லைட் ஆலைக்குப் பூட்டுப் போட்டு, தூத்துக்குடி மாவட்ட மக்களின் 22 ஆண்டுக்கால பிரச்சினைக்குத் தீர்வு கண்டது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்கால தலைமுறையினரின் நலன் கருதி, பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்து, சுற்றுச்சூழலைப் பாதுகாத்த அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு. கிராமப்புற மக்களின் வறுமையை ஒழித்து, பொருளாதாரத்தை மேம்படுத்திட, விலையில்லா நாட்டுக் கோழிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்துள்ள நல்லரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு.

2018 ஜூலை 5] [திரு. வி. ராதாகிருஷ்ணன்]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசுப் பணம் ஒரு ரூபாய் கூட செலவு செய்யாமல், ஒரே ஆணையில் தமிழகத்திலுள்ள அனைத்து ஏரிகள், குளங்களைத் தூர்வாரி நீர்நிலைகளில் நீரைச் சேமித்துக் காட்டிய அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு. பள்ளிக் கல்வி, உயர் கல்வி, வேளாண்மை ஆகிய துறைகளில் இந்தியாவிற்கே முன்னோடியாகத் திகழும் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு.

மூளைச்சாவு அடைந்த ஒருவரின் கைகளை தானமாகப் பெற்று, சென்னை, ஸ்டான்லி அரசு மருத்துவமனையில், திண்டுக்கல்லைச் சேர்ந்த திரு. நாராயணசாமி என்பவருக்குப் பொருத்தி, வெற்றி கண்டு, உறுப்பு மாற்று சிகிச்சையில் இந்தியாவிற்கே முன்னுதாரணமாகத் திகழும் அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு.

"ஆளுக்கு ஒரு வீடு கட்டுவோம்" என்று புரட்சித் தலைவர் பாடிய வரிகளுக்கு உயிர் கொடுத்து, சொந்த வீடு வேண்டும் என்று கனவு காணும் தமிழக மக்களின் ஆசைக் கனவுகளை ஈடேற்றி, அனைவருக்கும் வீடு என்னும் குறிக்கோளை நிறைவேற்றிட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தொலைநோக்குத் திட்டம், 2023 ஆவணத்தில் தமிழக மக்கள் அனைவருக்கும் வீட்டு வசதி அளிப்பதையும், தமிழ்நாட்டை குடிசைப் பகுதிகளற்ற மாநிலமாக ஆக்குவதையும், தனது இலட்சிய நோக்கமாகப் பிரகடனப்படுத்தினார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த உயரிய எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுத்திட, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் வாயிலாக பல்வேறு சீர்திருத்தங்களையும், கட்டுமானத் தொழில் செய்திட எளிதாக்கும் நடவடிக்கைகளையும், மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு செயல்படுத்தி வருகிறது.

அனைத்து மாநிலங்களோடு ஒப்பிடும்போது, வீடு இல்லாமல் இருப்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவான சதவிகிதத்தில் இருப்பது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி

நடைபெறும் தமிழ்நாட்டில்தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். [2018 ஜூலை 5

சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.11,000/–லிருந்து ரூ.12,000/– ஆகவும், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியம் ரூ.5,500/–லிருந்து ரூ.6,000/– ஆகவும் உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

விடுதலைப் போராட்டத்தில் சிறப்புறப் பணியாற்றியவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.6,000/– ஆக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

பணியில் இருக்கும்போது இறக்கும் அரசுப் பணியாளருக்குக் குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முன்பணத்தை ரூ.5,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கிய கருணைத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பொதுச் சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்கும் அம்மா திட்டமும், மக்களின் குறைகளை 24 மணி நேரமும் தீர்க்கவல்ல அம்மா அழைப்பு மையமும் அனைத்து மக்களாலும் வெகுவாகப் பாராட்டிப் புகழப்படுகிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடைபெறாமல் இருந்ததையடுத்து, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்திட, கூட்டுறவுத் தேர்தல் ஆணையம் என்ற ஒன்றை ஏற்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

தி.மு.க. ஆட்சியில் அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ், மாநில அரசு ஊழியர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.15 இலட்சம், அனைத்திந்திய பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.25 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இதனை மாற்றி, அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் ரூ.25 இலட்சமாகவும், அனைத்திந்திய பணி அலுவலர்களுக்கு ரூ.40 இலட்சமாகவும் உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

2018 ஜூலை 5] [திரு. வி. ராதாகிருஷ்ணன்]

பிற்பகல் 2–15

தமிழக அரசில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு விடுப்புக் காலத்தை 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களாக உயர்த்தி வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதலைப் பெற்று, இம்மாமன்றத்தில் நிறைவேற்றிக் காட்டி., அதனை நடைமுறைப்படுத்திக் காட்டிய முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாட்டிற்குப் பெற்றுத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள் முதல் துணைக் கண்காணிப்பாளர்கள் வரையிலான பதவியில் உள்ளவர்களுக்கு ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கென 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து வீடு கட்டித் தரும் 'உங்கள் சொந்த இல்லம்' திட்டத்தைக் கொண்டு வந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறையினருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக 1980 ஆம் ஆண்டு காவல் துறை வீட்டு வசதிக் கழகம் என்ற ஓர் அமைப்பினை ஏற்படுத்திக் கொடுத்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது, முதல் வேலையாக, காவல் துறை வீட்டு வசதிக் கழகத்தைக் கலைத்து, இழுத்து மூடியவர் தி.மு.க. தலைவர் அவர்கள். 1991 ஆம் ஆண்டில் மீண்டும் காவலர் வீட்டு வசதிக் கழகத்தைத் துவக்கி காவல் துறையினரின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படியை உயர்த்தி வழங்கினால், உடனடியாக தமிழக அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கி மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, அரசு ஊழியர்களின் நலன் காப்பதில் அக்கறையுள்ள அரசாகத் திகழும் அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அரசு.

[திரு. வி. ராதாகிருஷ்ணன்] [2018 ஜூலை 5

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து அறுபத்தொன்று வீடுகளை ரூ.5,415.29 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டிக் கொடுத்து சாதனை படைத்துள்ளது என்பது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில்தான், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் ஒவ்வோர் ஆண்டும் போட்டித் தேர்வுக்கான நேரடித் தேர்வுத் திட்ட ஆண்டு அட்டவணையை ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடும் வெளிப்படையான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டும் திட்டமாகும்.

அனைத்துத் தேர்வுகளுக்கும் எளிதாக இணையதளம்மூலம் விண்ணப்பிக்கும் முறை, ஐந்தாண்டுகளுக்கு செல்லத்தக்கவகையில் ஒரு முறை பதிவு செய்யும் வசதி, மாற்றுத் திறனாளிகள் தரைத் தளத்திலேயே தேர்வு எழுத வசதி, தேர்வு முடிந்தவுடன் விடைகள் உடனடியாக இணையதளத்தில் வெளியீடு, பணியிடங்களுக்குக் கலந்தாய்வு என தேர்வாணைய வரலாற்றில் ஒரு புதிய சாதனையைப் படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மா ஆட்சியில் 23–4–2018 முதல் சான்றிதழ் சரிபார்ப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள், அரசு இ–சேவை மையம்மூலம் தங்களது மூலச் சான்றிதழ்களை தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் மாதச் சம்பளத்தை ரூ.55,000/–லிருந்து ரூபாய் 1,05,000/– ஆகவும், ஓய்வு பெற்ற சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ.12,000/–லிருந்து ரூ.20,000/– ஆகவும், அவர்களின் மருத்துவச் சிகிச்சைக்காக வழங்கப்படும் தொகையை ஆண்டிற்கு ரூ.12,000/–லிருந்து ரூ.25,000/– ஆகவும் உயர்த்தி

2018 ஜூலை 5] [திரு. வி. ராதாகிருஷ்ணன்]

வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியை 2017-2018 ஆம் ஆண்டு முதல் ரூபாய் இரண்டு கோடியிலிருந்து ரூ.2 கோடியே 50 இலட்சமாக உயர்த்தி வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

7–வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு ஊழியர்களுக்கு ஊதிய விகிதங்களை உயர்த்தி வழங்கியுள்ள அரசு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அம்மாவின் அரசு.

நகர குடிசைவாழ் மக்களுக்காக குடிசைப்பகுதி மாற்று வாரியம்மூலம் 2006 முதல் 2011 வரையிலான 5 ஆண்டுக்கால தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 20,802 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டன. இத்திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.1,176.89 கோடி மட்டுமே. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2011 முதல் 2016 வரையிலான 5 ஆண்டுகளில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 59,023 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.2,753.42 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக மக்களுக்கு நிலம் வாங்கவும், வீடுகள் கட்டவும், கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின்மூலம் கடன் வாங்குவதை முந்தைய தி.மு.க. அரசு நிறுத்தி வைத்து, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களை முடக்கி வைத்திருந்தது. 1–9–2009 முதல் முதன்மைச் சங்கங்களுக்கு இணையம்மூலம் கடன் வழங்குவதை நிறுத்தி வைத்து தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட தடையாணையை நீக்கி, மீண்டும் புதிய கடன்கள் வழங்கப்படும் என அறிவித்து, செயல்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவை மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களின் தலைமையில் நடத்திக் காட்டி, சட்டமன்றத்திற்குப் பெருமை சேர்த்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[திரு. வி. ராதாகிருஷ்ணன்] [2018 ஜூலை 5

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு விடுதியைத் திறந்து வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கனவினை நனவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேர்தல் மேலாண்மையில், வாக்காளப் பெருமக்களுக்கு வாக்களிக்கும் வசதி ஏற்படுத்தித் தருவதில் பலவகையான தொழில்நுட்பப் புதுமைகளைப் புகுத்தியதற்காக, 25–1–2017 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் புதுடெல்லியில் நடைபெற்ற ஆறாவது தேசிய வாக்காளர்கள் தின விழாவில் மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் 'மிகச் சிறந்த மாநில விருது' தமிழகத்திற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசுக்கு மேலும் ஒரு நற்சான்றாகக் காட்சியளிக்கின்றது.

பிற்பகல் 2–20

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் சாதனைகளைக் கண்டு குறை காண முடியாமல், துரோகிகள் துவண்டு கிடக்கின்றனர்; எதிரிகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். மக்கள் இன்ப வெள்ளத்தில் திளைக்கின்றனர். இதுதான் அம்மாவின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சி ஒரு நூற்றாண்டு அல்ல; ஓராயிரம் ஆண்டுகள் தொடர்ந்து பீடுநடை போடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி சார்ந்த ஒரு சில கோரிக்கைகளை இந்த அவைமுன் வைத்து, அவற்றை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன், இரண்டு கோரிக்கைகளை மட்டும் கூறி, உரையை முடியுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திற்கும், மயிலாடுதுறைக்குமிடையே புதுச்சேரி மாநிலத்தின் காரைக்கால் மாவட்டம் அமைந்துள்ளதால், பொது மக்கள் பல தடைகளைக் கடந்து, நீண்ட தூரம் பயணம்

2018 ஜூலை 5] [திரு. வி. ராதாகிருஷ்ணன்]

செய்து, மாவட்டத் தலைநகரமான நாகப்பட்டினம் செல்வதற்கு மிகுந்த சிரமமும், கால விரயமும் ஏற்படுகிறது. எனவே, பொது மக்கள் நலன் கருதி, சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் பூம்புகார் சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி, மயிலாடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்கித் தருமாறு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது மாவட்ட அமைச்சர் அண்ணன் அவர்கள் சார்பாகவும், சீர்காழி மற்றும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன்.

மயிலாடுதுறை தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புதிய பேருந்து நிலையம் தேவை என்பது கிட்டத்தட்ட 20 ஆண்டுக்காலக் கோரிக்கையாக உள்ளது. இதற்கு முன்னால் துவங்கப்பட்ட பேருந்து நிலையம் சுமார் 3 ஏக்கர் நிலத்தில் மட்டுமே உள்ளது. இப்போது 13 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்குத் தேவையான 41.60 கோடி ரூபாய் நிதியினை இந்த நிதியாண்டிலேயே முழு மானியமாக வழங்கி உதவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை நகரம் வளர்ந்து வரும் நகரமாகும். இந்நகரத்தில் போக்குவரத்து நெரிசலின் காரணமாக அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, மயிலாடுதுறை நகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, புறவழிச் சாலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணியைத் தொடங்கி வைத்து, விரைவில் அப்பணியை முடிக்க மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதியில், இரயில்வே கடவு எண் 228 மாப்படுகை என்னும் இடத்திலும் மற்றும் இரயில்வே கடவு எண் 229 நீடூர் எனும் இடத்திலும் இரண்டு இரயில்வே உயர்மட்டப் பாலங்களை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் மையப் பகுதியான மயிலாடுதுறையில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். மயிலாடுதுறை தொகுதி, தலைஞாயிறு, நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நிதியினை இந்த நிதியாண்டிலேயே ஒதுக்கீடு செய்து தருமாறும் மயிலாடுதுறை, சீர்காழி மற்றும் பூம்புகார் தொகுதி மக்களின் சார்பாகவும், விவசாயிகளின் சார்பாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. ராதாகிருஷ்ணன்] [2018 ஜூலை 5

மயிலாடுதுறை அரசு பெரியார் பொது மருத்துவமனைக்கு C.T. Scan, Ventilator, (CB–NAAT)–T.B. கண்டறியும் கருவி, dialysis (இரத்தம் சுத்திகரிக்கும் கருவி) கருவி வழங்கவும், மகப்பேறுகால மையக் கட்டடம் கட்டுவதற்கும் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக மருத்துவ சிகிச்சை அளிப்பதற்குத் தேவையான அனைத்து நவீன கருவிகளையும் இம்மருத்துவமனைக்கு வழங்கிய மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம், உரையை முடித்து விடுகிறேன். கோயில் நிலங்களை மக்கள் நலப் பணிக்காக கட்டடங்கள் கட்ட எடுக்கும்போது அல்லது அரசுக்குத் தேவைப்படும் நேரத்தில் எடுக்கும்போது வழிகாட்டி மதிப்பைவிட சுமார் 400 மடங்கு கூடுதலாகச் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. அந்த நிலங்களை குறைந்த வழிகாட்டி மதிப்பு விலைக்கே கொடுக்க வேண்டும் அல்லது பழைய நிலைப்படி 99 ஆண்டுகள் lease-க்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு தந்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர்களே, மாமன்றத்தில் அமர்த்திருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர்

2018 ஜூலை 5] [திரு. ச. பாண்டி]

பெருமக்களே, உறுப்பினர் பெருமக்களே, அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள எனது முதுகுளத்தூர் தொகுதியைக் கேள்விபட்டிருப்பீர்கள்.

பிற்பகல் 2–25

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதி அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் தொகுதியில் வெற்றி பெற்றவர்தான் தேவர் திருமகனார். இந்தத் தொகுதியில் வெற்றி பெற்றுதான் திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். அப்படிப்பட்ட, பலதரப்பட்ட சமுதாய மக்கள் வாழ்கின்ற தொகுதியிலிருந்து வெற்றி பெற்று வந்த நான், அந்த மக்களின் பணி, சேவை, உயர்வு ஆகியவற்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசியல் பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டவன்.

என்னுடைய தொகுதியில் முதுகுளத்தூர், கடலாடி, சாயல்குடி போன்ற ஊர்கள் பேரூராட்சியாக மாறும் அளவில் பெரிய நகரங்களாக இருக்கின்றன. எனவே, முதுகுளத்தூரில் மகளிர் காவல் நிலையம் ஒன்றை அமைத்துத் தந்தால் மிகச் சிறப்பாக இருக்கும். தற்போது 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள கமுதி மகளிர் காவல் நிலையத்திற்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. அதேபோல், கடலாடி மற்றும் சாயல்குடியைச் சேர்ந்தவர்களும் 30 கிலோ மீட்டர் தூரம் உள்ள கமுதிக்குச் செல்ல வேண்டியிருக்கின்றது. எனவே, முதுகுளத்தூரில் மகளிர் காவல் நிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும்.

முதுகுளத்தூரில் போக்குவரத்துக் காவலர்கள் நியமிக்கப்பட வேண்டும். முதுகுளத்தூர் நகருக்குள் காவல் துறைக்கு என்று தனி இடம் இருந்தும், துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, காவல் துறைக்குச் சொந்தமான இடத்தில் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தையும் மற்றும் அவர்களுக்கான குடியிருப்பையும் ஒரே இடத்தில் கட்டிக்கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

எனது முதுகுளத்தூர் தொகுதி, கடலாடி ஒன்றியம், மூக்கையூர் குதிரைமொழி கிராமத்தில், முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு

[திரு. ச. பாண்டி] [2018 ஜூலை 5

அம்மா அவர்களால் விதி 110-ன்கீழ் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளன. அத்திட்டத்தினை விரைந்து ஆரம்பித்து, பொது மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் கிடைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுவாக, இராமநாதபுரம் மாவட்டமே ஒரு வறட்சியான பகுதி. மூன்று ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை, விவசாயம் கிடையாது. தொழிற்சாலைகளும் அங்கு அதிகமாக இல்லை. குடிநீர்ப் பஞ்சம் மிக அதிகமாக அங்கு இருக்கின்றது. நல்ல வேளையாக காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் துவங்கப்பட்டது. அந்தக் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்தான் இன்றைக்கு கைகொடுத்து, அங்குள்ள மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றது. அதேநேரத்தில் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வரக்கூடிய நீர் எல்லா கிராமங்களுக்கும் சென்றடையாமல் நெடுஞ்சாலைகளிலே பைப்புகள் அமைத்து, மக்கள் அங்கே சென்று தண்ணீர் பிடித்துக்கொள்கிறார்கள். அப்படி தண்ணீர் பிடிக்கின்றபோது, பைப்புகள் உடைக்கப்படுகின்றன; உடைந்த பைப்புகள் வழியாக தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது.

இன்று காலையில் 8-00 மணிக்கு எனது தொலைபேசியில், தண்ணீர் பிடிக்க நெடுஞ்சாலையைக் கடந்தபோது, அங்கு வந்த லாரி ஒன்று, மூன்று பேர்கள்மீது மோதி, சம்பவ இடத்திலேயே இரண்டு நபர்கள் இறந்து விட்டார்கள் என்றும், ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்றும் எனக்கு ஒரு செய்தி வந்தது. தூத்துக்குடி-இராமநாதபுரம் நெடுஞ்சாலைப் பகுதியில், கீழசெவ்வனூர், வாலிநோக்கம், விளக்குதாண்டி ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால், ஓடக்குளம் கிராமத்தில் அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. அதில் இருவர் இறந்து விட்டார்கள். ஒருவர் மட்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது விபத்துதான் என்றாலும்கூட, காலை நேரத்தில் 4-00 மணிக்கு தண்ணீர் பிடிக்க மக்கள் குடங்களைத் தூக்கிக்கொண்டு, சாலையைக் கடந்து தண்ணீர் பிடித்து வருகின்ற காரணத்தினால், மக்கள் மிகவும் துன்பப்படுகின்றார்கள். ஆகையினால் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்ட முறையை எல்லாக் கிராமங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில், பைப் வழியாகத்

2018 ஜூலை 5] [திரு. ச. பாண்டி]

தண்ணீர் கொண்டு செல்லும் அளவிற்கு விரிவாக்கம் செய்து கொடுத்தால் மிக நன்றாக இருக்கும்.

பொதுவாக மனிதனுக்குத் தேவை, உணவு, உடை, குடிக்க தண்ணீர். இந்த மூன்றும் கிடைத்த பிறகுதான் நாம் அறிவைத் தேடிச் செல்ல முடியும். ஆக, இந்த மூன்றையும் தர வேண்டியது ஓர் அரசினுடைய கடமை. இன்றைய சூழ்நிலையில், தமிழ்நாட்டில் எல்லா வகையிலும் வளர்ச்சி என்பது குறைவாக இருக்கின்றது. அந்த வளர்ச்சியைக் கொண்டு வருவதற்கு முடிந்த அளவிற்கு எல்லோரும் சேர்ந்து முயற்சி எடுத்தால்தான் சிறந்த ஒரு படைப்பை நாம் படைக்க முடியும். அந்த அடிப்படையில் எங்களுக்குத் தேவையான இந்தக் குடிநீர் வசதியை கண்டிப்பாகச் செய்து கொடுக்க வேண்டும்.

பிற்பகல் 2–30

கடலாடி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து சிக்கல் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஒன்றியம் அமைக்கப்பட வேண்டும். அது விதி 110-ன்கீழ் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. மக்கள் நலன் கருதி, அதை உடனடியாகப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்தில் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி குறைவாக உள்ளது என்று பதிவு செய்கிறார். அது உண்மை கிடையாது. பொருளாதாரத் துறையை எடுத்துக்கொண்டால் இந்திய வளர்ச்சி 7.1% இருந்தது என்றால், தமிழகத்தின் வளர்ச்சி 8.1% ஆகும். சென்ற வருடத்தில், இந்திய வளர்ச்சியைவிட 1% அதிகமாக நாம் வளர்ச்சியடைந்திருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன். ஒவ்வொரு துறையிலும், அதாவது மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது; கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. எல்லாத் துறைகளிலும் கடந்த வருடம் தமிழகம், இந்திய சராசரியைவிட அதிகமான வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

[2018 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வளர்ச்சி போதும் என்று நீங்கள் நினைத்தால் எனக்கும் அது சந்தோஷம்தான். ஏனென்றால், நான் பெரும்பாலும் வெளிநாட்டில், அதாவது, மலேசிய திருநாட்டிலே தொழில் செய்தவன். 1963–ல் அங்கு போக்குவரத்துக்கு ஏற்படுத்திய வசதி வாய்ப்புகளைப் பார்க்கும்போது, நாமெல்லாம் பின்தங்கியவர்கள், அவர்களெல்லாம் வளர்ச்சியடைந்தவர்கள் என்றுதான் சொல்லத் தோன்றும். அந்தளவுக்கு வெளிநாடுகளின் வளர்ச்சியைப் பார்த்து வந்தவன். அந்த வகையில் நம் நாடும் வளர்ச்சியடைய வேண்டும் என்ற ஆர்வத்தில் இதைச் சொல்கின்றேனே தவிர, வேறொன்றும் குறைபாடல்ல. ஆகையினால், கல்வியைச் சார்ந்த முறையில், கல்வித் துறையில் நாம் சிறப்பாக இருக்கின்றோம் என்பது பெரிய விஷயம். அதில் ஒன்றும் மாற்றமில்லை. அந்த வகையில் முதுகுளத்தூர் ஒன்றியம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதனால்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "மலேசியா பாண்டி" என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படுகிறார். வெளிநாடுகளைப் போலவே நம் நாடும் வளர வேண்டும் என்றும், பிற நாடுகளுக்கு வழிகாட்டுகின்ற வகையிலும் Vision 2023 என்கிற தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ வழங்கிய ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலேசிய திருநாட்டிலே 2020–ஐப் பாருங்கள் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 2020–ல் ரோடு வசதி ஐப்பானை மிஞ்ச வேண்டும் என்று அவர்கள் ஒரு திட்டத்தை எடுத்துக்கொண்டார்கள். அந்த அளவுக்கு ரோடு வசதியை

செய்யும் கொடுத்தார்கள். நாம் நினைக்கின்றோம், நினைப்பதைச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர வேறொன்றும் கிடையாது. அந்தவகையில் நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் ஒன்றியம், வெங்களக்குறிச்சி கிராமத்தில் அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அதிகம் வசித்து வருகின்றார்கள். பொதுவாக, நான் பேசும்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இருக்க வேண்டுமென்று நினைத்தேன். அவர்கள் சாப்பிடச் சென்றிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் உள்ள பள்ளிக்கூடக் கட்டடங்கள் எல்லாம் இடிந்த நிலையில் இருக்கின்றன. நான் பல இடங்களுக்குச் சென்று பார்த்தபோது, ஆசிரியர்கள் அந்தக் கட்டடத்தைவிட்டு மரத்தடியில் உட்கார்ந்து பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். வளர்ச்சியடைந்த இந்த காலகட்டத்தில் இப்படி இருப்பது நமக்கெல்லாம் ஒரு பெரிய குறையாகத் தோன்றுகிறது.

ஆகையினால், முதலில் நமக்குத் தேவை கல்வி. கல்வி, பொருளாதாரம் இரண்டும் நமக்கு இரண்டு கண்களைப் போன்றவை. அந்த இரண்டையும் பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமை. அதற்காக இந்த அரசு நிதிகளை ஒதுக்கி பள்ளிக்கூடங்களைச் சீரமைத்து, புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இதனைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும், இதில் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதிலும் என்னுடைய தொகுதி, மிகவும் பிற்பட்ட கிராமப் பகுதி. அந்தப் பகுதியிலே, காமராஜர் காலத்தில் கட்டப்பட்ட பள்ளிக்கூடத்தில் இன்னும் படித்துக் கொண்டிருக்கிறார்கள். 'காமராஜர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம்' என்றே பெயர் போட்டிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தைப் பார்த்தால், உள்ளே உடைந்து தொங்குகிறது. நான் படம்கூட எடுத்து வைத்திருக்கிறேன். ஆகவே, அந்தப் பள்ளிக்கூடக் கட்டடங்களைச் சீரமைத்துக் கொடுத்தால் நமக்கெல்லாம் பெருமையாக இருக்கும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

உயர் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், மிகச் சிறப்பான முறையில் நம் தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது. நானும் உயர் கல்வித்

[திரு. ச. பாண்டி] [2018 ஜூலை 5

துறையில் இருக்கின்றவன், படிக்காதவன்தான் என்றாலும்கூட, Engineering College, Arts and Science College, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, Matriculation school என்று எல்லா வகைப் பள்ளிகளையும் நடத்திக் கொண்டிருப்பவன். ஏனென்றால், அதில்தான் நாம் நற்பெயர் எடுக்க முடியும்; அதில் சம்பாதிக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆகையால்தான் நான் கல்வித் துறையைத் தேர்ந்தெடுத்து, அதில் மட்டும்தான் கவனம் செலுத்தியிருக்கின்றேன். கல்வித் துறை மிகச் சிறந்த முறையில் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒருசில பள்ளிக் கட்டடங்கள் பாழடைந்த நிலையில் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் 1 கிலோ மீட்டருக்கு மிகாமல் ஒரு தொடக்கப் பள்ளியும், 3 கிலோ மீட்டருக்கு மிகாமல் ஒரு நடுநிலைப் பள்ளியும், 5 கிலோ மீட்டருக்கு மிகாமல் ஓர் உயர்நிலைப் பள்ளியும், அதேபோல, 8 கிலோ மீட்டருக்கு மிகாமல் ஒரு மேல்நிலைப் பள்ளியும் அமைய வேண்டும் என்று சொல்லி, தனியார் பள்ளிகளுக்கு நிகராக கட்டடங்களையும், ஆய்வகங்களையும் வழங்கி, இன்றைக்கு அனைத்து கிராமப் பகுதி மாணவர்களும், தனியார் பள்ளிகளுக்கு நிகரான கட்டடங்களோடு இருக்கக்கூடிய அரசுப் பள்ளிகளில் படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கினார்கள். அதே நேரத்தில், மாணவர்கள் இடைநிற்றலைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, 14 வகையான பொருட்களைக் கொடுத்து, அனைத்து மாணவர்களும் பள்ளிக் கல்வியைப் பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே வேளையில், இந்த ஆண்டுகூட பள்ளிக் கல்வித் துறைக்கு 27,205 கோடியே 88 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, அந்தத் துறையை சிறந்த முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசாக மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரு பள்ளிக் கட்டடம் பழுதடைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அது எந்தப் பள்ளிக் கட்டடம் என்று குறிப்பிட்டு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கினால், அந்த இடத்தில் தேவைப்படுகின்ற பள்ளிக் கட்டடங்களை வழங்குவதற்கான வாய்ப்பினை அவர் உருவாக்கித் தருவார் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது சில பள்ளிக் கட்டடங்களின் கூரைகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். ஒரு வார காலத்திற்குள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள், திருவாகப் பொறியாளர்களை அந்த இடத்திற்கு அனுப்பி, உறுப்பினர் தொகுதியில் எந்தெந்தப் பள்ளிகளில் அந்த நிலைமை இருக்கின்றதோ, அவை அனைத்தையும் ஆய்வு செய்து, அது தொடக்கப் பள்ளியாக இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் நிதியிலிருந்தும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக இருக்குமேயானால், அப்பள்ளிகள் இந்த ஆண்டு நபார்டு திட்டத்தில் இணைக்கப்பட்டு, மிக விரைவில் பராமரிப்புப் பணிகள் அனைத்தும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: உடனடியாக என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதைச் செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. அந்த வகையில் அவர்களுக்கும், இந்த ஆட்சிக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. ச. பாண்டி] [2018 ஜூலை 5

என்னைப் பொறுத்தமட்டில், பொதுவாக நான் தமிழ்நாட்டில் முடிந்த அளவிற்கு மக்கள் சேவையை ஆற்றுவதற்கு மட்டுமே என்னைப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றேன். வெளிநாட்டிலே தொழில் செய்து, வெளிநாட்டிலே பொருளாதாரத்தை ஈட்டி, அந்தப் பொருளாதாரத்தை இங்கே கொண்டுவந்து, இங்கேயும் கல்வி சார்ந்த துறையில் அதை ஈடுபடுத்தி நான் மக்களுக்கு சேவை ஆற்றிக்கொண்டிருக்கிறேன். அது எனக்கு மன நிறைவை அளிக்கின்றது.

நான் பலமுறை இந்த அவையில் சுட்டிக்காட்டியதுபோல், ஒரு சட்டமன்ற உறுப்பினரானால்தான் அமைச்சராக ஆக முடியும். ஆகவே, அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்கள்தான். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன மரியாதை இருக்கிறது என்பதை வெளியில் சென்று பார்க்கும்போது சற்று வருத்தமாகவே இருக்கிறது. எந்த ஒரு துறைக்கு நாம் சென்று பார்த்தாலும், அங்கு நமக்கு தகுந்த மரியாதை கொடுக்கப்படுவதில்லை. அந்த மரியாதையைக் கொடுக்க வேண்டும். நான் இதை என்னுடைய சுயநலத்திற்காகக் கேட்கவில்லை. பொதுவாகவே, பொது நலன் கருதி நாம் செய்கின்ற சேவையில், நமக்கெல்லாம் அந்த மரியாதையைக் கொடுத்தால்தான், ஒரு தனி அதிகாரத்தைக் கொடுத்தால்தான் நம்மால் செயல்பட முடியும் என்பதை இந்த அவைக்கு நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதையைத் தர வேண்டும் என்ற கருத்தை இங்கே பதிய வைத்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதிக்கு சட்டமன்ற அலுவல் காரணமாகச் செல்கின்றாரோ, அதற்கு முன்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தகவல் சொல்லிவிட்டு அவர்கள் அங்கு சென்றார்கள் என்றால், அதற்குரிய அலுவலர்களை அவர்கள் அனுப்பி வைப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது பகுதிகளுக்கோ அல்லது வேறு பகுதிகளுக்கோ செல்வதற்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தகவல் தெரிவித்துவிட்டுச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். 14 நிமிடங்கள் முடிந்துவிட்டன. நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 14 நிமிடங்கள் நிறைவடைந்துவிட்டன.*

திரு. ச. பாண்டி: *நான் எப்பொழுதுமே நன்றி என்று சொல்லிவிட்டு உட்கார்ந்துவிடுவேன். உங்களுக்குத் தொல்லை கொடுக்க மாட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

திரு. ச. பாண்டி: *இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. ** என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள வேண்டும். ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

திரு. ச. பாண்டி: ****

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மீண்டும் சொன்ன அந்த வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவ்வாறெல்லாம் இந்த அவையில் பேச முடியாது.*

திரு. ச. பாண்டி: *** என்றுதானே சொன்னேன்.*

பிற்பகல் 2—40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அதெல்லாம் இங்கு பேச முடியாது. நீங்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு subject குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் பேச முடியாது. வேறு எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. மற்ற உறுப்பினர்கள் பேசினார்களே, அதேமாதிரி பேசுங்கள். அதையெல்லாம் mention செய்ய முடியாது. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2018 ஜூலை 5

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலாடி ஒன்றியம், ஏர்வாடி ஊராட்சி சுமார் 20,000 மக்கள்தொகை கொண்டது. புகழ்பெற்ற தர்கா அங்கு உள்ளது. அங்கு தர்கா அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மக்கள் அதிகமாக வந்து செல்கின்றனர். எனவே, ஏர்வாடி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை நிறைவு செய்யுங்கள்.

திரு. ச. பாண்டி: அதேபோல் 15,000 மக்கள்தொகை கொண்ட கடலாடியில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உள்ளன. ஆகவே, கடலாடியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஆகும். அதில், சட்டமன்ற உறுப்பினர் தனது விருப்பத்தின்பேரில் 1 கோடி ரூபாயைப் பயன்படுத்த வேண்டுமென்றும், 1 கோடியே 50 இலட்சம் ரூபாயை வேறு விதப் பணிகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் சொல்கின்றார்கள். பொதுவாக மக்களெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களிடம்தான் எல்லாவற்றையும் கேட்கிறார்கள். வேறு யாரிடமும் கேட்பதில்லை. தினமும் 10 பேர், 20 பேர் என் வீட்டுக்கு வந்து இதைச் செய்து கொடுங்கள், அதைச் செய்து கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இந்த இரண்டரை கோடி ரூபாய் போதாது. அதில் ஒன்றரை கோடி ரூபாயை நீங்கள் சொல்கிற வேலைக்கு எடுத்துக்கொண்டீர்களென்றால், எங்களிடம் வரும் மக்களுடைய மனநிலையை நாங்கள் எப்படி மாற்றியமைக்க முடியும்? எப்படி அவர்களுடைய குறைபாடுகளைத் தீர்க்க முடியும்? பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி இரண்டரை கோடி ரூபாய் என்பதை ஐந்து கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்

2018 ஜூலை 5] [திரு. கரி. இராமசாமி]

இப்பொழுது norms வைத்திருக்கிறார்கள். நான் முதலிலேயே பணிகள் குறித்து Collector–க்கு letter கொடுத்துவிட்டேன். இப்பொழுது என்னவென்றால் norms வந்துவிட்டது, norms-படிதான் செய்ய வேண்டுமென்று நான் கொடுத்த கடிதத்தை வைத்து Administrative Sanction கொடுக்காமல் reject செய்கிறார்கள். இது என்ன? யார் இதைக் கொடுக்கிறார்கள்? எப்படி இது வருகின்றது? எப்படி இந்த norms தயார் செய்கிறார்கள்? நான் தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிறேன். எனக்குத் தெரியும். Complete ஆக எல்லாமே அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அரசாங்கம் எதற்குச் செலவு செய்ய வேண்டுமென்று நினைக்கிறதோ, அதற்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியை எடுத்துக்கொள்கிறது. இது என்ன நியாயம்? நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நீங்கள்தான் அதற்குப் பொறுப்பு. நீங்கள் எங்களுக்கு அனுமதி கொடுங்கள். அவ்வளவுதான், வேறு ஒன்றும் கிடையாது. அதையெல்லாம் release செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Tied fund and Untied fund என்று ஒதுக்கிக் கொடுக்கிறார்கள். அது உங்கள் தொகுதிக்குள் நீங்கள் பரிந்துரை, சிபாரிசு செய்த வேலைக்குத்தான் கொடுக்கிறோம். Government அந்த நிதியை எடுத்து வேறு தொகுதிக்கோ அல்லது அவர்கள் இஷ்டப்பட்ட வேலைகளுக்கோ. . . (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். அவர்கள் இஷ்டப்பட்ட வேலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுப்பதில்லை. அதாவது குடிநீர்த் திட்டம் என்றால், அந்தக் குடிநீர்த் திட்டத்தில் உங்கள் தொகுதிக்குள் உள்ள பணிகளுக்கு 50 அல்லது 60 இலட்சம் ரூபாய் என்று ஏதோ ஒரு தொகையை ceiling ஆக வைத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) சரி, 1.50 கோடி ரூபாய் என்றே வைத்துக்கொள்ளலாம். போன வருடம் வறட்சி இருந்ததால் 164 கோடி ரூபாய்க்கு திட்டம் போட்டது போதாமல் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிதியிலிருந்து பணி எடுத்துச் செய்யப்பட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஒட்டுமொத்த கோரிக்கையினை

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜூலை 5

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி உரிய முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பாண்டி அவர்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2016–2017 ஆம் ஆண்டில் என்னுடைய தொகுதியில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருந்த காரணத்தினால். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னையில் சில பணிகளுக்கு வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவு செய்ய முடியவில்லை என்ற கோரிக்கை வரப்பெற்றிருக்கிறது. அப்படி இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதப்பட்டு, அவர் அரசுக்குப் பரிந்துரை செய்யும்பட்சத்தில் அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படும் என்ற ஷரத்தும் அதில் இருக்கிறது. (குறுக்கீடு) சென்னைக்கு Corporation Commissioner–தான் authority. Corporation Commissioner–க்கு எழுதி, அவர் அரசுக்கு எழுதி permission வாங்கி, அனுமதி வாங்கிக் கொடுக்கலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: சென்னைக்கு மட்டும் Corporation Commissioner; மற்ற மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2–45

திரு. ச. பாண்டி: 2016 ஆம் நிதியாண்டில் கிட்டத்தட்ட 43 கிராமங்களில் தண்ணீருக்காக bore well போட வேண்டுமென்று

எழுதிக் கொடுத்தேன். அவ்வளவு நிதியையும் ஒரே செயல்பாட்டிலே நான் செய்தேன். அதற்கடுத்து மற்ற மக்கள் தேவைக்குச் செய்தேன். ஆனால், இந்த முறை எனக்குக் கிடைத்திருப்பது, என்னுடைய விருப்பப்படி செயல்படக்கூடிய பணியானது ஒரு கோடி ரூபாய்க்குத்தான். ஆனால், என்னிடம் 10 கோடி ரூபாய்க்கான வேலையைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. வேண்டுமென்றால் ஒவ்வொரு அமைச்சரிடமும் சொல்லுங்கள் எனச் சொல்லலாம். அந்த அளவிற்குத்தான் நான் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, எங்களுடைய கஷ்ட நஷ்டங்களை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, கிராமத்து மக்களிடம் நான் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. 5-00 மணிக்கெல்லாம் phone செய்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், 21 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. தயவுசெய்து உரையை முடியுங்கள்.

திரு. ச. பாண்டி: கிராமத்து மக்கள் எல்லாம் 5-00 மணிக்கு தண்ணீர் வரவில்லை என்று phone செய்கின்றார்கள். இன்றைக்கு 4-00 மணிக்கு தண்ணீர் எடுக்கச் சென்றவர் ** குடிதண்ணீர் எடுக்கச் சென்றவர் 4-00 மணிக்கு **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விஷயங்கள் எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.

திரு. ச. பாண்டி: சரி. Right. அப்பொழுது தண்ணீருக்குள் செல்ல வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தண்ணீர் குறித்துப் பேசுங்கள். தண்ணீர் குறித்துப் பேச வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்குப் பிறகு சொன்ன விஷயம்தான் வேண்டாம் என்றேன்.

திரு. ச. பாண்டி: சட்டமன்ற உறுப்பினர்களுடைய முழு நிதியையும் சட்டமன்ற உறுப்பினருடைய விருப்பம் போல செயல்படுத்துவதற்கு உங்களுடைய அனுமதியையும், ஆதரவையும், ஒத்துழைப்பையும் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2018 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள்.

திரு. ச. பாண்டி: நன்றி சொல்லிவிடவா? நன்றி, வணக்கம். வாழ்க வளமுடன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 50 இலட்சம் ரூபாய் உயர்த்தி கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள். ஆனால், G.S.T. 12 சதவிகிதம் கட்டுவதிலேயே 30 இலட்சம் ரூபாய் போய் விடுகிறது. அதேபோல, aided பணிகளுக்கும் இந்த நிதியை பயன்படுத்த முடியுமா என்று தெரியவில்லை. அதேபோல schedule of rates–ம் உயர்ந்து விட்டது. ஆகவே, இந்த இரண்டரை கோடி ரூபாயில், 50 இலட்சம் ரூபாய் உயர்த்தியது, இதற்குத்தான் போயிருக்கிறது. ஆகவே, இந்த முறை மீண்டும் அதனை உயர்த்தித் தருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிடத்தினுடைய பேரொளியாய் விளங்கி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள். திரு. ச. பாண்டி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ச. பாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக பத்திரிகைச் செய்திகளை நாம் பார்க்க வேண்டும். அந்தப் பத்திரிகைச் செய்திப்படி பார்க்கும்போது, நம்முடைய அரசினுடைய. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள். ஏதோ புது சப்ஜெக்ட்டிற்கு போகின்றீர்களே! (குறுக்கீடு) அவர் எழுந்து வாய்ப்புக் கேட்டார். அதனால், வாய்ப்புக் கொடுத்தேன்.

திரு. ச. பாண்டி: நன்றி, வணக்கம். வாழ்க வளமுடன்.

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிடத்தினுடைய பேரொளியாய் விளங்கி தமிழ் மண்ணில் உச்சம்தொட்ட உலகம் போற்றும் ஒப்புயர்வற்ற தலைவர், மறைந்தும் மறையாமல் மக்கள் மனதில் குடிகொண்டுள்ள மாணிக்கத் தலைவர் மக்கள் திலகம் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நினைவைப் போற்றி வணங்குகின்றேன்.*

திராவிடத்தின் திருவிளக்கு, தமிழினத்தின் மணி விளக்கு, ஏழைகளின் ஒளி விளக்கு, எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிரந்தரமாகச் சுடர்விடும் அணையா விளக்கு, அன்பு, பாசம், பரிவு, கனிவு, தெளிவு, துணிவு, உழைப்பு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, வீரம், விவேகம், வியூகம் என அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி, இந்தத் தமிழ் தேசத்தையும், எங்களையும் வழிநடத்திய வீரத் தாய், சாதனைகளின் சங்கமமாய், சத்தியத்தின் மறுவடிவமாய், சரித்திரம் பல படைத்திட்ட எங்கள் சகாப்தம், சூழ்ச்சி வலைகளை அறுத்தெறிந்து, சுற்றி நின்ற பகை முடித்து, சூரியக் கதிர் எரித்து, சுடர் முகம் காட்டி, நாளும் உழைத்து, நல்லவை செய்து, நலிந்த மக்களுக்கு நல்வழி காட்டிய எங்கள் நந்தா விளக்கே, நாடும் மக்களும் என் சொந்தம் என நாளும் உழைத்திட்ட எங்களின் இயாகத் தாய், நாங்கள் நித்தம் வணங்கும் எங்கள் குல தெய்வம் அம்மா அவர்களின் நினைவிடம் நோக்கி என் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்கி வணங்குகின்றேன்.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடி பிடிக்கும் தொண்டரையும் முடிவெடுக்கும் அதிகாரமிக்கப் பதவியிலே அமர்த்தி அழகு பார்த்தவர் எங்கள் அம்மா. போஸ்டர் ஒட்டிய தொண்டர்களுக்கும் பல உயர் பொறுப்புகளை வழங்கி, அரசியலில், ஆண்டான் அடிமை, உயர்ந்தவன் தாழ்ந்தவன், படித்தவன் பாமரன் என்ற பாகுபாடுகளைக் கடந்து, எல்லோரும் சமம் என்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து அரசியல் புரட்சியை உருவாக்கியவர் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அறிவும் ஆற்றலும் மிக்க அம்மாவின் போர்ப் பாசறையில் பயிற்சி பெற்ற வீர சிப்பாய்கள்தான் எங்கள்

[திரு. அ. ராமு] [2018 ஜூலை 5

அன்பு அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களும், அருமை அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களும். (மேசையைத் தட்டும் ஒலி) வெட்டி வா என்றால், கட்டி வந்து காலடியில் கிடத்துகின்ற ஆற்றல்மிகு மறவர்கள் நம் கழகத்தின் இரட்டையர்களாகத் திகழும் சேலம் தந்த கொள்கைத் தங்கம் அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கும், தேனி தந்த திராவிடத் தங்கம் அண்ணன் மாண்புமிகு திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்கள்.

கோவை மாவட்டம் மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழகத்தின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு, உள்ளாட்சியிலும் நல்லாட்சி வழங்கி வருகின்ற கோவை மண்டலத்து முத்துமணியான எங்களின் அருமை அண்ணன் மாண்புமிகு அமைச்சர் திரு. வேலுமணி அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்கி, நீலகிரி மாவட்ட கழகச் செயலாளர், மாநிலங்களவை உறுப்பினர் மாண்புமிகு திரு. கே.ஆர். அர்ஜுனன் அவர்களையும் வணங்கி, எனது வெற்றிக்கு வழிவகுத்த குன்னூர் சட்டமன்றத் தொகுதி மக்கள் மற்றும் கழக உடன்பிறப்புகளையும் மனதார வணங்குகிறேன். இதய தெய்வம் அம்மா அவர்கள் கண்டெடுத்த அருமைக்குரியவர், நேர்மையோடும், திறமையோடும், நடுநிலை தவறாமலும் பேரவையை நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவருக்குத் துணையாக இருந்து கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் பேரவையை நடத்திச் செல்கின்ற மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமக்கு வரலாறு முக்கியம். வரலாற்றை மறந்தவர்கள் எவரும் வாழ்வில் வெற்றி பெற்றதில்லை. தமிழ்நாட்டின் வரலாறு என்பது தமிழ்மொழியின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்தது. இந்த அவையில் எதிர்க்கட்சித் தரப்பில் பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், பழைய நினைப்பில் மஞ்சள் தேய்த்துக் குளிக்கும் பாட்டி போல பழங்கதை பேசுகிறார்கள். உப்பில்லாமல் அம்மியை விழுங்குவேன், உப்பைத் தொட்டால் உரலை விழுங்குவேன் என்று மார்தட்டித் திரிகிறார்கள். இனி ஆட்சிக்கு

2018 ஜூலை 5] [திரு. அ. ராமு]

வருவதற்கு வாய்ப்பே இல்லை என்பதால், 70, 80, 90–களில், அவர்கள் ஆட்சியில் நடந்த பலவற்றை இங்கே பட்டியலிட்டு தங்களை ஆறுதல்படுத்திக்கொள்கிறார்கள். (குறுக்கீடுகள்) எங்களுக்கும் அந்தப் பழம்பெருமை உண்டு என்பதை எடுத்துக்காட்டும்வகையில், கழகம் ஆட்சியமைத்த ஆரம்ப காலங்களில் நடைபெற்ற ஒருசில சம்பவங்களை, ஒன்றிரண்டு சாதனைகளைச் சுட்டிக்காட்டி அதன் பின்னர் மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில் பங்கேற்க விரும்புகின்றேன். (குறுக்கீடுகள்)

தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்நாட்டிற்கும் ஒட்டுமொத்த குத்தகைதாரர் நாங்கள்தான் என சிலர் இன்றும்கூட பேசித் திரிகிறார்கள். (குறுக்கீடுகள்) அவர்களையெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில்தான் பாரதியார், பாரதிதாசன், அன்னை தெரசா பெயர்களில் பல்கலைக்கழகங்கள் அமைந்தது மட்டுமின்றி, தமிழ் மொழிக்கென தஞ்சையில் தனிப் பல்கலைக்கழகமும் அமைந்தது. பெரியாரது சீர்திருத்தத்தை அமல்படுத்தியவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான். மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ்ச் சங்க மாநாட்டை நடத்தியதுடன், தமிழன்னைக்கு சிலையும், ஐந்தாம் தமிழ்ச் சங்கமும் அமைத்தவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதுமட்டுமல்ல, தன்னிறைவுத் திட்டம் கொண்டுவந்து, கிராமங்களில் சாலை வசதி, மின் விளக்கு வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியவர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். காடா விளக்கு, மண்ணெண்ணெய் சிம்னி விளக்குகளை மட்டுமே கண்டுகொண்டிருந்த குடிசைகளுக்கு 'ஒரு விளக்கு' திட்டம் கொண்டுவந்து, மின்னொளி பாய்ச்சியவர் புரட்சித் தலைவர் அவர்கள். முதன்முதலில் சிறு விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டு வந்தார். உலக வங்கி, UNICEF உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும், அன்னை தெரசா அவர்களும் பாராட்டிய அதிஅற்புத சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த வள்ளலின் நேரடி வாரிசாக அரசியல் களத்திற்கு வந்த நம் இதய தெய்வம் அம்மா அவர்களின் சாதனைகளைப் பட்டியலிட்டால், அவை கணக்கிலடங்காது, அதற்குக் காலமும் இடம் தராது.

[திரு. அ. ராமு] [2018 ஜூலை 5

குறிப்பாக, தொட்டில் குழந்தைத் திட்டம், அனைத்து மகளிர் காவல் நிலையம், மழைநீர் சேகரிப்புத் திட்டம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா குழந்தைகள் நலப் பெட்டகம் உள்ளிட்ட அருமைமிகு அம்மா திட்டங்கள் என சாதனை படைத்திட்ட சரித்திரத் திட்டங்கள் தொடரும். அதுமட்டுமல்ல, எண்ணற்றத் திட்டங்கள் தமிழ்நாட்டிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மக்களின் நலனுக்காகவும், இந்த மாநில வளர்ச்சிக்காகவும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் பாடுபட்டதுபோல, அவர்களது வழிநின்று, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என பணியாற்றுகின்ற அம்மாவின் வழியில் நடைபெறும் நல்லரசில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசுவதற்குக் கிடைத்த இந்த வாய்ப்பிற்காக மாண்புமிகு முதல்வர் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசு கொறடா அவர்களுக்கும் நன்றி கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, இப்போதுதான் தொடங்குகிறீர்களா, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மலைகளின் அரசியான ஊட்டி பிரதேசத்தில், குன்னூர் மலைவாசஸ்தல தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தப் பேரவைக்கு வந்துள்ள நான் இந்தத் தொகுதி மக்களின் முக்கிய கோரிக்கைகளில் சிலவற்றை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 40–க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் இருக்கின்றன. ஆனால், ஒருசில, கோரிக்கைகளை மட்டும் இந்த அவையிலே பதிவு

2018 ஜூலை 5] [திரு. அ. ராமு]

செய்கிறேன். மற்ற கோரிக்கைகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரிவாழ், ஆதி குடி படுகர் சமுதாயத்தினரின் கோரிக்கையை ஏற்று, சமூக நீதி கிடைத்திட, அவர்களை பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக, நீலகிரி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான பச்சைத் தேயிலைக்கு நிரந்தர விலை பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். முக்கியமான கவனத்திற்கு, இன்றைக்கு தரமான சி.டி.சி. ரக தேயிலைத் தூள் ஒரு கிலோவுக்கு 130 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆனால், சில்லறை வியாபாரத்தில் அதே தேயிலைத் தூள் ஒரு கிலோவுக்கு 300 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை விற்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அனைத்துத் தேயிலை சிறு, குறு விவசாயிகளுக்கு 2 ரூபாய் வீதம் மானியத் தொகை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குன்னூர் பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்தை அவ்விடத்திலிருந்து மாற்றி, பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்து கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த முத்தான திட்டங்களில் ஒன்றான குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் குடிநீர்க் குழாய்களைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.4.5 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து தந்தமைக்கு அன்புக்குரிய குன்னூர் நகர்வாழ் மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். மேலும், அப்பணியை விரைவில் நிறைவேற்றிட உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மக்களின் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய திட்டங்களில் மகத்தான திட்டமான கோத்தகிரி, அளக்கரை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் எமரால்ட் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன; கூடிய விரைவில் அவை முடிவடையும் நிலையில் இருக்கின்றன. அதை மாண்புமிகு முதல்வர்

[திரு. அ. ராமு] [2018 ஜூலை 5

அவர்கள் தங்கள் கரங்களால் திறந்து வைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கோத்தகிரி, ஜக்கனோரை ஊராட்சியில் அமைந்துள்ள அரவிந்த் பஜாரில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் பழமையான, ஊராட்சிக்குச் சொந்தமான பாதுகாப்பற்ற கட்டடத்தை அகற்றி, அங்கு பேருந்து நிலையத்துடன்கூடிய வணிக வளாகம் அமைத்துத் தர பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள குன்னூர் தீயணைப்பு நிலையத்தை, அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்கு மாற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மீதமுள்ள கோரிக்கைகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, முடிவுரையைச் சொல்லுங்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சப்ஜெக்ட்டே பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, subject எல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நீங்கள், நன்றி சொல்லுங்கள்.

திரு. அ. ராமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதித் துறையைப் பொறுத்தவரை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாகவும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாகவும், மேலும் பல சிறப்புத் திட்டங்கள் மூலமாகவும் நம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல இலட்சக்கணக்கானவர்களின் சொந்த வீடு கனவை நனவாக்கி வருகிறது. அந்த வகையில், எனது குன்னூர் தொகுதிக்கு சுமார் 50 கோடி ரூபாய் மதிப்பிற்கு நிதி ஒதுக்கித் தந்தமைக்காக நன்றி கூறிக்கொள்கிறேன். தமிழகத்தில் குடிசைகளற்ற கிராமங்களையும், குடிசைப் பகுதிகளற்ற நகரங்களையும் உருவாக்க வேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் இலட்சியமாக இருந்தது. இந்த இலட்சியக் கனவை நனவாக்க மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அரசு தொடர்ந்து செயல்பட்டு வருவது பாராட்டத்தக்கது. ஏற்கெனவே கடந்த நிதியாண்டில், 2,276 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1 இலட்சத்து 30 ஆயிரம் வீடுகளைக்

2018 ஜூலை 5] [திரு. அ. ராமு]

கட்ட அனுமதி வழங்கிய நம் அம்மா அவர்களுடைய வழியில் நடைபெறும் அரசு, நடப்பாண்டிலும் அதேபோல 1 இலட்சத்து 30 ஆயிரம் வீடுகள் கட்டப்படும் என அறிவித்திருப்பது ஏழையெளிய, நடுத்தர மக்களின் சொந்த வீடு கனவை நனவாக்கும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சூரிய ஒளி மின் வசதியுடன்கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ் 420 கோடி ரூபாய் செலவில் 20 ஆயிரம் வீடுகள் கட்ட திட்டமிட்டிருப்பதும் வரவேற்கக்கூடியது. இந்த ஆண்டு ஊரகப் பகுதிகளுக்கு, வீட்டு வசதித் திட்டத்திற்காக 2,696 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை மக்கள் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறார்கள். நகர்ப்புறங்களில் வசித்து வருகின்ற 13 இலட்சத்து 92 ஆயிரம் வீடுகள் இல்லா ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகளுக்கான தேவையுள்ளதைக் கண்டறிந்த நம் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த தொலைநோக்குத் திட்டம் 2023-க்குள் வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுக்குரியது.

பிற்பகல் 3-00

பிரதம மந்திரி நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 16,776 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் இதுவரை 4 இலட்சத்து 25 ஆயிரம் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இந்த ஆண்டும், இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் குடியிருப்புகளைக் கட்ட நடவடிக்கை எடுத்திருக்கும் நம் அம்மாவின் அரசு, அனைவருக்கும் வீட்டு வசதி என்கிற திட்டத்தை நிச்சயம் விரைவிலே நிறைவேற்றும் என்பது உறுதி. குடிசை மாற்று வாரியத்தின் அங்கிகாரம் செய்யப்பட்ட கட்டமைப்புள்ள பகுதிகள் நிலப் பாகுபாடு காரணமாக கிரையப் பத்திரம் வழங்கப்பட்டும், பட்டா வழங்கிட முடியாமல் உள்ளதாகத் தெரிகிறது. அதற்கான விதிமுறைகளை ஆய்வு செய்து, ஏழை வீட்டு உரிமையாளர்களுக்கு விதிவிலக்கு அளித்து, கிரையம் மற்றும் பட்டா வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அரசாணை எண் 23, நாள் 13-3-2018-ன்படி புதிய சிறப்பு முயற்சிகள் என்ற நோக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அரசின் வளர்ச்சித் திட்டங்களைத் துரிதப்படுத்துதல், அதேபோல, தொடர இயலாத முயற்சிகளாயின் அவற்றைக் கைவிடத் தீர்மானிப்பது

[திரு. அ. ராமு] [2018 ஜூலை 5

போன்றவை புதிய சிறப்பு முயற்சிகளாகும். அதன்படி நிலம் கையகப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்த்தல், நில மாற்றம் செய்வதை முறைப்படுத்துதல், தண்ணீர்த் தேவைக்காக நீர்நிலைகளை முறைப்படுத்துதல், பொதுமக்களுக்கு அரசால் வழங்கப்படும் சேவைகள் சீரிய மற்றும் நேர்மையான முறையில் சென்றடைய வழிவகுத்தல் ஆகியவை சிறப்பானதாகும்.

சிறப்பு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மண் வளப் பாதுகாப்பு, வனம் மற்றும் சூழலியல், தோட்டக்கலை, வேளாண்மை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கால்நடைப் பராமரிப்பு, ஊரகச் சாலைகள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளில் இடைவெளியை நிரப்பும் பணிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர் வள மேம்பாடு மற்றும் மீன் வளம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து வருவது மிகவும் சிறப்பானது. (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்து விடுகிறேன். இந்தச் சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் மலைப் பகுதிகளுக்கு குறிப்பாக, நீலகிரி மாவட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தருவது மிகவும் சிறப்பானது.

சென்னையில் கட்டப்பட்டு வரும் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தவணை முறையில் பணம் கட்டினால் குடியிருப்புகளை ஒதுக்கித் தர வேண்டுமென்பது எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய எண்ணம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருவாய் ஆய்வாளர் அந்தஸ்தில் உள்ள ஒருவரை உதவியாளராக அரசே நியமனம் செய்தால் அரசு அலுவலகங்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நல்ல தொடர்பை ஏற்படுத்த முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அரசே அவர்களை நியமனம் செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

2018 ஜூலை 5] [திரு. அ. ராமு]

தொகுதிக் கோரிக்கைகள்:

நீலகிரி மக்களின் நீண்டகால கோரிக்கையான பச்சை தேயிலைக்கு நிரந்தர விலை பெறுவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அனைத்து தேயிலை, குறு, சிறு விவசாயிகளுக்கு ரூ.2 வீதம் மானியத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரி, ஜக்கனாரை ஊராட்சி, அரவேனு பகுதியிலுள்ள பழமைவாய்ந்த அரசு நூலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர், மேலூர் ஊராட்சி, கொலக்கம்பை பகுதியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோத்தகிரி பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குன்னூர் நகராட்சிப் பகுதியில் பார்கிங் வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர் நகராட்சி, 29–வது வார்டு, காந்திபுரம் பகுதியில் உள்ள வீடுகள் சாய்வான பள்ளத்தில் அமைந்துள்ளதால் தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கோத்தகிரி, கொணவக்கரை ஊராட்சி, புதூர் என்ற ஊருக்கு சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோத்தகிரி–குன்னூர் வரை அரவேனு, அளக்கரை வழியாகச் சென்று வர புதிய வழித்தடம் ஏற்படுத்தி, புதிய பேருந்து இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோத்தகிரியில் ஏற்கெனவே நடைமுறையிலிருந்து நிறுத்தப்பட்ட பேருந்து வழித்தடத்தை, கோத்தகிரி–பாலக்காடு வரை மீண்டும் புதுப்பித்து புதிய பேருந்துகளை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோத்தகிரி வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பேருந்து பணிமனையை அரசு ஒதுக்கிய இடத்தில் மாற்றித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கோத்தகிரி, குஞ்சப்பண்ணை ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கேத்தரின் நீர்வீழ்ச்சிப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி அடிப்படை வசதிகள், நடைபாதை, பாதுகாப்பு அரண்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. ராமு] [2018 ஜூலை 5

நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி வனக் காடுகள். நிலத்தடி நீரை உறிஞ்சக்கூடிய கற்பூர மரங்கள் (யூகலிப்ட்ஸ்), சீகை எனப்படும் வெட்டல் மரங்களை அகற்றி, நீராதாரத்தைத் தரக்கூடிய நாட்டு மரங்களை வளர்க்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர், தெங்குமராஹாடா ஊராட்சியில் ஆற்று வெள்ளத்தை கடந்துசெல்ல நிரந்தரமான தொங்கும் பாலம் போர்க்கால அடிப்படையில் அமைத்துத் தர வேண்டும். குன்னூர் நகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள சுமார் 900-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு மாஸ்டர் பிளான் திட்டத்தின்கீழ் முழு வரைபட அங்கிகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குன்னூர், சித்தி விநாயகர் தெரு, 19-வது வார்டு, அபாயகரமான பகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ள வீடுகளுக்கு, குன்னூர் நகராட்சிப் பகுதியில் குடிசை மாற்று வாரியத் திட்டத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தால் அங்கிகாரம் செய்யப்பட்டு, கட்டமைப்பு உள்ள பகுதிகள் நிலப் பாகுபாடு காரணமாக கிரையப் பத்திரம் மற்றும் பட்டா வழங்கப்படாமல் உள்ளது. அதற்கான விதிமுறைகளை ஆய்வு செய்து, ஏழை வீட்டு உரிமையாளர்களுக்கு விதிவிலக்களித்து கிரயம் மற்றும் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாபெரும் திராவிடத் தலைவர்களின் வழித் தோன்றுதலால் இங்கே வீற்றிருக்கும் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களும், மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களும், இந்த ஆட்சியையும், கட்சியையும் கண் எனக் காத்து வருகின்றார்கள்; இதை வீழ்த்தி விடலாமென எண்ணுபவர்களே வீழ்ந்து போவார்கள்; மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆன்மா நிச்சயம் அவர்களை வீழ்த்தும் எனச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர்

2018 ஜூலை 5] [திரு. அ. ராமு]

அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மீண்டும் என் நன்றியைச் சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இப்போது நேரம் 3–00 மணி, 3 நிமிடங்கள் ஆகின்றன. உங்களுக்குப் பிறகு இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். எனவே, ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதற்கண் எனக்கு . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஆக்கபூர்வமான கருத்துகளைச் சொல்லுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: முதலிலே உங்களுக்கு என்னுடைய வணக்கத்தை உரித்தாக்குகிறேன். பாலை தமிழ் நிலத்தைப் பசுமையாக்கிய பகலவன், சாலைவாசிகளை அடுக்குமாடியில் அமர வைத்த ஆதவன். குடிசைவாசிகளின் வாழ்வில் குன்றின்மேல் விளக்கேற்றிய கொற்றவன். அவர்தான் தலைவர் கலைஞர். அவர் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–05

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது என்னைப் பேசப் பணித்த அன்னைத் தமிழகத்தின் அவலம் தீர்க்க வந்த எங்கள் அமுதம்; நாகரிக அரசியலை நாட்டிற்கே கற்றுத் தந்த சிகரம்; அடக்குமுறைக்கு அஞ்சாத நெஞ்சகம்; நேர்மை அரசியலின் புத்தகம்; தாய்மைக்கு நிகரான தத்துவம், அவர்தான் எங்கள் செயல் தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில சுயாட்சிக்குப் பங்கம் என்றவுடன், போராடுகின்ற தன் இயக்கத்தவர்கள் கைது செய்யப்பட்டவுடன், தானே களம் இறங்கிப் போராடிய பிறகு, ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை என்ற அச்சுறுத்தல் வந்த பிறகு, 'ஏழு ஆண்டுகளல்ல, நெல்சன்

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜூலை 5

மண்டேலாவைப்போல் காலம் முழுவதும் சிறை இருக்கத் தயார்; நான் களத்திற்கு வருவேன் (மேசையைத் தட்டும் ஒலி) மாநில சுயாட்சியைக் காப்பதற்கு' என்று ஓங்கிக் குரல்கொடுத்த, தன்மான இயக்கத்தின் சுடரொளி எங்கள் செயல் தலைவரை (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் ஒருமுறை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று எட்டு மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதம் நடைபெறுகிறது. இந்த விவாதத்தின் எல்லைக்கோட்டிற்கு வெளியே செல்லாமல், இதன் எல்லைக்கோட்டிற்குள்ளாகவே என்னுடைய கருத்துகளைப் பதிவுசெய்கிறேன். அருமை அண்ணன், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் சொல்வார், 'நீ சிரித்தால் நான் சிரிப்பேன், சிங்கார கண்ணே' என்று; 'நீ அழுதால் நான் அழுவேன் மங்காத பொன்னே' என்று. அதுபோல், நான் பேசிய பிறகு, அதற்கான பதிலுரையை, சிரிப்புகள் வாயிலாக இறுதியில் தருமாறு மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பராசக்தி படத்தில் 'மாடியில் இருப்பவர்களைக் குடிசைக்கு வா என்று அழைப்பதில்லை; குடிசைகளில் இருப்பவர்களைத்தான் மாடிக்குப் போக வைக்க வேண்டும்' என்று தன்னுடைய வசனத்தில் குறிப்பிடுவார். அது வெறும் வார்த்தைகள் அல்ல, வரலாற்று சாசனம். அந்த சாசனத்தைச் சரித்திரமாக்கவே 1970 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியத்தைத் தந்த கோமான், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வாழ்வின் அடிப்படை ஆதாரம் உணவு, உடை, இருப்பிடம். இன்னும் இருப்பிடத்திற்கு வழியின்றி சென்னை மாநகரத்தில் சாலையோரங்களிலும், கூவம் நதியோரங்களிலும், ஆயிரமாயிரம் குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையை நான் எடுத்துச் சொன்னால், நிச்சயமாக இந்த அவையிலே கண்ணீர் சிந்த வேண்டிய ஒரு நிலை ஏற்படும். இன்றைக்கும் நகரவாசிகளிலே 20 சதவிகிதத்திற்கு மேலானவர்கள் தங்களுடைய காலை கழிப்பிட வசதிக்கு வெட்டவெளிகளைத்தான்

பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதிலும், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், பருவத்தின் தலைவாசலில் நிற்கின்ற இளம் பெண்கள்கூட, காலைக்கடன் கழிப்பதற்கே ஓர் அச்ச உணர்வோடு இன்றைக்கும் தலைநகரில் காலைக்கடனை கழித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் என்ன? திட்டமிடல் இல்லை. அந்தத் திட்டமிடுதல் வாயிலாக உருவாக்கப்படுகின்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் தகுதி வாய்ந்தவர்களுக்குத் தரப்படுகின்றனவா என்றால், தரப்படுவதில்லை. நாம் இன்றைக்கு இந்த குளு குளு அறையிலே நின்று பேசிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நம்மைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய அந்த மக்கள் சாலைகளுக்கும், போக்குவரத்திற்கும் நடுவிலே இடைவெளியே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நதிக் கரையோரத்திற்கும், கூவம் ஆற்றிற்கும், அவர்களுடைய இல்லங்களுக்கும் இடைவெளி இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நெளிகின்ற புழுக்கள், குத்திக் குதறி எடுக்கின்ற கொசுக்கள், திணந்தோறும் நரக வேதனையை அனுபவித்து, இரவையும், பகலாக்கி வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்த மக்கள் முழுமையாக மேம்பட்டால்தான், நாடு சுதந்திரம் அடைந்தது என்பதற்கான ஓர் இலக்கை இந்தத் தமிழகம் பெற முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த அவையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், ரொம்ப, ரொம்ப, ரொம்ப இரக்க சிந்தனையோடு இங்கே பேசிக் கொண்டிருக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'தமிழகத்தில் எங்கெல்லாம் குடிசைப் பகுதிகள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படும்' என்ற கொள்கையோடு, குறிக்கோளோடு, நல்ல எண்ணத்தோடு, 'தொலைநோக்குத் திட்டம் 2023'-ஐ அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி, கிட்டத்தட்ட 13 இலட்சத்து 65 ஆயிரம் குடிசைப் பகுதி வீடுகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றன. ஒரு slum area இருந்தால், அந்தப் பகுதியில் கண்டறியப்பட்டிருக்கின்ற ஏழையெளிய மக்களின் குடிசை வீடுகளெல்லாம் கணக்கெடுக்கப்பட்டு, அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜூலை 5

அந்தப் பகுதியிலேயே குடியிருப்பதற்குத் தகுதியான புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய வீடுகளை, தரமான வீடுகளை, உறுதியான வீடுகளை, அடிப்படை வசதிகள் எல்லாம் நிறைந்த வீடுகளை இப்போது நாம் கட்டித் தந்து கொண்டிருக்கின்றோம். கிட்டத்தட்ட 3½ இலட்சம் வீடுகளைக் கட்டுகின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில், 1 இலட்சத்து 26 ஆயிரம் வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 2023 ஆம் ஆண்டிற்கு முன்பு, இந்தத் திட்டம் இலக்கை அடையும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு முன்பாகவே இந்தத் திட்டம் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கைகளுக்கு மணிமகுடம் சூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–10

நதி ஓரங்களில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். சென்னை மாநகரம் கடற்கரைக்கு அருகில், கடற்கரையின் ஓரத்தில் இருக்கின்ற பெரிய மாநகரமாகும். மேற்குப் பகுதிகளில் பொழிகின்ற மழை நீரெல்லாம் இங்கேதான் வழிந்து, கடலுக்குச் செல்லக்கூடிய ஒரு சூழல் இருக்கின்றது. பொழிகின்ற மழை நீரெல்லாம் 4 ஆறுகளின் மூலமாக வழிந்தோட வேண்டிய ஒரு கட்டாயச் சூழல் இருக்கிறது. தேவைக்கு அதிகமாக, அளவுக்கு அதிகமாக மழை பொழிகின்ற காரணத்தினால், ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட சில பகுதிகளில் நீர் புகுந்து விடுகின்றது. உதாரணத்திற்கு 200 மீட்டர் அளவுள்ள கால்வாயின் இரு புறங்களிலும் ஆக்கிரமிப்பு செய்துவிடுவதால், 50 மீட்டர் அளவிற்குத்தான் கால்வாய் சென்று கொண்டிருக்கின்றது; அதனால் மழைக் காலங்களில் மிகப் பெரிய சிரமம் அவர்களுக்கும் உருவாகிறது, மற்றவர்களுக்கும் உருவாக்கப்படுகிறது. இதையெல்லாம் தடுப்பதற்காகத்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், பெரும்பாக்கத்தில் 22 ஆயிரம் வீடுகள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டி முடிக்கப்பட்டு, நல்ல நிலையில் இருக்கின்றன. பள்ளிக்கூடங்கள், ரேஷன் கடைகள், மருத்துவமனைகள் என அனைத்து வசதிகளுடன்கூடிய நிறைவான வீடுகள் கட்டப்பட்டு, தற்போது waiting–ல் இருக்கின்றன. இதுவரையிலும் 12 ஆயிரம் பேர், 13 ஆயிரம் பேர்தான் குடியேறியிருக்கிறார்கள். யாருக்கெல்லாம் வீடுகள் தேவைப்படுகின்றனவோ, அவர்களுக்கெல்லாம் வீடுகள் தயாராக இருக்கின்றன. ஒவ்வொரு பகுதி மக்களும் அங்கே போய் சேருவதற்கு, அவர்களுக்கு transportation charge முதல்

2018 ஜூலை 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எல்லா இழப்பீடுகளையும் ஒரு வருடத்திற்கு ரூ.23 ஆயிரம் வரை கொடுக்கிறோம்; இந்த நிலை இருக்கிறது. இவ்வாறு படிப்படியாக பணிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, யாருக்கும் எந்த இடர்ப்பாடும் இல்லாதவாறு குடிசைப் பகுதிகளற்ற நகரமாக சென்னை மாநகரம் உட்பட தமிழகத்திலிருக்கின்ற அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் உருவாக்கப்படும் நிலை உறுதியாக உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தளவில், இது, இதயத்தை இதயத்தால் பார்க்க வேண்டிய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியானவர்களுக்கு வீடுகள் கொடுக்கப்படவில்லை என திரு. சேகர்பாபு ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார். தகுதியானவர்கள் யாருக்காவது வீடுகள் கிடைக்காத நிலை இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் ஆதாரத்துடன் விவரத்தைத் தந்தால், அவர்களுக்கு உறுதியாக வீடுகள் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, அமைதியாக இருங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெரும்பாக்கம் திட்டப் பகுதி என்பது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குண்டான ஒப்பந்தம் கோரப்பட்டு, 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் தேதி ஒப்பந்தம் இறுதி செய்யப்படுவதாக இருந்தது. ஆனால், 2011 ஆம் ஆண்டு, மார்ச் 1 ஆம் தேதி தேர்தல் அறிவிக்கப்பட்டதால், அந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்படவில்லை. மீண்டும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக, அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்துவிட்டு, மறு ஒப்பந்தம் போட்டு கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதால், இதற்கு முழுமுதற் காரணமான இயக்கமாக, உரிமை கொண்டாடுகின்ற இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2018 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கூற்றுப்படியே மார்ச் மாதம் அந்தத் திட்டத்திற்கு அறிவிப்பு செய்திருந்தால், மார்ச் மாதத்திற்குப் பிறகு அடுத்த வருடம் வந்துவிடுகிறது. New central allotment வந்துவிடும். New central allotment–ன்படி estimate போட வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டதால், அதை நிறுத்தி, இதற்கு அரசாணை பெற்றுத் தருகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் எப்போதும் உள்ளதை ஒப்புக்கொள்ளக்கூடியவர்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், திட்டமிடுதல் பற்றி கூறுகின்றபொழுது, சாலை ஓரங்களில், குடிசைகளில் இருப்பவர்களை மறுகுடியமர்வு செய்வோம் என்று குறிப்பிட்டார். நீங்கள் இப்போது அறிவிப்பிலே அறிவிப்பதாக இருக்கிறீர்கள். எங்கள் செயல் தலைவருடைய கொளத்தூர் தொகுதியில் 400 வீடுகளுக்குப் பதிலாக 840 வீடுகளைக் கட்டப் போகிறீர்கள்; துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 240 வீடுகளுக்குப் பதிலாக 361 வீடுகளைக் கட்டப் போகிறீர்கள்; எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே.பி. பார்க் பகுதியில் 810 வீடுகளுக்குப் பதிலாக 1,910 வீடுகளைக் கட்டப் போகிறீர்கள்; அதேபோல, மூர்த்திங்கர் நகர் பகுதியிலே Phase–II–ல், 910 வீடுகளைக் கட்டப் போகிறீர்கள். இந்த ஒட்டுமொத்த வீடுகளைக் கூட்டிப் பார்த்தால், ஏற்கெனவே வசிப்பவர்களுக்கு அதிகமாகவே 4 ஆயிரம் வீடுகளைக் கட்டப்போகிறீர்கள். இந்த 4,000 வீடுகளில் துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் சாலையோரத்திலும், நதிக்கரையோரத்திலும் இருப்பவர்களைக் குடியமர்த்துவதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக வைக்கிறேன்.

2018 ஜூலை 5]

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எல்லாவற்றையும் அறிந்தவர். அறிந்து, புரிந்திருந்தாலும், இதைக் கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்கின்றார். ஒரு குடிசைப் பகுதியில் 200 குடிசைகள் இருந்தால், அந்தப் பகுதியில் கட்டக்கூடிய குடியிருப்புகள் கூடுதலாக இருக்கும். அதிக அளவு குடியிருப்புகள் கட்டக்கூடிய இட வசதியைப் பெற்றிருக்கும். ஆகவே, அங்கு அதிகப்படியான வீடுகள் கட்டக்கூடியபட்சத்தில் ஏற்கெனவே குடிசைப் பகுதியில் இருந்தவர்களுக்கு அந்தக் குடியிருப்புகள் முதலில் உறுதி செய்யப்படும். மற்றபடி குடிசை மாற்று வாரியத்திற்கு வந்திருக்கின்ற தகுதியுள்ள மனுக்களின் அடிப்படையில், தகுதியுள்ளவர்களுக்கு, அந்தந்தப் பகுதியில் குடியிருப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதில் எந்தவித விதிமீறலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, இப்போது சென்னை மாநகரம் பரப்பளவில் விரிவாகிப் போய்க் கொண்டேயிருக்கிறது; இடங்கள் கிடைப்பதில்லை. அதனால், இப்போது நமது system என்னவென்றால், vertical line-ல் மேலே கட்டி, 4 மாடிகள் இருந்தால் 8 மாடிகள், 8 மாடிகள் இருந்தால் கூடுதலாக 4 மாடிகள் என்று கட்டுவதற்கு அவர்களுக்கென்று சிறப்பு F.S.I. அனுமதி கொடுத்து, அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டல்ல; துணை முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வியாசர்பாடி, மூர்த்திங்கர் நகர் பகுதியில் நீங்கள் 911 வீடுகளைக் கட்டி முடித்தீர்கள். அந்தப் பகுதியில் வசித்த 400 பேர்களை மறு குடியமர்வு செய்தீர்கள். மீதம் இப்போது 161 வீடுகள் இருக்கின்றன. இடைப்பட்ட 350 வீடுகளில் எந்தக் குறிப்பிட்ட இடத்திலிருந்தும் மறு குடியமர்வு செய்யாமல், 2 பேர், 3 பேர், 4 பேர் என்று பல்வேறு வகைகளில் குடியமர்வு செய்யப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியில் உள்ள

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜூலை 5

சாலையோரங்களில் வசிப்பவர்களுக்கு வாழ்வாதார உரிமை இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு, குடியமர்வு செய்யப்பட்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புதிதாக, இப்போது மாண்புமிகு பிரதமரின் 'Housing for All' திட்டத்தின்கீழ் 230 சதுர அடி வீடுகளுக்குப் பதிலாக 400 சதுர அடி வீடுகளாகக் கட்டுமானத்திற்கு நிர்ணயித்திருக்கின்றீர்கள். இப்படிக் கட்டப்படுகின்றபோது பயனாளிகளுடைய பங்களிப்புத் தொகை 2½ இலட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (குறுக்கீடு) அப்படி இல்லையென்றால் சந்தோஷம். கொள்கை விளக்கக் குறிப்பு பக்கம் 54–ல் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பயனாளிகளுடைய பங்களிப்பு 1½ இலட்சம் ரூபாய் மற்றும் 2½ இலட்சம் ரூபாய் என்றும், அதில் அரசினுடைய மானியம் 7½ இலட்சம் ரூபாய் என்றும் மத்திய அரசினுடைய மானியம் 1½ இலட்சம் ரூபாய் என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதால் நான் இதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே அங்கு குடியிருப்பவர்களுக்கும் இப்படிக் கட்டப்படுகின்ற வீடுகளுக்கான இந்தச் சலுகையை வழங்குவேன் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர், செய்கையின் வாயிலாகச் சொல்லியிருக்கின்றார். ஆனால், அதிகப்படியான எண்ணிக்கையில் கட்டப்பட்டு மீதமிருக்கின்ற குடியிருப்புகளில் சாலையோரங்களிலும், கூவம் நதிக் கரையோரங்களிலும் இருப்பவர்களைத்தான் மறு குடியமர்வு செய்யப்போவதாக நீங்கள் இங்கே அறிவித்திருக்கிறீர்கள். 1½ இலட்சம், 2½ இலட்சம் என்று அவர்களுக்கு விதிக்கப்படுகின்ற அந்த முன்பணத்தை அரசே மானியமாக ஏற்றுக்கொள்ளத் தயாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பிறந்த காலத்திலிருந்து, சென்னையிலேயே இருக்கிறார். முன்பெல்லாம் 230 மற்றும் 240 சதுர அடியில் வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது, 400 மற்றும் 440 சதுர அடியில் கட்டுகிறோம். ஏற்கெனவே அவர்களுக்கு 200, 230 சதுர அடியில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்பொழுதே அவர்களுக்கான பங்கீட்டை–contribution–ஐ வாங்கிக்கொண்டுதான் அவர்களுக்கு வீடு ஒதுக்கப்பட்டது. இப்பொழுது கட்டப்படுகின்ற

2018 ஜூலை 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வீடுகளில் ஏற்கெனவே அங்கே குடியிருந்தவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றபொழுது அவர்களிடமிருந்து எந்தப் பணமும் வாங்குவதில்லை. 230 சதுர அடிக்குப் பதிலாக 400 சதுர அடியிலும், 430 சதுர அடியிலும், அவர்களுக்கு வீடுகள் கிடைக்கின்ற ஒரு நல்ல ஆரோக்கியமான சூழ்நிலை இருக்கிறது. ஆனால், புதிதாக வருகின்றவர்களுக்குத்தான் சென்னை தவிர மற்ற நகரங்களில் வீடுகளுக்கான கட்டுமானச் செலவு 9 இலட்சம் ரூபாய், 9½ இலட்சம் ரூபாய் ஆகிறது. ஆனால், சென்னையில் 10½ இலட்சத்திலிருந்து 11 இலட்சம் ரூபாய் வரை ஆகிறது. அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் மத்திய அரசினுடைய மானியம் 1½ இலட்சம் ரூபாய். பயனாளிகளுடைய பங்கீடு 1½ இலட்சம் ரூபாய். மொத்தம் 3 இலட்சம் ரூபாய். 11½ இலட்சம் ரூபாய் வரை கட்டுமானச் செலவு ஆகிறது. அதில் ரூ.7 இலட்சத்திலிருந்து 8½ இலட்சம் ரூபாய் வரை மாநில அரசினுடைய சொந்த நிதியிலிருந்து, மாநில நிதியாதாரத்திலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) செலவு செய்து கட்டித் தரப்படுகின்ற திட்டம்தான் அனைவருக்கும் வீடு கட்டுகின்ற திட்டம் என்பதனை நான் இங்கே விளக்கமாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பை நான் வரவேற்கிறேன். எங்கள் கொளத்தூர் பகுதியிலே இருந்த 400 வீடுகளுக்குப் பதிலாக 840 வீடுகள் கட்டப்படுகிற நேரத்தில், அந்த 400 வீடுகளுக்குக் கூடுதல் தொகை கேட்டவுடன், எங்களது எதிர்க்கட்சித் தலைவர், தங்கம் என்பது மண்ணுக்குள் இருந்தாலும் அது தங்கம் தங்கம்தான், மன்னனின் மணிமுடியிலிருந்தாலும் அது தங்கம் தங்கம்தான் என்பதை வலியுறுத்துகின்ற வகையில், அவர் வைத்த கோரிக்கைக்கேற்ப, இன்றைக்கு அந்த மக்களுக்கு கூடுதல் பணம் வேண்டாம் என்று அறிவித்ததை நான் இந்த நேரத்தில் வரவேற்கிறேன்.

பிற்பகல் 3–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள், சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் என்றும், தமிழ்நாடு பெருநகர வளர்ச்சித் திட்டம் என்றும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நகரங்களில் நிலங்களை எடுத்து, அதில் வாழ்வாதாரத்திற்கான

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜூலை 5

குடியிருப்பு மனைகளை ஒதுக்கித் தந்தீர்கள். கிட்டத்தட்ட 237 திட்டப் பகுதிகளில் அப்படி ஒதுக்கப்பட்ட மனைகளுக்கு அரசாணை எண் 78–ஐ, 15–6–2018 அன்று வெளியிட்டிருக்கின்றீர்கள். இந்த 237 திட்டப் பகுதிகளில் உள்ள மனைகளுக்கும் விரைவிலேயே கிரையப் பத்திரம் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்று அரசாணை எண் 78 கூறுகின்றது. உள் துறைச் செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய முதன்மைச் செயலாளர், தலைமைச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கி அதில் ஒருங்கிணைப்பு committee–ஐ உருவாக்கியிருக்கிறீர்கள். அதன்படி உடனடியாக அந்த மனைகளுக்கு நில உடைமை மாற்றம் செய்து, மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டுமென்ற ஓர் அரசாணையைப் பிறப்பித்திருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், 30 ஆண்டுகளுக்கு மேலாக ஏற்கெனவே அங்கே குடியிருந்து வந்தவர்கள், தங்களுடைய வாழ்வாதார சூழ்நிலை பெருகிய பிறகு, தற்போது அந்த இடத்தில் இல்லாமல் பல்வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து இருக்கின்றார்கள். ஆனால், நீங்கள் இந்தக் கிரையப் பத்திரத்திற்குண்டான பட்டியலைத் தயாரிக்கின்றபோது, அங்கே இல்லாதவர்களுக்கு உங்கள் பட்டியலில் இடமளிக்க மறுக்கிறீர்கள். 30 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி குடிசைகளில் இருந்தார்களோ, அப்படியேதான் இப்போதும் இருக்க வேண்டுமென்று உங்கள் ஆட்சியாளர்கள் சொல்கிறார்களா அல்லது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அப்படிச் சொல்கிறார்களா என்று தெரியவில்லை. அப்படி ஒரு விதி இருந்தால், அதைத் தளர்த்துமாறு சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு மனைகளாகக் கொடுக்கப்படுகின்ற திட்டம் ஒன்று; இன்னொரு திட்டம், வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு சொல்கின்ற திட்டம், மனைகளாகப் பிரித்து கொடுக்கப்படுகின்ற திட்டத்தைத்தான் சொல்கிறார் என்று நினைக்கின்றேன். ஆக, மனைகளாகக் கொடுக்கின்றபோது, அவர்கள் தவணை முறையில் பணம் செலுத்துகின்ற ஒரு நடைமுறை இருக்கிறது. Original

2018 ஜூலை 5] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஆக அந்த மனை ஒதுக்கப்பட்டதினுடைய மூலகர்த்தா, அவர் பெயரில்தான் அந்த மனை பதியப்பட்டிருக்கிறது. மறுபடியும் யாருக்காவது, ஒப்பந்தத்தின்மூலம் 2–ம் முறை, 3–ம் முறை, 4–ம் முறை அவர் கை மாற்றிக் கொடுக்கின்றபோது பலர் அந்த இடத்தில் வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் அந்த இடத்தில் வீடு கட்டுகின்ற நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. அப்படியிருக்கும்போது நாம் original பத்திரம் யாருக்குக் கொடுக்க வேண்டும்? யார் original allottee–யோ அவர்களுக்குத்தானே கொடுக்க முடியும்? அவர்களுக்குத்தான் கொடுக்க முடியும் என்று இருக்கின்ற சூழ்நிலையில், அவர்களைத் தவிர மற்றவர்களுக்குக் கொடுக்க முடியாது. இருப்பினும், 2–வது, 3–வது, 4–வதாக அங்கு குடியிருக்கின்றவர்களுக்கு கிரையப் பத்திரம் வழங்கலாம் என்பது குறித்து இப்பொழுது சட்டத் துறையிடம் கேட்கப்பட்டிருக்கின்றது. இறுதியாக அங்கிருந்து வருகின்ற முன்மொழிவுகளைப் பொறுத்து அரசு உரிய முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத் திட்டம் குறித்து 8–9–2011 அன்று இந்த அவையிலே விதி 110–ன்கீழ் ஓர் அறிவிப்பை வெளியிட்டீர்கள். அதற்கான அரசாணை எண் 82, 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. நந்தனத்திலே அலுவலக வளாகத்தைக் கட்டி, அதில் வருகின்ற வருமானத்தை குடிசை மாற்று வாரியத்திற்குப் பயன்படுத்திட வேண்டுமென்று திட்டமிட்டிருந்தீர்கள். அந்த அறிவிப்பு இதுவரையில் செயலாக்கத்திற்கு வரவில்லை. இந்த அறிவிப்பைப் பார்க்கும்போது ஒன்று தோன்றுகிறது. திட்டம் கால், விளம்பரம் முக்கால், பலன் பூஜ்யம் என்று சொல்வார்கள். அந்த நந்தனம் வீட்டு வசதித் திட்டம் பூஜ்யத்திலே நின்று கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு, Foreshore Esteate பகுதி குறித்து சொல்கிறீர்களா?

[2018 ஜூலை 5

திரு. பி.கே. சேகர்பாபு: நந்தனத்தில் அலுவலக வளாகத்துடன் கூடிய ஒரு கட்டுமானப் பணி, முன்னாள் முதலமைச்சர் 8–9–2011 அன்று விதி 110–கீழ், 100 கோடி ரூபாய் செலவிலே கட்டப்படும் என்று இந்த அவையிலே அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பு இதுவரையில் செயல்பாட்டிற்கு வரவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குண்டான அறிக்கையின் நகல்கூட வைத்திருக்கிறேன். அவை முடிவதற்குள் அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் வழங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: நந்தனத்திலே ஏற்கெனவே இரண்டு டவர்கள் இருக்கின்றன.

பிற்பகல் 3–25

திரு. பி.கே. சேகர்பாபு: தாங்கள் சொல்வது வீட்டு வசதி வாரிய டவர். நான் சொல்வது அலுவலக வளாகக் கட்டடம். Office complex கட்டுவது குறித்து விதி 110–கீழ் இந்த அவையில் அறிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அதாவது, 8–9–2011 அன்று விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இப்போது, நீங்கள்கூட அந்தப் பணி குறித்து, 2 கோடி ரூபாய் அளவிற்கு, இதுவரையில் திட்ட வரைபடம் தயாரித்தல் முதற்கொண்ட செலவுகளை மேற்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், திட்டம் இன்னும் தொடங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அலுவலக வளாகம் குறித்து தானே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடு) அதுதானே? விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டம்தானே? அந்தத் திட்டத்தைச் செயலாக்குவதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளெல்லாம் தீர்க்க முடியாத பிரச்சினைகளாக இருக்கின்றன.அந்தத்திட்டம்குறித்துதீவிரமாக ஆய்வுசெய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 5]

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.கே. நகர். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. பி.கே. சேகர்பாபு: அந்தத் துறையை விட்டு நான் வெளியே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், ஏதோ அதில் கால், இதில் முக்கால், கடைசியில் பூஜ்யம் என்று இங்கே அழகாக வார்த்தைகளைச் சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, உங்களுடைய தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, திருக்குவளை அனல் மின் நிலையம் கொண்டு வரப்படும் என்று ஓர் அறிவிப்பைச் செய்தார்கள். அதற்காக வெளிநாடுகளிலிருந்து பெரிய கம்பெனிகளெல்லாம் அங்கு வருவதாக விளம்பரம் செய்யப்பட்டது. (குறுக்கீடு) கேளுங்கள், அவசரப்படாதீர்கள். (குறுக்கீடு) நீங்கள் சொன்னீர்கள் அல்லவா? (குறுக்கீடு) திட்டம் கால், விளம்பரம் முக்கால், பலன் பூஜ்யம் என்று நீங்கள் சொன்னீர்கள் அல்லவா? உங்களுடைய ஆட்சியில் என்ன பூஜ்யம் என்பதை நான் சொல்ல வேண்டும் அல்லவா? அதனால் நீங்கள் அவசரப்படக் கூடாது. நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) திருக்குவளை என்பது அன்றைய முதலமைச்சர், தி.மு.க. தலைவர் பிறந்த சொந்த ஊராகும். அந்த ஊரின் பெயரால் திருக்குவளை அனல் மின் நிலையம் கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டம் எவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது என்றால், 9 ஆயிரத்து 100 கோடி ரூபாய் செலவில் கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்மூலம் 1,820 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. Triden Port & Power Company Private Limited என்ற கம்பெனி அங்கு வந்திருப்பதாக, விளம்பரமும் பத்திரிகையில் வந்தது. மிகப் பெரிய விளம்பரம், பக்கம் பக்கமாக வந்தது. அதுமட்டுமல்ல, இதற்கான ஒப்பந்தம் 2009–ல் போடப்பட்டது. அதற்கு 743 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலம் கையகப்படுத்திவிட்டதாகவும் அறிவிப்பு வந்தது. இதற்கான அரசாணை எண் 19, 13–1–2010 அன்று வெளியிடப்பட்டது. அதில், நிலக்கரியை துறைமுகத்திலிருந்து

[திரு. ஓ.எஸ். மணியன்] [2018 ஜூலை 5

கொண்டு வருவதற்காகவும், துறைமுக வளர்ச்சிக்காகவும் மட்டும் 1,250 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்காக நாங்கள் செலவிடப் போகிறோம், துறைமுகம் 1,250 கோடி ரூபாயில் வரப் போகிறது என்று சொன்னீர்கள். ஆனால், ஒரு நயா பைசாகூட செலவு செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தினுடைய அறிவிப்பு வரும்போதே எனக்குத் தெரியும். ஏனென்றால் நான் உள்ளூர்க்காரன். இது சாத்தியம் இல்லாத இடம், சாத்தியம் இல்லாத கடற்கரை, சாத்தியம் இல்லாத நிலையில் இவர்கள் அறிவிக்கின்றார்கள்; இது வெற்று அறிவிப்பு; இது திருவிழாக் காலத்தில் விடுகின்ற வான வேடிக்கை மாதிரி இருக்கப் போகின்றதே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) இது நிறைவேறப் போவது இல்லை என்று நாங்கள் நினைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் இன்றைக்கு நடந்திருக்கிறது. எதற்காகச் சொல்கிறேன் என்று கேட்டால், திட்டம் கால், விளம்பரம் முக்கால், மிச்சம் ஒன்றுமில்லை என்று திரு. சேகர்பாபு அவர்கள் சொன்னதற்காக நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே.கே. நகர் திட்டப் பகுதி, ஆலப்பாக்கம் பகுதியில் 2012 ஆம் ஆண்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, இன்றைக்கு பட்டியலில் இல்லாத புதிய இரண்டு நபர்களைப் பேச அழைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 6, 7 சட்டமுன்வடிவுகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 3–30

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலப்பாக்கம் திட்டப் பகுதியில் உள்ள 63 MIG வீட்டுமனைகள், விற்பனைக்கு பத்திரிகையிலே 2012 ஆம் ஆண்டு விண்ணப்பங்கள்கோரப்பட்டன. அதில், 5 ஆயிரம் விண்ணப்பதாரர்கள் ரூ.2 ஆயிரம் செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்றார்கள்முறையாகக் குலுக்கல் நடைபெற்றது. 63 பயனாளிகள் அதிலேதேர்வுசெய்யப்பட்டார்கள்.அவர்களிடமிருந்து30சதவிகிதம்

2018 ஜூலை 5] [திரு. பி.கே. சேகர்பாபு]

என்று முதற்கட்டமாக 3 இலட்சம் ரூபாய் EMD பெறப்பட்டது. அந்த 63 பேரில் மாதத் தவணை 49 பேரால் செலுத்தப்பட்டு அதுவும் முடிவுற்றது. 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் முழுவதுமாக 49 பேர் மாதத் தவணைகளைக் கட்டி முடித்த பிறகும் மனைகள் ஒதுக்கப்படவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனு செய்தபோது, கடந்த 6–4–2018 அன்று சம்பந்தப்பட்ட பொறியாளர் அவர்கள், "நாங்கள் இன்னும் DTCP approval வாங்கவில்லை. அந்த இடம் இன்னும் மேம்படுத்தப்படவில்லை DTCP approval வந்தவுடன் அந்த இடத்தைப் பயனாளிகளுக்கு ஒப்படைப்போம்" என்று பதில் தருகின்றார். நான் கேட்க விரும்புவதெல்லாம் மேம்படுத்தப்படாத ஒரு மனைக்கு எப்படி lay–out போட்டு 5 ஆண்டுகளாக முழுப் பணத்தையும் வசூலித்தார்கள். DTCP approval இல்லாமல் அந்த இடத்திற்கு யாரால் மனுக்கள் கோரப்பட்டன? அப்படியென்றால் சம்பந்தப்பட்டவர்கள்மீது இந்தத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். இது எப்படி இருக்கின்றது தெரியுமா? திரைப்படத்தில் நகைச்சுவைக் காட்சி ஒன்று வரும். அதில் வடிவேல் அவர்கள், கிணறு காணோம், காணோம் என்பார்கள். அதுபோல், பணம் செலுத்திய பிறகும், அவர்கள் இடத்தைக் காணோம், காணோம் என்று தேடிக்கொண்டிருக்கின்ற நிலை அவர்களுக்கு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை இத்துடன் நிறைவு செய்யுங்கள், போதும். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இந்த மாதிரியான நிலை எந்தக் காலத்திலும் ஏற்பட்டது இல்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் கோயம்புத்தூரில் அம்மன்குளத்தில் வீடு கட்டப்பட்டது. அந்த அடுக்குமாடி வீடுகள் கட்டப்பட்டு முடிக்கப்படுகின்ற தருவாயில், கீழே இருக்கின்ற இரண்டு அடுக்குகள் அந்தக் குளத்திற்குள்ளேயே மூழ்கிவிட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வீடு ஒதுக்கப்பட்டவர்களெல்லாம், 'ஐயா, இந்த இடத்தில்தான் எங்கள் வீடு இருந்தது, அந்த வீட்டைக் காணோம், காணோம், காணோம்' என்று அங்கே அலறித் துடித்த காட்சிகளை தமிழ்நாடே கண்கூடாகப் பார்த்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

[2018 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இதோடு உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள், திரு. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மொத்தம் 8 துறைகள்; நான் ஒரே ஒரு துறையைப் பற்றிதான் பேசியுள்ளேன். விவாதம் ஆரோக்கியமாகத்தான் செல்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஆரோக்கியமாகப் பேசுவது சரி. எனக்கு ஆரோக்கியமான நேரம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உரையை முடியுங்கள். இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டும். இன்னும் 6, 7 சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப் பெறவேண்டும்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மௌலிவாக்கத்தைக்கூட இங்கே குறிப்பிட்டுக் காட்டலாம். ஆனால், அது பதிலுக்குப் பதிலாக இருக்கும். அது சரியாக இருக்காது என்பதால், நான் அடுத்த சப்ஜெக்ட்டிற்குச் செல்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, மாண்புமிகு உறுப்பினர், உங்கள் விவாதம் போதும். நீங்கள் ஏறக்குறைய 35 நிமிடங்கள் பேசியிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் தவறாகவாச் சொல்வேன்? (குறுக்கீடு) இல்லை, நான் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) உங்களுக்குக் குறுக்கீடுகள் எல்லாம் குறைவுதான். மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரும், மாண்புமிகு துணை முதலமைச்சரும்தான் பேசினார்களே தவிர, இதில் பெரிய குறுக்கீடுகள் என்று எதையும் சொல்ல முடியாது. நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கின்றார். அதிக குறுக்கீடு எல்லாம் கிடையாது. நன்றாகப் பேசி முடித்துவிட்டார், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நிறைவாக உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் பார்த்துக்கொள்ளலாம், உட்காருங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வருடங்கள் கழித்து, இப்போதுதான் நான் பேசுகின்றேன். (குறுக்கீடு)

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு நான் என்ன செய்ய முடியும்? உங்கள் கட்சிக் கொறடாவிடம் கேட்டு அடிக்கடி பேசுகின்ற மாதிரி time வாங்கிக்கொள்ளுங்கள், அதற்கு நான் ஒன்றும் சொல்லவில்லை.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் 89 உறுப்பினர்கள் இருக்கின்றோம். அதனால்தான் எனக்கு அவ்வளவு தாமதமாக வாய்ப்புக் கிடைக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் கட்சியின் சார்பில் தினமும் ஒருவருக்கே time வாங்கிப் பேசினாலும், எனக்கு அதில் கருத்து வேறுபாடு ஒன்றும் இல்லை. ஒத்துழைப்பு தந்து இன்றைக்கு உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) பேசவிடுங்கள் என்று சொல்கின்றீர்கள். பிறகு கொஞ்ச நேரமானால் "நேரம் முடிந்துவிட்டது" என்பேன். அதற்கு நான் என்ன செய்வது? (குறுக்கீடு) இன்னும் ஒரு வாய்ப்பு உங்கள் கட்சி உறுப்பினருக்கு இருக்கின்றது, உரையை முடியுங்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று பேசுகின்றோம். Development Rules 24(2b)-ன்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்ட மனைகள் வரன்முறை சீரமைப்புத் திட்டத்தின்படி E.C.R. சாலையில் அமைந்திருக்கின்ற கொட்டிவாக்கம் முதல் 8 கிராமங்களில் 480 சதுர அடிக்குமேல் நிலம் இருந்தால்தான், நில உடமைதாரர்கள் அந்த வரன்முறைச் சட்டத்தில் இணைக்கப்படுகின்றார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சேகர்பாபு, இத்துடன் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் இவ்வளவு தூரம் சொன்னதற்குப் பிறகும் தொடர்ந்து நீங்கள் பேசுவேன் என்று அடம் பிடித்தால், நான் வேறு ஓர் உறுப்பினரை பேசுவதற்கு அழைப்பதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை. (குறுக்கீடு) எனக்கு நேரம் இல்லை, நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. பி.கே. சேகர்பாபு: *கொறடா, நீங்கள் இதையெல்லாம் கேட்க மாட்டீர்களா?*

[2018 ஜூலை 5

பிற்பகல் 3–3.5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. உங்கள் கொறடா சொன்னாலும், ஒத்துக்கொள்கின்ற நிலையில் நான் இல்லை. நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) கொறடா சொல்வதை ஓரளவுதான் கேட்க முடியும், எல்லா நாளும் கேட்க முடியாது. எனக்கு இன்றைக்கு நேரம் இல்லை. நான் இன்னும் ஓர் உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டும். உங்கள் கட்சி உறுப்பினர் யாரும் பேசுவதற்கு வாய்ப்பு கேட்காமலிருந்தால், இன்னும் 10 நிமிடங்கள் அவருக்குப் பேச அனுமதி தருகின்றேன். இதற்கு சரியா என்று கொறடா, நீங்கள் சொல்லுங்கள். இன்னும் ஒரு உறுப்பினரைப் பேசுவதற்கு நான் அழைக்கப் போகின்றேன். அப்போது உங்கள் கட்சி உறுப்பினர் ஒருவருக்கு வாய்ப்புக் கேட்காமலிருந்தால், இன்னும் 10 நிமிடங்களை நான் திரு. சேகர்பாபுவுக்குத் தருகின்றேன், சரியா? (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. அதனால்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. அதனால்தான், உங்களுடைய கட்சியைச் சேர்ந்த இன்னோர் உறுப்பினருக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தரவில்லை என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) Agenda-வில் மாற்றம் செய்வதற்கு பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. (குறுக்கீடு) அப்படியெல்லாம் வாய்ப்பு தர முடியாது. எனக்கு ஒரே ஒரு பதில் சொல்லுங்கள். இன்னோர் உறுப்பினரை நான் அழைக்கப் போகிறேன். உங்கள் கட்சியைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்க நீங்கள் வற்புறுத்தாமல் இருந்தால், இன்னும் 10 நிமிடங்கள் பேசுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களை அனுமதிக்கிறேன். சரியா? (குறுக்கீடு) இரண்டில் ஏதாவது ஒரு பதில்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) இரண்டில் ஏதாவது ஒரு பதிலை எனக்குச் சொல்லுங்கள். அதற்கு முடியாது என்று சொன்னால், நான் இத்துடன் திரு. சேகர்பாபு அவர்களின் உரையை முடித்துவிட்டு, அடுத்த உறுப்பினரை அழைக்கிறேன். (குறுக்கீடு) இன்னும் 5 நிமிடங்கள் தர முடியாது. 5 நிமிடங்களில் அவரால் உரையை முடிக்க முடியாது. அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தால் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்வார் என்று எனக்குத் தெரியும். நான் 10 நிமிடங்கள் தருகிறேன். அந்த 10 நிமிடங்களை திரு. சேகர்பாபுவுக்கே தருகிறீர்களா அல்லது அந்த நேரத்தை இன்னோர் உறுப்பினருக்குத் தருகிறீர்களா? இரண்டில்

2018 ஜூலை 5] [பேரவைத் தலைவர்]

ஒன்றைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) Point of order இல்லை. (குறுக்கீடு) இதுவெல்லாம் சரியில்லை. நான் கேட்கிற கேள்விக்கு ஏன் நேரடியாகப் பதில் சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள், நந்தனம் பகுதியில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாக அலுவலக வளாகம் அமைத்தல் பற்றிக் குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். ஏற்கெனவே, அதைப் பற்றித்தானே சொன்னீர்கள்? அலுவலக வளாகம். அது 2012 ஆம் ஆண்டு அல்ல. பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8-9-2011 அன்று அறிவித்தார்கள். இத்திட்டத்திற்கான ஒப்புதல் அரசாணை எண் 82, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 26-3-2012 அன்று வெளியிடப்பட்டது. (குறுக்கீடு)

மாண்புமிகு உறுப்பினர், நன்றாகக் கவனியுங்கள். எங்கே கவனிக்கிறீர்கள்? உங்களைச் சுற்றியிருப்பவர்கள் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைத்தான் நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். முன்னதாக பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின்கீழ் இத்திட்டத்தினை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியின்கீழ் இத்திட்டத்தினை நிறைவேற்றினால், திட்டப் பகுதி அமைந்துள்ள நிலத்தினை மீண்டும் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படும் என்று அறியப்பட்டது. எனவே, இத்திட்டத்தினை நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. இத்திட்டப் பிரேரணைக்கு வாரிய ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருத்திய நிருவாக ஒப்புதல் வேண்டி அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. கட்டடக் கலை வடிவம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. சுற்றுச்சூழல் தாக்கம் பற்றிய மதிப்பீட்டிற்கான ஒப்புதலும் பெறப்பட்டிருக்கிறது. கட்டடத்திற்கான வடிவமைப்புகள் இறுதி செய்யப்பட்டு, திட்ட மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகிறது. ஒப்பந்தப்புள்ளிகள் கோர விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2018 ஜூலை 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, உங்களுடைய கட்சிக் கொறடா அவர்கள் என்னிடத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். தற்போது 10 நிமிடங்கள் உங்களுக்குக் கூடுதலாக நேரம் ஒதுக்கப்படுகிறது. நேரத்தைப் பாருங்கள். 3.38 மணி ஆகிறது. 3.48 மணிக்கு உரையை முடித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை. அதுவெல்லாம் கிடையாது. இரண்டில் ஏதாவது ஒன்றைத்தான் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபுவுக்கு 10 நிமிடங்கள் கூடுதலாக ஒதுக்கப்படுகிறது. 3.48 மணிக்கு உங்களுடைய உரையை முடித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்போது உங்களைப் பேச அனுமதிக்கிறேன். நீங்கள் பேசவும்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் நீங்கள் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றவுடன் எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் உங்கள் கையைப் பிடித்து பேரவைத் தலைவர் இருக்கையிலே அமர வைத்து, அன்றைக்கு எங்களுடைய செயல் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றினார்கள். 'நாங்கள் எதிர்க்கட்சிதானே தவிர, எதிரிக் கட்சி இல்லை' என்றார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது உங்களுக்கு கொடுக்கப்பட்ட நேரத்தில் உரையை முடித்து, எனக்கு ஒத்துழைக்கும்படி நான் கேட்டுக் கொண்டேனே தவிர, வேறு விஷயம் ஒன்றுமில்லை. நீங்கள் இரண்டு பேரும் பேசிக்கொள்ள வேண்டிய விஷயத்தில், என்னை இழுக்காதீர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: அவ்வாறு சொன்னது மட்டுமல்லாமல், சொல்கின்ற சொல்லைக் காப்பதில் தமிழகத்தில் எங்கள் தளபதிக்கு நிகர் எங்கள் தளபதிதான் என்பதை நிரூபிக்கின்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியால் கொண்டு வரப்பட்ட 6 தீர்மானங்களை, முன்னாள் முதலமைச்சர் அவர்களின் மறைவு உட்பட, 6 தீர்மானங்களை ஆதரித்து, அவருடைய நடவடிக்கையையும், புகழையும் இந்த மாமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற பேதமில்லாமல் நடுநிலையோடு

2018 ஜூலை 5] [திரு. பி.கே. சேகர்பாபு]

ஜனநாயகக் காற்றை இந்த அவையிலே வீசச் செய்தவர் எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, ஆலப்பாக்கம் பகுதி குறித்து இங்கு சொன்னார்கள். அந்தத் திட்டப் பகுதியில் 90 மீட்டருக்குள் மயானப் பகுதி அமைந்திருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற விதிமுறையின்படி, நடைமுறைச் சிக்கல்கள் உள்ளதால், DTCP–ன் ஒப்புதல் பெறுவதில் காலதாமதம் ஆகிறது. தற்போது பணத்தைத் திரும்பப் பெற விரும்புபவர்கள், வட்டியுடன் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திரும்பப் பெற விரும்பாதவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில், மானியக் கோரிக்கை எண் 26–ல் 2017–2018–ல் 14 அறிவிப்புகளை வெளியிட்டிருந்தீர்கள். அந்த 14 அறிவிப்புகளில் முதல் அறிவிப்பாக, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் 265 கோடி ரூபாய் செலவில் 2,284 வீடுகள் கட்டப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். 15–7–2017 அன்று அரசாணை எண் 179 வெளியிடப்பட்டு அந்த நிலையிலேயே அந்த அறிவிப்பு இருக்கிறது. அதேபோல், இரண்டாவது அறிவிப்பாகதமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு அலுவலர்களுக்குச் சொந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ், 122 கோடி ரூபாய் செலவில் 248 குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். 21–11–2017 அன்று அரசாணை எண் 186 வெளியிடப்பட்டு அந்த நிலையிலேயே அந்த அறிவிப்பும் இருந்து

[திரு. பி.கே. சேகர்பாபு] [2018 ஜூலை 5

கொண்டிருக்கிறது. அதேபோல், பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின் நிதியிலிருந்து ரூ.100 கோடி வழங்கப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். இதுவரையில் ரூ.33 கோடிதான் வழங்கியிருக்கின்றீர்கள். மீதமுள்ள ரூ.67 கோடி வழங்கப்படாமலே இருக்கிறது.

அதேபோல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமல்லபுரத்தில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் 10 கோடி ரூபாய் செலவில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். அந்த அறிவிப்பும் அறிவித்த நிலையிலேயே இருக்கிறது. மொத்தம் 14 அறிவிப்புகள். அந்த 14 அறிவிப்புகளில் ஒரு அறிவிப்புகூட நிறைவேற்றப்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுதும் 15 அல்லது 20 அறிவிப்புகளை நிச்சயமாக இந்த வருட மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையில் அறிவிப்பார். பழைய அறிவிப்புகளைச் செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே வைக்கப்பட்ட இந்தியத் தணிக்கைத் துறையின் 2015–2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் கூறப்பட்டிருப்பது, பக்கம் 47–ல் உங்கள் கனவுத் திட்டமான Vision 2023–ல், முதலாவதாக 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2012–2013 ஆம் ஆண்டிற்கு, ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அதைத் தொடர்ந்து 2013–2014 ஆம் ஆண்டிற்கு, ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், 2014–2015 ஆம் ஆண்டில், ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், மொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூ.7,000/– கோடியில் 2016 ஆம் ஆண்டு மட்டும்தான் 20 கோடி ரூபாய் உபயோகப்படுத்தப்பட்டது என்றும், மீதமுள்ள நிதி அனைத்தும் திரும்ப ஒப்படைக்கப்பட்டது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு நீங்கள் கொண்டு வந்த Vision–2023 என்பது அறிக்கை வடிவில் இருக்குமே தவிர, மக்களுக்கு நலன் தராது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூலை 5] [திரு. பி.கே. சேகர்பாபு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசும்போது சொன்னார்கள், தாம்பரத்தில் முடிச்சூர் என்று ஒரு பகுதி. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இது குறித்த ஆதாரத்தை என்னிடம் காட்டினீர்களா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் பொறுப்பேற்றுக்கொண்டாலும் நான் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது. நீங்கள் என்னிடம் ஆதாரத்தைக் காட்டியிருக்க வேண்டும். காட்டிவிட்டு, பிறகு பேசியிருக்க வேண்டும். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் சொன்ன குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் காட்டுங்கள். நான் நிறைவாக... (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராஜா, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஆதாரத்தைக் கொண்டு வந்து என்னுடைய அறையில் காட்டுங்கள். நான் அந்த ஆதாரத்தை நிறைவாக ஏற்றுக்கொண்டால், உங்களை அனுமதிக்கிறேன். ஆதாரத்தை என்னிடம் காட்டாதவரையிலே, நீங்கள் அதுகுறித்து அவையிலே பேசுவது முறையல்ல. எனவே, நீங்கள் கூறிய அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

பிற்பகல் 3–45

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உச்ச நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு. நான் அதன் நகலை உங்களிடம் ஒப்படைக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஏதாவது ஒரு குற்றச்சாட்டை அவையில் கூறுவதாக இருந்தால், அதற்குரிய ஆதாரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகிய தங்களிடம் கொடுத்து, அனுமதியைப் பெற வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம்பொதுவாக குற்றச்சாட்டை சொல்லிக் கொண்டே இருந்தால், அது இந்தச் சபை நடவடிக்கைகளுக்கு உகந்ததாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2018 ஜூலை 5

இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் கூறக் கூடாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சேகர்பாபு, நான் உங்களுக்குக் கொடுத்த பத்து நிமிடங்களை நல்லவிதமாகப் பயன்படுத்துங்கள். எதற்குக் குற்றச்சாட்டு சொல்கிறீர்கள்? நீங்கள் ஐந்து நிமிடங்கள் பேசியதை நான் நீக்கினால், அதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது. எனவே, நீங்கள் நல்லபடியாகப் பேசி, நல்லபடியாக உரையை முடியுங்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Lokpal and Lokayukta Act–ஐ 1973 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயே, ஊழலை முழுமையாக ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் அரசு அதிகாரிகளும், மற்றவர்களும் தவறு செய்கின்றபட்சத்தில் நடவடிக்கை எடுப்பதற்காக, ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தின் அடிப்படையில், இப்போது மத்திய அரசு சட்டத்தைக் கொண்டு வருகின்ற இந்த நேரத்தில், கிட்டத்தட்ட இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற 19 மாநிலங்களிலே அந்தச் சட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இறுதியாக இந்த மாதம் 10 ஆம் தேதிக்குள் அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தெரியப்படுத்த வேண்டும் என்று இப்போது உச்ச நீதிமன்றம் கூறியிருக்கின்றது. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, அண்மையிலேகூட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தற்போது மணி 3–48 ஆகிவிட்டது. இன்னும் ஒரு நிமிடம் இருக்கிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களின் விருப்பப்படியே விரைவில் Lokpal and Lokayukta Act இந்த அவையில் தாக்கல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார் அல்லவா? திரு. சேகர்பாபு, நீங்கள் உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது.

2018 ஜூலை 5]

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் புது* point *பேசுவதாக இருந்தால், உரையை நிறைவு செய்ய முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்) என்னுடைய துறை பற்றி அவர் பேசியதால், அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு* Lokpal and Lokayukta Act *ஐப் பற்றி பேசினார். 2013 ஆம் ஆண்டு மத்திய அரசு* Lokayukta *சட்டம் இயற்றி, அதன் அடிப்படையிலே, பல மாநிலங்களில் அந்தச் சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. 2014 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் நம்முடைய மாநிலத்தில் அதற்காக ஒரு குழு போடப்பட்டது. ஊழலை ஒழிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, மற்ற மாநிலங்களிலே அந்தச் சட்டத்தில் என்னென்ன ஷரத்துகள் உள்ளனவோ, அவற்றையெல்லாம் இந்தச் சட்டத்தில் கொண்டுவர இருக்கின்றோம். வருமா, வராதா என்றால், நிச்சயம் இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே வரும்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பி.கே. சேகர்பாபு, நான் ஏற்கெனவே உங்களிடத்தில் 3–48 மணிக்கு நீங்கள் உரையை முடிக்க வேண்டும் எனத் தெரிவித்தேன். இப்போது மணி 3–48 ஆகிவிட்டது. உங்களுடைய பேச்சு நிறைவு பெற்றது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்கு நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் இவ்வாறு சத்தம் போட்டுப் பேசாதீர்கள். அதற்கு நான் கட்டுப்பட முடியாது. (குறுக்கீடு) அவையை நீங்கள் கட்டுப்படுத்த முடியாது. திரு. சேகர்பாபு, உட்காருங்கள். (குறுக்கீடு) அவையை நடத்த எனக்கு ஒத்துழையுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. உ. தனியரசு, உங்களுக்கும் 10 நிமிடங்கள்தான். இப்போது மணி 3–48. 3–58 மணிக்குள் நீங்கள் உரையை முடிக்கவில்லை என்றால், நான் முடித்துவிடுவேன். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

[பேரவைத் தலைவர்] [2018 ஜூலை 5

வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. உ. தனியரசு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. சேகர்பாபுவுக்காக நானே நன்றி சொல்விவிடுகிறேன். உட்காருங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018–2019 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய தொகுதியின் முக்கியமான கோரிக்கைகளை முதலில் பதிவு செய்கிறேன். 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, என் தொகுதியின் பிரதான. . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே பாருங்கள். நீங்கள் எவ்வளவு நேரம் எழுந்து நின்று சத்தம் போட்டாலும் நான் ஒத்துக்கொள்வதாக இல்லை. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், உட்காருங்கள். திரு. உ. தனியரசு, நீங்கள் பேசுங்கள்.

திரு. உ. தனியரசு: 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இவ்வாறு சத்தம் போட்டால் நான் வேறு மாதிரி நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) அது நன்றாக இருக்காது. வேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. உ. தனியரசு: புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1980 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட வட்டமலை ஓடக்கரை அணை 6,000 ஏக்கர் பாசனப் பரப்புள்ள பகுதியில் கட்டப்பட்டது.

பிற்பகல் 3–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு, இங்கே பாருங்கள், இதற்குமேல் அனுமதிக்க முடியாது. உங்களை 48 நிமிடங்கள் பேச அனுமதித்துவிட்டேன். இதற்குமேலேயும் நீங்கள் வற்புறுத்துவது முறையல்ல. உங்களுக்கு 10 நிமிடங்கள் கூடுதலாகக்கூட அனுமதித்துவிட்டேன் (குறுக்கீடுகள்) இதற்குமேல் நீங்கள் அவையை. . . (குறுக்கீடுகள்) இதுமாதிரி எல்லோரும் எழுந்து பேசுவது முறையல்ல. எச்சரிக்கையாக சொல்கிறேன். அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு, நீங்கள் 10 நிமிடங்களில் உரையை முடியுங்கள்.

2018 ஜூலை 5]

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3–50 மணியிலிருந்து 10 நிமிடங்கள் அனுமதிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, 3–50 மணியிலிருந்து கணக்கிட்டு 4–00 மணிக்கு உரையை முடித்துவிடுங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானதொரு பாசனமான வட்டமலை–ஓடக்கரை அணை மிக அழகான ஓர் அணை. ஏறத்தாழ 6 ஆயிரம் ஏக்கர் பாசனப் பரப்புள்ள பகுதி. அனைத்து வசதிகளும் இருக்கின்றன. தண்ணீர் மட்டும் இல்லை. கிட்டத்தட்ட 20 ஆண்டுகளாக நீர் ஆதாரம் இல்லாத ஒரு சூழலில் அந்த அணைக்குப் புதிய நீர்நிலையை, அதாவது நீர் ஆதாரத்தை உருவாக்க வேண்டும். ஆகவே, அந்த அணைக்குப் புதிய வழிகளிலிருந்து, அமராவதி ஆற்றிலிருந்து, வேறு ஆதாரங்களிலிருந்து நீரைக் கொண்டு வந்து, அத்தப் பகுதி விவசாய மக்களினுடைய வாழ்வு செழிக்க நீராதாரத்திற்கான புதிய திட்டத்தைத் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இடமே இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேமாதிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம், மிக முக்கியமான திட்டம். ஏற்கெனவே மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளேன். மிக முக்கியமான திட்டம். 1,262 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். Phase–I, Phase–II ஆக அந்தத் திட்டத்தில் பெருமளவு வேலைகள் முடிக்கப்பட்டு, 6 மாத காலமாக நடைமுறைப்படுத்தப்படாமல், எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்தத் திட்டத்தின் பயனை மக்கள் பெற முடியாத சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் பெருமகனார் அவர்கள் சிறப்புக் கவனம் எடுத்து, வெள்ளக்கோவில், காங்கேயம் நகராட்சி, புத்தூர் பேரூராட்சி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களுக்கு தினமும் தண்ணீர் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. உ. தனியரசு] [2018 ஜூலை 5

16 வருவாய்க் கிராமங்களை உள்ளடக்கிய வெள்ளக்கோவிலுக்கு ஒரு R.I. இருக்கிறார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே இது குறித்து நான் சொல்லியிருந்தேன். R.I. அலுவலகத்திற்கு 35 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, அந்த பெரிய வருவாய்க் கிராமத்தைப் பிரித்து, முத்தூரை மையமாக வைத்து, R.I. அலுவலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும், R.I. ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டுமென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் DTCP approval பெறுவதற்கு சேலம் செல்ல வேண்டியுள்ளது. வளர்ந்து வருகிற பகுதிகளில் வீட்டுமனைகளுக்கு வீடு கட்டுவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு DTCP–தான் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்போது ஏறத்தாழ 12 ஆயிரம் மனுக்கள் நிலுவையிலுள்ளன. ஒரு வீட்டுமனையைப் பிரித்து அதில் கட்டடம் கட்டுவதற்கு 6 மாத காலம் ஆகிறது. உரிய பணியாளர்கள், அதிகாரிகள் இல்லாத சூழ்நிலையை மாற்ற சேலம் மண்டலத்தைப் பிரித்து, காங்கேயம், பல்லடம், தாராபுரம், பெருந்துறை போன்ற பகுதிகளில் நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் புதிய கிளையைத் துவக்கி, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்திய பிறகு வருவாய் சீரடைந்துள்ளதால், சென்னிமலையில் புதிய போக்குவரத்துப் பணிமனையை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் கொடி காத்த திருப்பூர் குமரனுக்கு சென்னிமலையில் அவர் பிறந்து, வாழ்ந்த இடத்தில் ஒரு நினைவு இல்லம் அமைக்க புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அரசில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புறங்கள் வேகமாக வளர்கின்றன. கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்குப் போக்குவரத்து வசதி இல்லை. கிராமங்களில் பேருந்தில் 5 பேர், 10 பேர் பயணம் செய்வார்கள். ஏதாவது துக்கம், கல்யாணம் என்று நல்லது, கெட்டதற்குப் போவார்கள். அங்கு தார்ச் சாலை உள்ளிட்ட வசதிகள்

2018 ஜூலை 5] [திரு. உ. தனியரசு]

இருந்தாலும், பேருந்து வசதி இல்லை. அந்த 5 பேர், 10 பேர், 20 பேருக்காக அவ்வளவு பெரிய பேருந்தை இயக்க முடியாது. ஆகையால், Share auto அல்லது Omni Vans–க்கு அரசு சிறப்பு அனுமதி கொடுத்து, கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்கள் மற்றும் கிராமப்புறத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்கின்ற மக்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு போக்குவரத்து வசதிக்கு சிறப்புக் கவனம் எடுத்து புதிய திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது மாதிரி எல்லாம் செய்ய முடியாது. ** நீங்கள் அது மாதிரி எல்லாம் பேச வேண்டாம். வேறு பேசுங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகைகளை உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குகிறார்கள். அவர்களுக்கு ஆண்டிற்கு 25 ஆயிரம் ரூபாய் மருத்துவப் படி வழங்கப்படும் நேர்வில், அவர்கள் மறைந்த பிறகு, அவர்களுடைய துணைவியாருக்கு 12,500 ரூபாயாவது வழங்க வேண்டுமென்று கோருகிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–55

அதேபோல், அரசு ஊழியர்கள், அதிகாரிகள், I.A.S., I.P.S., சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், மாண்புமிகு பேரவைத் தலைவர் உள்ளிட்ட அனைவருடைய ஊதியத்தையும் குறைத்து, உடல் உழைப்புத் தொழிலாளர்கள், துப்புரவுப் பணியாளர்களுக்கு இணையாக ஊதியத்தைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதுகுறித்துப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பசுமை வீடுகள் பற்றி அனைவருக்கும் தெரியும். அந்தத் திட்டத்தின்படி வீடுகள் கட்ட சாதாரண ஏழையெளிய மக்களுக்குத்தான் நிதியுதவியை அரசு வழங்குகிறது. ஆனால், 10 சதுர அடி, 20 சதுர அடி, ஒரு சென்ட்டுக்குக் கூடுதலாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. உ. தனியரசு] [2018 ஜூலை 5

வீட்டைக் கட்டினால், நிதி உதவி வழங்கப்படுவதில்லை. இந்த type–ல் கட்டினால்தான் 2,10,000 ரூபாய் தொகை வழங்கப்படும் என்று கூறுவதைத் தளர்த்தி, கூடுதலாக 50,000 ரூபாய் செலவில் கட்டினாலும், அந்த வீட்டையும் அங்கீகரித்து, அரசினுடைய உதவித் தொகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று செங்கல் கொண்டுதான் வீடு கட்டப்பட வேண்டும் என்று அவர்களை கட்டாயப்படுத்தாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், 2,10,000 ரூபாய் அரசின் மூலமாகக் கொடுக்கிறோம்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ். . . (குறுக்கீடுகள்) அவர்கள் விரும்பி வீடுகளைக் கட்டுகிறார்கள். வீடு கட்டும் நபர் கடன் வாங்கி, அவர்களின் வசதிக்கேற்ப வீடுகளைக் கட்டுகிறார்கள். அதனை நாம் ஏன் கட்டுப்படுத்த வேண்டும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, நீங்கள் விளக்கம் எல்லாம் சொல்ல வேண்டாம். பத்து நிமிடங்களுக்குள் உங்கள் உரையை முடித்து விடவும்.

திரு. உ. தனியரசு: இதோ முடித்துவிடுகிறேன். நான் ஊர் ஊராகப் போகிறேன். மக்கள் இதைத்தான் சொல்கிறார்கள். அவர்களுக்காகத்தான் நாம் பேசுகிறோம். பசுமை வீடுகளை hollow block வைத்து கட்டக் கூடாது; செங்கல்லை வைத்துதான் கட்ட வேண்டும் என்கிற விதியைத் தளர்த்தி, கூடுதலான அளவில் கட்டினாலும், hollow block வைத்து கட்டினாலும் அனுமதி கொடுக்க வேண்டும். ஏழையெளியவர்கள் குடிசை வீட்டிலிருந்து, பசுமை வீட்டிற்கு மாறுகிறார்கள். அடுத்த கட்டத்தில் இதைப் பார்த்துக்கொள்ளலாம். அதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரேஷன் அரிசி. குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசியாகக் கொடுக்காமல், பணமாக, கிலோ ஒன்றுக்கு

5 ரூபாய் என்று வைத்து, 20 கிலோவிற்கு தொகையாக 100 ரூபாய் கொடுத்தால், அவர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கும். எத்தனையோ குடும்ப அட்டைதாரர்கள் அரிசி வாங்காமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு 100 ரூபாய் கொடுத்துவிட்டு, நாம் அரிசியைப் பத்திரமாக வைத்துக்கொள்ளலாம். அதற்கான காரணத்தை நான் சொல்கிறேன். அது எப்படிப் பயன்படும் என்பது எல்லோருக்கும் தெரியும். அது குடும்ப அட்டைதாரர்களுடைய விருப்பம். எல்லோருக்கும் நான் சொல்லவில்லை, அரிசி பெற விருப்பம் இல்லாத குடும்ப அட்டைதாரர், அரிசி வேண்டாம் என்று சொல்லும் நபருக்கு அரிசியைக் கொடுக்காமல், 100 ரூபாய் பணத்தைக் கொடுத்தால், அது அந்த நபருக்கு உபயோகமாக இருக்கும். அரிசி ஏராளமாக மிச்சமாகும், பாதுகாப்பாக இருக்கும். (குறுக்கீடு) அரிசி வாங்குகிறவர்கள் வாங்கட்டும். அரிசி வாங்க விருப்பம் இல்லாதவர்களை பற்றிச் சொல்கிறேன். ஏன் என்று சொன்னால், 20 ரூபாய் மதிப்புள்ள அரிசியை விலையில்லாமல் வாங்கி, தனியாக வேறு ஒரு நபரிடம் கிலோ 5 ரூபாய் வீதம் விற்றால், அரசாங்கத்திற்குத்தான் நஷ்டம். அரசாங்கத்திடம் பணம் இருக்கிறது என்பதால் பணமாகக் கொடுக்கலாம். அதேபோன்று இலவச மின்சாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு, உங்களுக்குக் கிடைத்த பத்து நிமிட வாய்ப்பில், கோரிக்கைகளைச் சரியாக வைக்காமல் இருக்கிறீர்களே ஏன்? பார்த்துப் பேசுங்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கோரிக்கைகளைத்தான் வைக்கிறேன். அரசாங்கத்திடம்தான் சொல்கிறேன். மின்சாரத்தில் நாம் மிகை மாநிலமாக வந்து விட்டோம். மும்முனை மின்சார இணைப்பு கேட்கும் விவசாயிகள் அனைவருக்கும் அதனை வழங்க வேண்டும். மின்சார இணைப்பு கேட்டு விவசாயிகள் 5 வருடங்கள், 10 வருடங்கள் காத்திருக்கின்றனர். Tatkal திட்டத்தில்கூட, 1–7–2018–விருந்து மின்சார இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். 3 இலட்சம் ரூபாய் அல்ல, 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய்கூட விவசாயிகள் கட்டி விடுவார்கள். எவ்வளவு விவசாயிகள் tatkal முறையில் மின் இணைப்பு கேட்கிறார்களோ, அத்தனை விவசாயிகளுக்கும், காத்திருப்போர் பட்டியலில் உள்ள விவசாயிகளுக்கும், தமிழகத்தில் வாழ்கிற அனைத்து விவசாயப்

[திரு. உ. தனியரசு] [2018 ஜூலை 5

பெருங்குடி மக்களுக்கும் தடையில்லாமல் மும்முனை மின்சார இணைப்புகளை உடனே வழங்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒலிபெருக்கி. பண்டிகைக் காலங்களில், இந்து மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், முஸ்லிம் மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், தெருவிற்குத் தெரு ஒலிபெருக்கியைக் கட்டி, குழந்தைகள் மாலை நேரத்தில் வீட்டுப் பாடங்களைப் படிக்க முடியாமல், tuition படிக்க முடியாமல், ஆளாளுக்கு, எந்த நேரத்திலும் கட்டுப்பாடு இல்லாமல் ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கு, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Marina Beach–ல் உள்ள புல்வெளி நன்றாகப் பராமரிக்கப்படுகிறது. வெளிநாட்டவர் மற்றும் உயர் அதிகாரிகள் அங்கு வந்து செல்கிறார்கள். இரவு நேரங்களில் மேய்ச்சல் நிலமாக கால்நடைகள் வந்து Marina Beach–ல் மேய்கின்றன. இரவு 10–00 மணிக்குச் சென்று பார்த்தால், எருமை, மாடுகள் அங்கு மேய்கின்றன. Marina Beach–ஐ எவ்வளவு சிரமப்பட்டு அழகுபடுத்துகிறோம்? இதை ஒழுங்குபடுத்தி, புல்வெளியை நன்றாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏற்கெனவே, திரு. இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், பிச்சைக்காரர்கள், வெளி மாநிலங்களின் பிச்சைக்காரர்கள், தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பதை அனுமதிக்காமல், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் பிச்சை எடுத்தால், அவர்களையும் தடுத்து, பிச்சை எடுக்கும் நிலையை மாற்றி, தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லை என்ற அளவில், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மறு வாழ்வு தர உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைவாசிகள் விடுதலையைப் பொறுத்தவரை, ஏற்கெனவே அவர்களை விடுதலை செய்திருக்கிறீர்கள். அதனை மேலும் கருணையோடு பரிசீலித்து சிறைவாசிகளை விரைவாக விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2018 ஜூலை 5] [திரு. உ. தனியரசு]

தமிழக காவல் துறையின் அமைச்சுப் பணியாளர்களுடைய கோரிக்கைகளான பதவி உயர்வு, வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு உள்ளிட்டவற்றை கருணையோடு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், காவல் துறையினரின் பணி நேரத்தை, 8 மணி நேரமாக அல்லது 10 மணி நேரமாகக் குறைத்து அல்லது சுழற்சி முறையில் விடுமுறை விட்டு அவர்களுடைய மன உளைச்சலைக் குறைக்க வேண்டும்.

பழைய திரைப்படங்கள், எம்.ஜி.ஆர். அவர்களின் படம், அம்மா அவர்களின் படம், சிவாஜி அவர்களின் படம் என நன்றாக ஓடிக்கொண்டிருந்தன. திரைப்பட வரியாக வாரத்திற்கு 1,500 ரூபாய் கட்டிய நிலை மாறி, 25,000 ரூபாய் கட்டினால் 5 வருடத்திற்கு எல்லாம். . .

பிற்பகல் 4–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தனியரசு, உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துவிட்டது. 4–00 மணியாகிவிட்டது, உரையை முடியுங்கள்.

திரு. உ. தனியரசு: எம்.ஜி.ஆர், ஐயா மற்றும் கருணை, அன்போடு, உலகத்தில் இருக்கக்கூடிய அரசியல் தலைவர்களுக்கெல்லாம் வழிகாட்டியான அம்மா அவர்களுடைய திரைப்படங்களை எல்லாம் பார்த்து ரசிப்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் அரசு வரியைத் தள்ளுபடி செய்து, டிக்கெட்டுகளை பழைய விலைக்கே கொடுத்து கிராமப்புற மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்களின் covering letter–ல் அந்தந்தத் துறை மாண்புமிகு அமைச்சரின் பெயர் ஆங்கிலத்தில் மட்டும்தான் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள நமது மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு முதலமைச்சர் எல்லோரும் ஏழைகளுக்குக் கடிதம் கொடுக்கிறார்கள்; அதில், அவர்களுடைய பெயர்கள் ஆங்கிலத்தில் மட்டும்தான் இருக்கின்றன. அதற்குக் கீழே, அதற்குச் சமமாக அல்லது அதற்கு மேலே மாண்புமிகு அமைச்சரின் பெயர் மற்றும் துறை தமிழிலும் பொறிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதோடு உரையை முடியுங்கள்.

[2018 ஜூலை 5

திரு. உ. தனியரசு: முடிந்துவிட்டது. புரட்சித் தலைவி அம்மாவினுடைய மக்கள் நல அரசு, தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கிற அரசு. ஏழையெளிய சாமானிய மக்களின் கண்ணீரை, துன்பத்தை, துயரத்தைத் துடைத்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நல்ல நேரத்தில் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு தாராளமாக வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அண்ணல் மகாத்மா காந்தியின் திருவுருவத்தை மேலே பார்க்கிறேன்; அப்படியே நம்முடைய பேரவைத் தலைவர் ஐயா அவர்களின் உருவத்தைப் பார்க்கிறேன். அதே கருணை, அதே அன்பு, அதே எளிமை, அதே சகிப்புத் தன்மை, எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும், எவ்வளவு கடுமையான சொற்களால் வசை பாடினாலும், சிரித்த முகத்தோடு மக்களாட்சி தத்துவத்திற்கும், சட்டமன்றப் பேரவையின் மரபுகளுக்கும், விதிகளுக்கும் மெருகேற்றுகின்ற வகையில் அழகாக நீங்கள் சபையை நடத்துகிறீர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அழகான இந்த ஆட்சியை சோதனைகளையும், தடைகளையும் தாண்டி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த முறை உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், பார்த்துக்கொள்ளலாம். உட்காருங்கள், நன்றி. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பசுமை வீட்டைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தியாவிலேயே 300 சதுர அடியிலே ஓர் அற்புதமான பசுமை வீட்டைக் கட்டித் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏழை மக்கள் கூடுதல் சதுர அடி கொண்ட வீடாகக் கட்டும்போது அதை allow பண்ணலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் பேசுவதைக் கேட்கும்போது உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாக, உடனடியாகப் பரிசீலிக்க வேண்டும் என்று எங்களிடம் கூறி, அதை சொல்லச் சொன்னார்கள். அது கண்டிப்பாக வருங்காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும்.

2018 ஜூலை 5] [திரு. எஸ். பி. வேலுமணி]

இந்த 5 ஆண்டு காலத்தில் மட்டும், பல்வேறு திட்டங்களில், பசுமை வீடுகள், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், இந்திரா குடியிருப்பு, 'தானே' வீடுகள், நெசவாளர் வீடுகள் என்று 12,51,170 வீடுகளும், அதேபோன்று இந்த 7 ஆண்டு காலத்தில் மொத்தம் 14,10,707 வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அனைத்துப் பகுதிகளிலும் அதிகமான வீடுகளை நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, அரிசி வேண்டாதவர்களுக்கு அரிசிக்குப் பதிலாக பணமாகக் கொடுக்கலாம் என்கிற ஒரு கருத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்தவரை, அது அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம். பொது விநியோகத் திட்டத்தில் பொருட்களை வழங்கும் திட்டத்தைத்தான் நாம் செயல்படுத்தி வருகிறோமேதவிர, பணமாக வழங்குவது நடைமுறைக்கு சாத்தியம் ஆகாது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைய விவாதம் இத்துடன் முடிவுற்றது. மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் பதிலுரையும், 9–7–2018 ஆம் நாள் திங்கட்கிழமை அன்று தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

11. அரசினர் தீர்மானம்

பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் அவர்கள்.